# ஆசிரியர் வழிகாட்டி

## கத்தோலிக்க திருமறை

(2026 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கானது)

# தரம் 1

முன் பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை,
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk
அச்சிடுதல் மற்றும் விநியோகம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# கத்தோலிக்க திருமறை

## ஆசிரியர் வழிகாட்டி

**(2026 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்)**

# தரம் 1

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

கத்தோலிக்க திருமறை
ஆசிரியர் வழிகாட்டி
தரம் 1

முதலாம் பதிப்பு - **2026**

©தேசிய கல்வி நிறுவகம்

பதிப்பு - தேசிய கல்வி நிறுவகம்
ISBN

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

## பணிப்பாளர் நாயகம் வழங்கும் செய்தி

இலங்கைப் பொதுக்கல்வியின் இத்தகைய மறுசீரமைப்பு ஒவ்வொரு கற்போனதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான செம்மையான பாதையை இலக்காகக் கொண்டுள்ளது.

தேர்ச்சி மையக் கற்றல், பரந்துபட்ட சிந்தனை, ஆக்கபூர்வமான ஆற்றுகை, இருபத்தொன்றாம் நூற்றாண்டுக்குரிய ஆற்றல்கள், ஆழ்ந்த தொழினுட்ப அறிவு, நல்லொழுக்கம் கொண்ட நற்பிரசை போன்ற பல்வேறு குணநலன்களில் அவதானம் செலுத்துவதற்கு ஏதுவானவகையில் கலைத்திட்டச் செயலொழுங்கில் நவீனமயமாக்கப்பட்ட கற்றல் கற்பித்தல் முறைமை மற்றும் கணிப்பீட்டுமுறை ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

கல்வியியலாளர்கள், துறைசார்கல்வி அறிஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் பல்வகைப்பட்ட பங்குதாரர்கள் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட கலந்துரையாடலின் அடிப்படையில் தேசிய கல்வி நிறுவகத்தால் 2026 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் 1 மற்றும் 6ஆம் தரங்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட இக்கலைத்திட்டம் மற்றும் அதற்குரிய கற்றல் சாதனங்களின் பண்புத் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக விசேட ஆர்வத்துடன் செயலாற்றிய கௌரவ கல்வி அமைச்சர், கல்விச் செயலாளர், கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்கள், பாடப் பொறுப்பதிகாரிகள், பரீட்சை ஆணையாளர் நாயகம் மற்றும் அவரது ஆளணியினர், கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் மற்றும் அவரது ஆளணியினர் ஆகியோர் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது.

அத்துடன், இவ்விடயத்தில் விசேட அர்ப்பணிப்புடன் செயலாற்றிய தேசிய கல்வி நிறுவகத்தின் நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஈடுபாட்டுடன் செயற்பட்ட கல்வி அலுவல்கள் சபை அங்கத்தவர்கள் அனைவரையும் மனப்பூர்வமாக நன்றியுடன் நினைவு கூருகின்றேன். இதனை வெற்றிகரமாக சாத்தியப்படுத்துவதற்கு முன்னின்று அயராது உழைத்த தேசிய கல்வி நிறுவகத்தின் அனைத்து ஆளணியினருக்கும் தேசத்தின் கௌரவம் உரித்தாக வேண்டுமென நம்புகின்றேன்.

பேராசிரியர் மஞ்சுளா விதானபத்திரன
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

எமது நாட்டின் சகல பாடசாலைகளின் கலைத்திட்டத்திற்கான இனங்காணப்பட்ட இலகுவான கற்றல் துறைகள் காலதத்திற்கு காலம் மாற்றமுறும் நாட்டின், உலகின் பேண்தகு அபிவிருத்தியின் சவால்களை வெற்றிக் கொள்வதற்கும் நாட்டு மக்களிடம் காணக்கூடிய இயலுமையையும் மேலெலச் செய்கின்றது. கற்றல் - கற்பித்தல் செயன் முறையை நவீன காலத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்துவதுடன் புதிய பாடங்கள் கலைத்திட்டத்தினுள் அறிமுகம் படுத்தப்படுகின்றது. அத்துடன் மாற்றங்களுக்கமைய கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளும் காலத்திற்கு ஏற்ப அபிவிருத்தி அடையும். அதற்கேற்ப 2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் புதிய கல்விச் சீர்த்திருத்த கலைத்திட்டத்திற்கு அமைவாக ஒவ்வொரு பாடத்திற்கும் கற்றல் சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

2026ஆம் ஆண்டில் தரம் 1, 2027 ஆம் ஆண்டில் தரம் 2, 2028 அம் ஆண்டு தரம் 3, 2029 ஆம் தரம் 04 மற்றும் 2030 தரம் 05 ஆகிய ஆரம்பபிரிவு தரங்களுக்கு புதிய கல்வி மறுசீரமைப்பு தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தப்படும். ஆரம்ப கல்வித்துறை மாணவர்களுக்கான செயல்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கு அவசியமான வழிகாட்டல்களை ஆசிரியர் வழங்குவார். மேலும் ஆசிரியர்களுக்கான ஆலோசனைகள் ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் பாடம் தொடர்பான அறிவைப் பெறுவதோடு பெற்ற அறிவினை ஏற்ற சந்தர்ப்பத்தில் பிரயோகிப்பதற்கான திறன் விருத்திக்கு இக்கலைத்திட்டம் உதவியாக அமையும் என்பது எமது நம்பிக்கையாகும். 21 ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான ஆற்றல் மேம்பாட்டுக்கும் அதனூடாக மாணவர் ஆளுமை விருத்திக்கும் இங்கு அறிமுகப்படுத்தப்படுகின்ற கலைத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள செயற்பாடுகள் உறுதுணையாக அமையும்.

புதிய கலைத்திட்ட சீரமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கான முதன்மைப் பணிகளை மேற்கொண்ட கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகங்கள் வழங்கிய சேவையைப் பெரிதும் போற்றுகின்றேன். மேலும் இக்கலைத்திட்டத்துக்கான கற்றல் சாதனங்களைத் தயாரிப்பதில் பங்களிப்பு வழங்கிய நிறுவனத்தின் அனைத்து ஆளணியினருக்கும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பணிப்பாளர்கள் ஆகியோருடன் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் பல்வேறுவகையிலும் வழங்கிய உதவிகளும் இக்கற்றல் சாதனங்கள் பண்புத்தரம் கொண்டதாகவும் உயரிய மேம்பாடு கொண்டதாகவும் மிளிர்வதற்கு உறுதுணையாக இருந்தது என்பதை மகிழ்ச்சியுடன் நினைவுபடுத்துகின்றேன்.

கலாநிதி எஸ்.ஏ.டி சமரவீர
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம, இலங்கை

வழிகாட்டல் ஆலோசனை :

ஆலோசனை:

கலாநிதி மஞ்சுளா விதானபதிரண, பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.

கலாநிதி தர்ஷன சமரவீர, பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான துறை,
தேசிய கல்வி நிறுவகம்.

திருமதி. ஆர்.எம்.கே. டி சில்வா, பணிப்பாளர்,
முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் திணைக்களம்,
தேசிய கல்வி நிறுவகம்.

அருட்பணி. எல்.பி.கே.எல். பெர்ணாந்து, உதவி விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்.

அருட்பணி. ரொயிஸ்டன் பீரிஸ் புள்ளே, உதவி விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்.

அருட்சகோதரி.எஸ்.வி. கிருஷாந்தி பெர்ணாந்து,
திருக்குடும்பக் கன்னியர் மடம், தெஹிவலை

அனுமதி :

கல்வி சார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம்.

பாட இணைப்பாக்கம்:

திருமதி லக்மாலி ஆனந்த் கொட, உதவி விரிவுரையாளர்,
தேசிய கல்வி நிறுவகம்.

எழுத்தாளர் குழு:

திருமதி.பீ.டீ.பிலிஸியா அயரின், வலயக் கல்வி அலுவலகம், களனி
திருமதி.பி.டபிள்யு.வி. சியாமளி பீரிஸ், மேமா/ கள/ பிலபிட்டிய,
ஜனாதிபதி வித்தியாலயம், களனி

திருமதி.டீ.எம்.பி.மதுராவல, வலயக் கல்வி அலுவலகம், மினுவாங்கொடை
திருமதி. கே.டீ.பி. கருணாரத்ன, திருச்சிலுவை வித்தியாலயம், கம்பஹா
திருமதி.எச்.பீ.சி.நிலந்தி, புனித அன்னம்மாள் மகளிர் ஆரம்பப் பாடசாலை, வத்தளை

தமிழ் மொழியாக்கம் :

ஏ. எம். டி. ஏ. ஸ்ரீதரன், ஆசிரியர் (ஓய்வுநிலை)

சரவைநோக்கு:

முதுமாணி அருட்சகோதரி இராஜரட்னம், (SCJM) இணைப்பாளர் - தமிழ் பிரிவு -
தேசிய மறைக்கல்வி திருவிவிலியப்பணி நடுநிலையம், கொழும்பு 8

கணினியாக்கம்

ரட்ணராஜா தனுஷா
வரைகலை வடிவமைப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்.

**அறிமுகம் - சமயம் மற்றும் ஒழுகலாறு - ஆரம்பக்கல்வி**

பன்முக பண்பாட்டுக் கலாசாரங்கள் கொண்ட சமூகத்தினருக்குச் சமயம் கற்பித்தல் என்பது பிரச்சினைக்குரிய செயற்பாடாகும். பல்வேறுபட்ட சமயங்களின் நம்பிக்கைகள் மற்றும் அதற்கான பிரயோக நடவடிக்கைகளில் வேறுபாடுகள் உள்ளன. அதனால் அந்தந்தச் சமய நிறுவனம் சார் ஒழுங்கமைப்பில் பல்வகையான வழிபாட்டு முறைகளைப் பல்வேறுவிதமாக கடைப்பிடிப்பதன் காரணமாக அவர்கள் அனைவரையும் ஒரே வலையமைப்பிற்குள் இணைப்பது இயலாத காரியமாகின்றது. தேசிய பொருளாதாரம், அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கத்தில் அவை எதிர்மறையான பல விளைவுகளை உருவாக்குகின்றன. எனவே, மாற்றுவழியில் இதற்கான தீர்வை மேற்கொள்ள வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது. அதற்காக, தேசிய கல்விப் பரப்பில் சமயம் மற்றும் விழுமியம் சார் கல்வியானது எவ்வாறு உதவியாக அமைந்துள்ளது என்பதை தெளிவுபடுத்துவது தேசிய பாடத்திட்ட கட்டமைப்பின் பிரதான குறிக்கோளாகும்.

சமயம் மற்றும் ஒழுகலாறு சார் கல்வியின் இறுதி நோக்கமாவது; பிள்ளையின் வயது வரம்பிற்கேற்ப சமயக் கல்வியைப் பெற்றுக்கொடுப்பதாகும். எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அவர்களது அறிவு, இதயம், உறுப்புகள், உள்ளம் ஆகியவற்றுடன் சமநிலை கொண்ட மனப்பாங்கினை விருத்தி செய்வதன் ஊடாக எதிர்கால உலகை வெல்லக்கூடிய ஒழுக்கம் கொண்ட ஆக்கபூர்வமான பிரஜையை உருவாக்கி சமூகத்திற்கு முன்வைக்க வேண்டியது இன்றியமையாத தேவையாகின்றது.

பிரதான ஐந்து சமூக - சமய எண்ணக்கருக்களின் கீழ் கட்டமைக்கப்பட்டுள்ள இந்த சமயம் மற்றும் ஒழுகலாறு சார் கல்விக்கான பாடத்திட்டச் சட்டகத்தில் கல்வி விருத்தியைப் போலவே தனியாள் விருத்திக்கும் அவசியமான பிரதான திறன்களை மேம்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கிணங்க வருங்காலச் சவால்களுக்கு உத்வேகத்துடனும் தைரியத்துடனும் முகங்கொடுக்கக்கூடிய வினைத்திறனுடைய நபர்களை சமூகத்திற்கு வழங்குவதற்கு ஏற்ற அவசியமான அடித்தளத்தை ஆரம்பக்கல்வியில் இருந்தே கட்டியெழுப்ப வேண்டும் என்பதே இப்பாடத்திட்டச் சட்டகத்தின் எதிர்பார்ப்பாகும்.

ஆரம்பக்கல்விக்கான கத்தோலிக்க திருமறை பாடத்திட்டத் தயாரிப்பின்போது உரிய தரங்களில் கற்கின்ற மாணவர்களின் வயது மட்டம், முதிர்ச்சி, மொழியாற்றல், இரசனை, விருப்பு ஆகியன தொடர்பாகக் கவனம்செலுத்தப்பட்டுள்ளது. உரிய கற்றல் பேறுகளை எய்தும் பொருட்டு, அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் அனுபவங்களைப் பெறுகின்ற விதமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு சிறு பிள்ளைக்கு கத்தோலிக்க திருமறையை மிகவும் பொறுப்புடன் அவதானமாகக் கற்பிக்க வேண்டும். சிறுபராயத்திலே ஏதேனும் மிகச் சிறியதொரு விடயம் தொடர்பாக தவறான புரிதல் ஏற்படுமாயின் அது அப்பிள்ளையின் முழு வாழ்க்கையில் மட்டுமல்ல நித்திய வாழ்க்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். ஆகவே கற்பிக்கும் ஆசிரியர்கள் தமக்கு சந்தேகமான அல்லது புரியாத விடயங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றைத் தெளிவுபடுத்திக்கொண்டு சரியான விளக்கத்தை பிள்ளைகளுக்கு அளிப்பதோடு தாமும் அதற்கென முன்கூட்டியே தம்மை தயார் செய்து கொள்ள வேண்டும்.

பிள்ளைகளுக்கு முன்மாதிரியாகத் தானும் கிறிஸ்துவோடு ஒன்றித்து அவரைப் பின்பற்றி வாழ வேண்டியது ஆசிரியர்களது கடமையாகும். ஒவ்வொரு ஆசிரியரும் முறையாக கால அட்டவணை தயாரித்து அதன்பிரகாரம் செயற்படும்போது பிள்ளைகளுக்கு மிகவும் ஏற்ற மகிழ்ச்சியான கற்றல் சூழல் ஒன்றை உருவாக்கிக்கொள்ள முடியும்.

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் வழங்கும் செய்தி | iii |
| முன்னுரை | iv |
| கலைத்திட்ட பங்களிப்பு | v |
| அறிமுகம் | vi |
| உள்ளடக்கம் | vii |
| கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு | xiii - xviii |
| எண்ணக்கரு - முதலாம் தவணை | 1 |
| எண்ணக்கரு - இரண்டாம் தவணை | 26 |
| எண்ணக்கரு - மூன்றாம் தவணை | 50 |

**கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு**

ஆரம்பக்கல்வித் தரங்களில் கிறிஸ்தவ பாடத்தைக் கற்பிக்கும்போது சிறு பிள்ளைகள் விரும்பக்கூடிய சமய வாழ்வு மற்றும் அது தொடர்பான செயற்பாடுகளைப் பெருமளவில் பயன்படுத்த வேண்டும். வழிபாடு, சமயச் சுற்றுலா, தேவாலயங்களைத் தரிசித்தல் என்பன இவ்வொழுங்குமுறையில் பிரதான இடம் வகிக்கின்றன. மேலும், உவமைகள், சுயசரிதை, மீட்பின் வரலாறு தொடர்புபட்ட கதைகளை இரசிக்கும் விதத்தில் முன்வைக்கவேண்டும். இவை தொடர்பான பாடல்கள், நடிப்பு, சித்திரம் தீட்டுதல், போன்ற அழகியல் செயற்பாடுகளில் மாணவரை அதிகளவில் ஈடுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். அதனால் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு மாணவருக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய அழகிய அனுபவமாக அமைவதோடு, கத்தோலிக்க திருமறையைக் கற்றுக்கொள்வதில் அதிக விருப்பமும் மாணவர் மத்தியில் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

**பாடசாலைக் கொள்கை மற்றும் வேலைத்திட்டம்**

பாடசாலைக் கலாசாரத்துடன் தொடர்புடைய வேலைத்திட்டங்களில் கத்தோலிக்க திருமறை பாடத்துக்குரிய எண்ணக்கருவைப் அதிகளவில் கட்டியெழுப்ப முடியும். பாடசாலைக் கலாசாரத்தில் இத்தகைய எண்ணக்கருவைக் கட்டியெழுப்பும் புதிய அம்சங்களின் உருவாக்கம் தொடர்பில் அதிபர்களது விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆரம்பப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் காலை வழிபாட்டு முறைமை இதில் பிரதான இடம் பெறுகின்றது. இந்த வேலைத்திட்டம் முதலாம் தரத்தில் மிகவும் எளிமையான முறையில் ஆரம்பிக்கப்பட்டு ஐந்தாம் தரம் வரையில் படிப்படியாக விருத்தி செய்யப்பட்டு தொடர்ந்து பல்வேறு அம்சங்களை இணைத்துக்கொள்ள முடியும்.

ஆசிரியர் மாணவர்களைத் தவணைக்கு ஒருதடவையேனும் தேவாலயத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அங்கு இடம்பெறுகின்ற வழிபாட்டு விதிமுறைகள் மாணவர் மத்தியில் ஆர்வத்தையும் பக்தியையும் உருவாக்கும். இச்செயற்பாடுகளால் பொதுநிலையினர் மற்றும் துறவறம் காப்பவர்கள் இடையே தொடர்பாடல் விருத்தியடைவதன் ஊடாகச் சிறந்த சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கும் அது ஏதுவாக அமைகின்றது.

தனியாள் தூய்மை, ஒழுக்கம், கருணை, இரக்கம், ஆசீர்வாதம் என்றவாறு கட்டியெழுப்பப்படும் சமத்துவம், நல்லிணக்கம், ஒத்துழைப்பு ஆகிய பண்புகளால் பாடசாலைக் கலாசாரம் ஊட்டம் பெறுகின்றது. அது போன்ற கலாசாரத்தில் சமயம் மற்றும் ஒழுகலாறு போன்ற விடயங்களில் எதிர்பார்க்கப்படும் அவசியமான கற்றல் எண்ணக்கருக்களை உறுதிசெய்து கொள்வது மிக இலகுவாக அமையும். அவ்வாறான சூழ்நிலை ஏற்படும்போது பாடம் தொடர்பாகக் கற்றுக்கொண்ட அனைத்தையும் பிரயோகமுறையில் செயற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகும்.

**கணிப்பீடு**

ஆரம்பக் கல்வித் தரங்களில் எழுத்துச் சோதனைகளை விட பிரயோகச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீடு பிரதான இடம் பெறுகின்றது. அவதானிப்பு, கண்டறிதல், திருத்தலப் பயணங்கள், அபிநயம், நாடகம், பொம்மலாட்டம், உரையாடல், வாய்மூல வினாக்கள் போன்ற கணிப்பீட்டு முறை என்பன இதற்கு ஏற்புடையதாகும்.


**சமயம் மற்றும் ஒழுகலாறு சார் பாடத்தின் நோக்கம்**

நிலைபேறு கொண்ட சமாதான மேம்பாட்டை எய்துவதற்காக பரந்துபட்ட விளக்கம் உடையவரும் பல்வகைமைக்கு மதிப்பளிக்கக்கூடிய மனவெழுச்சியுடன் சமநிலை பேணுபவரும் ஜனநாயகம் மற்றும் ஒழுக்கம் பேணுபவருமான உலகளாவிய ரீதியிலான பிரசையொருவரை உருவாக்குதல்.

**சமயம் மற்றும் விழுமியக்கல்வி பாடக் கற்பித்தலில் எதிர்பார்க்கப்படுபவை**

1. அறிவு, ஒழுக்கம், மனவெழுச்சி என்றவகையில் சமநிலை கொண்ட பிரஜைகளை உருவாக்குதல்
2. மனித பெறுமானங்களின் அடிப்படையில் அமைந்த பல்வேறு பழக்க வழக்கங்கள், பாரம்பரியங்களை புரிந்துகொண்டு மதிப்பளித்தல்
3. தமது சூழலில் காணும் வேறுபாடுகளை தர்க்கரீதியாக ஏற்றுக்கொண்டு அதற்கு மதிப்பளித்து சமூக நல்லிணக்கத்தை வலுவூட்டல்
4. உள்ளக சமாதானம் மற்றும் ஆன்மீக மகிழ்ச்சியை அனுபவித்தல், பகிர்ந்து கொள்ளல்
5. தனியாள் மற்றும் பல்வேறு சமூகங்களுக்கு இடையில் சுகாதாரம் பற்றிய தொடர்பாடலை மேம்படுத்தல்
6. சமூக - கலாசார மற்றும் சூழல்நேயம் கொண்டவர்களுடன் பங்களிப்புச் செய்து, சவால்களை எதிர்கொண்டு நேர்மறையான முறையில் செயலாற்றல்

# சமயம் மற்றும் ஒழுகலாறு பாடத்தின் அத்தியாவசிய கற்றல் எண்ணக்கரு



| சமயம் மற்றும் ஒழுகலாறு சார் கல்வியின் பிரதான அடிப்படை எண்ணக்கரு | |
|---|---|
| நடத்தை மேம்பாடு | எந்தவொரு சவாலையும் வெற்றி கொள்வதற்கு ஆற்றலுடன் கூடிய நேர்சிந்தனையை ஊட்டம் பெறச் செய்தல் போன்று உடல் உளம் சமூகம் சார்ந்த சிந்தனைகள் நிறைந்த ஆளுமை விருத்தியுடைய நபரை உருவாக்குதல். |
| சமூக மற்றும் கலாசார தொடர்பாடல் | சமயம் மற்றும் கலாசார வேறுபாடுகளின்றி அனைவருடனும் ஒன்றிணைந்து மற்றும் ஏனையோரை அறிவுபூர்வமாக, நேயத்துடன் ஏற்றுக்கொள்வதோடு மற்றைய சமூக கலாசாரப் பின்னணி தொடர்பாகப் புரிந்துணர்வுடன் செயற்படுகின்ற ஆற்றல். |
| சூழல் நேயம் | சூழல் நேயம் வாயிலாக ஒருவருக்கு அவரது சுற்றாடல் தொடர்பான விபரங்களைத் தெரிந்துகொள்வதற்கும் தயார்ப்படுத்துவதற்கும் ஏற்ற திறமை தொடர்பாக விளக்கிக் கூறுவார். இது அனைத்து சமயக் கொள்கைகளிலும் காணக்கூடிய பிரதான பண்பாகும். இது தீர்க்கமான ஒரு காரணியாக அமைவது ஒருவருக்கு பல்வேறுபட்ட சூழல் நிலைமைகளுக்கு தம்மை ஏற்புடைமை ஆக்கிக்கொள்வதற்கு இடமளிப்பதாகும். |
| நன்னடத்தை விழுமியங்கள் மற்றும் புரிந்துணர்வு | சிறப்பான சமூக நடவடிக்கைகளுக்கு அவசியமான ஏற்புடைய சமூகம், கலாசாரம் மற்றும் சமயப் பெறுமானங்கள், கொள்கைகள், நன்னடத்தை, விழுமியங்கள் மற்றும் சமத்துவம் என்றவாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்வதாகும். |
| பலம் ஆரோக்கியம் மற்றும் நற்பழக்கவழக்கம் | உடல் மற்றும் உள சமநிலையைக் கடைப்பிடித்து மனச்சோர்வற்ற ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதற்கு எப்போதும் நல்ல நினைவாற்றலுடன் செயற்படுதல். |

| சமயம் மற்றும் ஒழுகலாறு<br>ஆரம்பக் கல்விக்கான அடிப்படை எண்ணக்கரு விபரங்கள் | |
|---|---|
| நடத்தை மேம்பாடு | ஆசிரியர் மற்றும் மூத்தவர்களின் வழிகாட்டுதலின் கீழ் "சமயம்" எனும் எண்ணக்கருவை அறிந்து தமது சரிதை மற்றும் நடத்தையை சரியாக வடிவமைத்துக் கொள்ளும் எளிய சமய செயற்பாடுகளில் ஈடுபடுவர். |
| சமூக மற்றும் கலாசார புரிந்துணர்வு | தாம் வாழும் பல்வகைமை சார் சமயச் சூழலில் இடம்பெறுகின்ற சமயம் சார்ந்த விழாக்கள், நடையுடை பாவனைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவை தொடர்பான அனுபவங்களைப் பெற்று கலாசார பல்வகைமை தொடர்பான விளக்கத்துடன் அனைவருடனும் ஒன்றிணைந்து செயற்படுவார். |
| சூழல் நேயம் | வாழ்க்கை என்பது சுற்றுச் சூழலுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றமையை சமயத்தின் ஊடாகப் புரிந்துகொண்டு, சூழல் நேயத்துடன் செயலாற்றுவார். |
| நன்னடத்தை, விழுமியங்கள் மற்றும் புரிந்துணர்வு | சமயம் சார்ந்து நடைபெறுகின்ற விதிமுறைகள், சட்டதிட்டங்கள், வணக்கமுறைமை மற்றும் பிரயோகிக்கும் விசேட சொல்லாடல் தொடர்பாக புரிந்துணர்வுடன் செயற்படுவார்.சமயம் சார்ந்த தலங்களுக்கு ஏற்றவாறு உடையணிதல் மற்றம் சரியான நடத்தையை மேற்கொள்வதற்கு ஆவன செய்வார். |
| பலம் ஆரோக்கியம் மற்றும் நற்பழக்கவழக்கம் | அன்றாட செயற்பாடுகளை உறுதியுடனும் நினைவாற்றலுடனும் (Mind fully) செய்வதற்கு பயிற்சி பெற்று, தமது நடவடிக்கைகளைக் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் செய்வார். தமது அன்றாட நடத்தைக் கோலத்தை மேற்கொள்வதற்கு ஏற்ற ஆரோக்கிய நற்பழக்கங்களைக் கடைப்பிடிப்பார். |

| தரம் 1 - சமயம் மற்றும் ஒழுகலாறு பாடச் சட்டகம் | | | |
|---|---|---|---|
| **எண்ணக்கரு** | **கற்றல் பேறு** | **செயலாற்றல் தர நியமங்கள்** | **கணிப்பீட்டு நியதி** |
| நடத்தை மேம்பாடு | 1. நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற முக்கியமான சமய வழிபாட்டு ஒழுக்க விதிமுறைகளையும் சமய அடிப்படையில் தமது அறநெறி பற்றிய எண்ணக்க ருக்களையும் இனங்காண்பார். | 1.1 சமயம் தொடர்பான விசேட சந்தர்ப்பங்களில் கலந்துகொண்டு அனுபவம் பெறுவார். | 1.1.1 பங்குபற்றுதல் |
| | | 1.2 சமயநெறி தொடர்பான விசேட சமய வழிபாட்டு வழிமுறைகளைப் பொருத்தமான வேளையில் பிரயோகிப்பார். | 1.2.1 விசேட சமய அனுட்டானங்களை இனங்காணல்.<br>1.2.2 ஏற்ற சந்தர்ப்பத்தில் அவற்றைப் பயன்படுத்தல். |
| | | 1.3 சமயநெறி தொடர்புபட்ட பிரதான குறியீடுகள் மற்றும் சின்னங்களை இனங்காண்பார். | 1.3.1 குறியீடுகள், சின்னங்களை இனங்காணல். |
| | | 1.4 சமய பாடம் பற்றிய விளக்கம் பெற்று அதனைப் பிரயோகிப்பார். | 1.4.1 சமய பாடநெறி தொடர்பாக விளக்கமாக அறிந்து கொள்ளல்.<br>1.4.2 சமய பாடத்தைப் பிரயோகித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | 2. சமய அறிஞர்கள் / சமயத் தோற்றுவிப்பாளகள் தொடர்பான வரலாறு /சமயம் சார்ந்த கதைகள் மற்றும் விவிலியத்தில் உள்ள கதைகள், பாடல்கள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங்காண்பார். | 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1. சமயம் சார்ந்த கதைகளைச் செவிமடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | 2.2 சமயம் சார்ந்த கதைகளை அடிப்படையாகக் கொண்டு சமய அறிஞர்களின் விசேட பண்புகளைக் கூறுவார். | 2.2.1 விசேடமான பண்புகளைக் கூறுதல். |
| | | 2.3 சமயம் சார்ந்த கதைகளின் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகளைக் கூறுவார். | 2.3.1 முன்மாதிரிகளைக் கூறுதல். |
| | | 2.4 திருவிவிலியத்தில் உள்ள கதைகள், பாடல்களை செவிமடுத்துத் தாளத்துடன் இசைப்பார். | 2.4.1 திருவிவிலியத்தில் உள்ள கதைகள், பாடல்களை செவிமடுத்தல><br><br>2.4.2 தாளத்துக் கேற்றவாறு பாடுதல் |
| | | 2.5 திருவிவிலிய கதைகள், பாடல்களை அடிப்படையாகக் கொண்டு பெற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகளைக் கூறுவார். | 2.5.1 முன்மாதிரியைக் கூறுதல் |

| | | | |
|---|---|---|---|
| சமூக, கலாசார உணர்வு | 3. சமய வணக்கத் தலங்களை இனங்கண்டு அவை பற்றி அறிந்து அங்கு கௌரவமான முறையில் நடந்துகொள்வார். | 3.3.1 சமயத் தலங்களை இனங்கண்டு அவற்றின் பெயர்களைக் குறிப்பார். | 3.1.1 இடங்களை இனங்காணல்.<br><br>3.1.2 இடங்களைப் பெயர் குறித்தல் |
| | | 3.2 சமய வணக்கத் தலங்களில் உரிய விதிமுறைகளுக் கேற்ப நடந்துகொள்வார். | 3.2.1 சமய அறநெறிக்கேற்ப நடத்தையை மேற்கொள்ளல். |
| | | 3.3 பொருத்தமான ஆடையணிகளை அணிந்து கண்ணியமான முறையில் உரையாடலைக் கையாள்வார். | 3.3.1 சரியான முறையில் செம்மையாக உரையாடுதல்<br><br>3.3.2 உடல் அவயவங்களை உரியவாறு பயன்படுத்தல். |
| | 4. சமயம் மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றி அவை தொடர்பான அனுபவங்களைப் பெறுவார். | 4.1 விசேட சமய நிகழ்வுகளில் வினைத்திறனுடன் பங்குகொள்வார். | 4.1.1 வினைத்திறனுடன் பங்குபற்றுதல் |
| | | 4.2 விசேட கலாசார நிகழ்வுகளில் செயலூக்கத்துடன் பங்குகொள்வார். | 4.2.1 செயலூக்கத்துடன் பங்குபற்றுதல் |
| | | 4.3 விசேட சமய அல்லது கலாசார நிகழ்வு ஒன்றை முன்மாதிரியாகச் செய்து காட்டுவார். | 4.3.1 செயற்பாடுகளில் ஈடுபடுதல்<br><br>4.3.2 எண்ணங்களை வெளிப்படுத்தல்<br><br>4.3.3. சிறந்த ஆக்கபூர்வமான ஆற்றல்<br><br>4.3.4 உபகரணங்களை உரியவாறு பயன்படுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| நன்னடத்தை, ஒழுகலாறு மற்றும் நல்லிணக்கம் | 5. புனித தலங்களில் அனுசரிக்க வேண்டிய மரபுரீதியான விதிமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் சீரான முறையில் பின்பற்றுவார். | 5.1 புனித தலங்களில் அனுசரிக்க வேண்டிய மரபுகள், விதிமுறைகள் மற்றும் பழக்கவழக் கங்களை இனங்காண்பார். | 5.1.1 சரியான பழக்க வழக்கங்களைக் கூறுதல்<br><br>5.1.2 விதிமுறைகளை முறையாகக் கூறுதல். |
| | | 5.2 சரியான விதிமுறைகள் மற்றும் பழக்க வழக்கங்களுக்கு அமைவாகச் செயற்படுவார். | 5.2.1 நடவடிக்கை மேற்கொள்ளல் |
| | 6. சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது சரியான விதிமுறையையும் உரிய பழக்கவழக்கத்தையும் அவயவங்களின் பயன்பாட்டையும் வெளிப்படுத்துவார். | 6.1 சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது சீரான பழக்கவழக்கங்களை மேற்கொள்வார். | 6.1.1. உரியவாறு வழிமுறைகளில் ஈடுபடுதல். |
| | | 6.2 சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது விதிமுறைகளை ஏற்றவாறு மேற்கொள்வார். | 6.2.1 முறையான பழக்கவழ க்கங்களை மேற்கொள்ளல். |
| | | 6.3 சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது சரியான அவயவங்களின் பயன்பாட்டை வெளிப்படுத்துவார். | 6.3.1 உடல் பயன்பாட்டை சீரான முறையில் வெளிக்காட்டுவார். |
| | | 6.4 சமய நடவடிக் கைகளின்போது உரிய முறையில் பொருத்தமான வார்த்தைகளைப் பிரயோகிப்பார். | 6.4.1 சிறப்பான சொற்பிரயோ கத்தைப் பயன்படுத்துவார். |

| | | | |
|---|---|---|---|
| | 7. ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளையும் பழக்கங்களையும் பின்பற்றுவார். | 7.1 ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளை இனங்காண்பார். | 7.1.1 சிறப்பான நற்பண்புகளை இனங்காணல் |
| | | 7.2 ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்களை இனங்காண்பார். | 7.2.1 சரியாக முறையில் நற்பண்புகளை அறிந்து இனங்காணல் |
| | | 7.3 சிறந்த ஒரு பிள்ளை என்றவகையில் தமது நடவடிக்கைகளை கொள்வார். | 7.3.1 செம்மையான நடத்தையை மேற்கொள்ளல். |
| | | | 7.3.2 சீரான நடத்தையை கடைபிடித்தல். |
| சூழல் நேயம் | 8. தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைத் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்ப தற்காகச் செயலாற்றுவார். | 8.1 தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைச் சுத்திகரிப்பதில் பங்களிப்புச் செய்வார். | 8.1.1 செயலூக்கத்துடன் பங்குபற்றுதல் |
| | | 8.2 தமது சுற்றுச் சூழலை அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வார். | 8.2.1 எண்ணங்களை வெளிப்படுத்தல்<br><br>8.2.2 ஆக்கபூர்வமான திறன்<br><br>8.2.3 உபகரணப் பயன்பாடு<br><br>8.2.4 பாராட்டுதல் |

| | | | |
|---|---|---|---|
| | 9. சமய அறிஞர்கள் மற்றும் ஞானிகள் இயற்கையின் பெறுமானத்தை மேலோங்கச் செய்த விதம் பற்றி அறிந்து கொண்டு அதற்கேற்றவாறு செயலாற்றுவார். | 9.1 கதைகள் / கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு இயற்கையின் பெறுமானத்தை இனங்காண்பார். | 9.1.1 அவதானமாகச் செவிமடுத்தல்<br><br>9.1.2 தெளிவாக விளங்கிக் கொள்ளல்<br><br>9.1.3 கருத்துக்களை வெளிப்படுத்தல் |
| | | 9.2 சுற்றாடல் வளங்களைச் சிறந்தமுறையில் சிக்கனமாகப் பயன்படுத்துவார். | 9.2.1 சிக்கனமான முறையில் பயன்படுத்தல் |
| | | 9.3 உயிரினங்களை அன்பு செய்வார். | 9.3.1 அன்பு செய்தல் |
| | | 9.4 உயிரினங்களுக்கு உணவு வழங்குவார். | 9.4.1 உணவு, பானம் ஆகிய வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் |
| பலம், ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தை | 10. ஏற்புடைய அன்றாட நடத்தைக் கோலங்கள் தொடர்பாக சிறந்த சுகாதார பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பார். | 10.1 சிறந்த நடத்தைகளை வரிசைக் கிரமமாக வெளிப்படுத்துவார். | 10.1.1 ஒழுங்குமுறையில் கூறுதல் |
| | | 10.2 சிறந்த சுகாதாரப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பார். | 10.2.1 சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களை அனுசரித்தல் |
| | 11. அன்றாட நடவடிக்கைகளின் போது அறிவுத்தெளிவுடன் சுயாதீனமாகச் செயற்படுவார். | 11.1 நடக்கும்போது அறிவுத்தெளியுடன் சுயாதீனமாக நடப்பார். | 11.1.1 அறிவுத் தெளியுடன் சுயாதீனமாக நடத்தல் |
| | | 11.2 நடக்கும்போது அடிப்பாதத்தில் உணருகின்ற மென்மை - வன்மை, ஈரம்- வரட்சி, சூடு - குளிர் என்பவற்றை உணர்ந்து நடப்பார். | 11.2.1 மென்மை-வன்மை, ஈரம் - வரட்சி, சூடு - குளிர் ஆகியவற்றை உணர்ந்து அறிந்து கொள்ளல். |
| | | 11.3 எளிமையான முறையில் தியானத்தில் (Meditation) ஈடுபடுவார். | 11.3.1 உடல் அவயவங்களின் பயன்பாட்டை சீரான முறையில் மேற்கொள்ளல்.<br><br>11.3.2 தியானம் செய்தல் |

உள்ளடக்கம்

முதலாம் தவணை

1 - அற்புதமான படைப்பு

2 - எமது ஆதிப் பெற்றோர்

3 - தேவாலயம் செல்வோம்

4 - திருச்சிலுவை

5 - திருச்சிலுவையை வரைவோம்

6 - பலத்துடன் நடப்போம்

# 1

## எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு

# அற்புதமான படைப்பு

அற்புதமான படைப்பின் வாயிலாக உன்னத இறைவனை அறிமுகம் செய்தலும் பிள்ளைகளிடம் விசுவாசத்தை உருவாக்குதலும் சூழலை மதிப்பதன் ஊடாக நடத்தையை மேம்படுத்தலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 2. சமய அறிஞர்கள், தோற்று விப்பாளர்கள் தொடர்பான கதைகள் மற்றும் திருவிவிலிய கதைகள், பாடல்கள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு உரிய விசேட குணாதிசயங்களை இனங்கண்பார். | தந்தையாகிய இறைவன் | 2.3 சமயக் கதைகள் வாயிலாகப் பெறக்கூடிய முன்மாதிரிகளை வெளிப்படுத்துவார். | 2.3.1 முன்மாதிரிகளை கூறுவார். |
| | | 2.4 திருவிவிலிய பாடல்களைக் கேட்டு தாளத்துக்கமைய பாடுவார். | 2.4.2 தாளத்துக்கமைய பாடுவார். |

**கற்றல் வளங்கள்**

- அழகிய சூழல் அடங்கிய சித்திரம் (மாணவர் செயல் நூல்)
- கிறிஸ்தவ பாடல் புத்தகம் (பாடல் எண்)
- கடல் நோக்கி - எனும் பாடல் (ஒலிநாடா)
- பல்வேறு படைப்புக்களை உருவாக்குவதற்கு தேவையான பொருட்கள்
- சித்திரம் நிறந்தீட்டுவதற்கு அவசியமான வர்ணம்
- பறவைகளுக்கான பலகை மற்றும் உணவு
- செபம் அடங்கிய பதாகை

**கற்றல் - கற்பித்தல் செயன்முறை:**

**படிமுறை 1**

- மாணவர் அனைவரும் செயற்படுகின்ற விதமாக அவர்களை ஒன்றுகூட்டுங்கள்.
- கடல் நோக்கி நதிகள் பாயும் - பாடல் அடங்கிய ஒலிநாடாவை ஒலிக்கச் செய்து மாணவரை செவிமடுக்கச் செய்யுங்கள்.

**கடல் நோக்கி நதிகள் பாயும்**

**ஒளி நோக்கி மலர்கள் சாயும்**

**அகிலம் படைத்த என் தலைவா**

**என்னை நோக்கி வருவதேன்**

**குருவிகள் பறந்திடும் நேரத்திலே**

**ஏணி தேவையில்லை**

**நீரில் மீனினம் நீந்திடவே**

**படகு தேடி செல்வதில்லை**

**ஞாலம் தாங்கும் எந்தன் இறைவா**


**என்னை நாடுவதேன்**

- பாடலைச் செவிமடுப்பதற்கு இடமளியுங்கள். மாணவர்களுடன் இணைந்து பாடலைப் பாடுங்கள்.
- பாடலைப் பாடியவாறு மாணவர்களுடன் நடிப்பில் ஈடுபடுங்கள்.
- பாடலைப்பற்றிய கருத்தை மாணவரிடம் வினவுங்கள். இவை அனைத்தையும் படைத்தவர் இறைவனே என்பதைக் கூறுங்கள்.
- இறைவன் படைத்த உலகின் அழகை இரசிப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலே வானத்தைப் பார்ப்பதற்கு மாணவருக்கு இடமளியுங்கள்.
- கீழே பூமியை அவதானமாகப் பார்த்து அதில் காணும் அழகை இரசிப்பதற்கு மாணவருக்கு இடமளியுங்கள்.
- மாணவர்கள் கண்களை மூடியவாறு சூழலில் கேட்கும் பல்வகையான ஒலிகளை இரசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வீசுகின்ற காற்றின் மென்மையை அனுபவிப்பதற்கு மாணவருக்கு இடமளியுங்கள்.
- மரம், செடிகொடிகள், சூரியன், நிலா அனைத்தையும் படைத்தவர் இறைவன் என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்திக் கூறுங்கள்.
- மாணவர்களின் அனுபவங்கள் பற்றிய ஒரு கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
- முன்னர் அறிவித்தவாறு இறைவனின் படைப்புக்கு இசைவாக பாத்திரமேற்றுத் தமது நடிப்பை அனைவர் முன்பும் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.


- கீழே தரப்பட்டுள்ள படைப்புகளை அவதானித்து அவற்றைப் போல முன்வைப்பதற்கு மாணவரைத் தயார் செய்யுங்கள்.




**நான் ஒரு மலர், என்னைப் படைத்தவர் இறைவன், நான் வாசம் வீசும் மலர்**



**நான் ஒரு திராட்சைக் குலை, என்னைப் படைத்தவர் இறைவன், நான் மிகவும் சுவையான பழம்**



**நான் ஒரு மீன், என்னைப் படைத்தவர் இறைவன், என்னால் நீந்த முடியும்**



**நான் ஒரு முயல், என்னைப் படைத்தவர் இறைவன், என்னால் பாய்ந்து செல்ல முடியும்**

- இந்த நடிப்பை முன்வைத்த பின் மாணவர்களைக் கணிப்பீட்டுக்கு உட்படுத்திக் கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள். இந்த அழகான படைப்பை சரியான முறையில் பாதுகாப்பது எப்படி? விடை கூறும் மாணவர்களைப் பாராட்டுங்கள்.

**படிமுறை 02**

- இறைவன் எமக்குக் கொடுத்துள்ள அழகிய படைப்புக்கள் நிறைந்த இந்த உலகைப் பாதுகாப்பதற்கு மாணவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களுடன் கலந்துரையாடுங்கள். மாணவர்கள் கருத்தைப் பாராட்டுங்கள்.

- மாணவர்கள் செய்யக்கூடியவற்றை நடிப்பின் வாயிலாக முன்வைப்பதற்கு வழிகாட்டுங்கள்.

  உதா: நான் ஆகாயத்தின் அழகைப் பார்க்கிறேன் - நான் மலரைப் பறித்து வீசி எறிய மாட்டேன்.

  நான் செல்லப் பிராணிகளை அன்புடன் பார்த்துக்கொள்வேன்.

- மாணவர் செயற்பாடுகளைப் பாராட்டுங்கள்.

- மாணவரை அமைதிப்படுத்தி செபம் செய்வதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

- எழுந்து நின்று சரியான முறையில் கைகளைக் கூப்பியவாறு பின்வரும் செபத்தை மாணவருடன் சேர்ந்து சொல்லுங்கள்.

**அன்பின் இறைவா, நீர் படைத்துள்ள இந்த அழகிய உலகிற்காக உமக்கு நன்றி.**

- பாடலைச் செவிமடுப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- மாணவருடன் இணைந்து பாடலைப் பாடுங்கள்.

**படிமுறை 3**

- செயற்பாடு 3 இன் கீழ் உள்ள மரத்தில் மலர்கள், இலை, காய்கள் என்பவற்றை வரைவதற்கு உதவுங்கள், அதில் உள்ள பந்தியை மாணவருடன் இணைந்து உரத்து வாசியுங்கள்.
- பெற்றோருக்கு அறிவுறுத்தல் வழங்கிப் பறவைகளுக்கான பலகையொன்றைத் தயார் செய்வதற்கு ஆவன செய்யுங்கள்.
- கொண்டுவந்த உணவை பறவைகளுக்கான பலகையில் வைத்து அதனை அவதானிக்கச் செய்யுங்கள். மாணவருடன் இணைந்து பின்வரும் பாடலை இரசனையுடன் பாடுங்கள்.

**சின்ன சிட்டுக் குருவியே**

**சின்னச் சிட்டுக் குருவியே**

**உன்னை அழகாக யார் படைத்தது?**

**அங்குமிங்கும் பறந்து கொண்டு**

**ஆனந்தமாய் பாடும் உன்னை**

**அனுதினமும் யார் காப்பது?**

**ஐயோ ஐயோ இது தெரியாதா?**

**அந்த இறைவன் தானே**

**என்னைக் காக்கின்றார்**

**உண்ண உணவும் கொடுக்கிறார்**

**உறங்க இடமும் கொடுக்கிறார்**

**இந்த உலகத்தையே படைத்து இருக்கிறார்**

- இந்த அழகிய படைப்பை பாதுகாப்பது பற்றி மாணவரிடம் கேட்டறிந்து மீண்டும் தெளிவுபடுத்துங்கள்.

**மாணவர் செயல்நூல் தொடர்பான ஆலோசனை**

- படங்களை நன்கு அவதானிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். அது தொடர்பாக எழுகின்ற கருத்துக்களை முன்வைப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- இப்பாடலைப் பாடச் செய்யுங்கள். அதன் பின்னர் நடிப்பில் ஈடுபடுத்துங்கள்.
- வரைவதற்கென தரப்பட்டுள்ள உருவத்தை முதலில் பூர்த்தி செய்யுங்கள்.
- இரண்டாவதாக மிருகங்களுக்கு நிறந்தீட்டிய பின்னர் மீதமாக உள்ள உருவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.
- உருவங்களை நிறந்தீட்டச் செய்யுங்கள். மாணவர் விரும்பிய ஒரு சந்தர்ப்பத்தைத் தெரிவு செய்து அதனை நடித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.

- இந்த மரம் அடங்கிய உருவத்தைப் பூர்த்தி செய்ய வழிகாட்டுங்கள். பறவைகளுக்கான பலகை தொடர்பாக மாணவரை அறிவுறுத்துங்கள். தரப்பட்டுள்ள பந்தியை மாணவருடன் சேர்ந்து வாசியுங்கள்.

**கணிப்பீடு:**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.3 சமயக் கதைகள் வாயிலாகப் பெற்றுக் கொண்ட முன்மாதிரி பற்றிக் கூறுவார். | 2.3.1 | இறைத் தந்தையின் அழகிய படைப்பைப் பாதுகாப்ப தற்கான மாதிரி ஒன்றைக் கூறுவார். | இறைத் தந்தையின் அழகிய படைப்பைப் பாதுகாப்ப தற்கான மாதிரி ஒன்றைப் பிறர் உதவியுடன் கூறுவார். | இறைத் தந்தையின் அழகிய படைப்பைப் பாதுகாப் பதற்கான மாதிரி ஒன்றை ஓரளவு கூறுவார். | சமயக் கதைகள் வாயிலாகப் பெற்றுக் கொண்ட முன்மாதிரி பற்றிக் கூற இடர்படுவார். |
| 2.4 திரு விவிலிய பாடல்க ளுக்குச் செவிமடுத்து தாளத்துடன் பாடுவார். | 2.4.2 | அழகிய படைப்பைக் கவனத்திற் கொண்டு தாளத்துடன் பாடுவார். | அழகிய படைப்பைக் கவனத்திற் கொண்டு தாளத்துடன் உதவியோடு பாடுவார். | அழகிய படைப்பைக் கருத்திற் கொண்டு தாளத்துடன் ஓரளவு பாடுவார். | விவிலிய பாடல்களைச் செவிமடுத்து தாளத்துடன் பாட இடர்படுவார். |

# 2 எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு
# எமது ஆதிப் பெற்றோர்

இறை தந்தை தமது அன்பின் காரணமாக எமது ஆதிப் பெற்றோரை உருவாக்கி அவர்களை ஏதேன் தோட்டத்தில் இருக்கச் செய்தார். ஆதாம், ஏவாள் இறை தந்தைக்குக் கீழ்ப்படியாமை மற்றும் காயின், ஆபேல் கதையை விளக்குவதன் வாயிலாக இறைதந்தையை அன்பு செய்தல் வலியுறுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றந் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 2. மறை அறிஞர்கள், மறைத் தோற்றுவிப்பார்கள் தொடர்பான கதைகள், சமயக் கதைகள் மற்றும் திருவிவிலிய பாடல்கள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு உரிய சிறப்பான குணாதிசயங்களை இனங்காண்பார். | இறைதந்தை படைத்த ஆதிப் பெற்றோரும் பிள்ளைகளும் | 2.2 சமயக் கதைகள் அடிப்படையில் சமய அறிஞர்களின் விசேட குணாதி சயங்களைக் கூறுவார். | 2.2.1 விசேட குணாதி சயங்களைக் கூறுவார். |
| | | 2.1 சமயக் கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 சமயக் கதைகளைச் செவிமடுப்பார். |

**கற்றல் வளங்கள்:**

- படைப்பின் வரலாறு அடங்கிய காணொளி
- புனித விவிலியம் தொடக்க நூல்1: 27-28 மற்றும் தொடக்க நூல்2: 8-9
- துண்டுகளாக்கப்பட்ட பல்வேறு நிறக்கடதாசி, பசை
- மாணவர் செயல்நூல் செயற்பாடு 3 அடங்கிய சுவரொட்டி
- செபம் அடங்கிய சுவரொட்டி

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படிமுறை 1**

- பதிவிறக்கம் செய்யப்பட்ட காணொளியை மாணவர் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- ஆதாம், ஏவாள், ஏதேன் தோட்டம், காயின், ஆபேல் தொடர்பாக உரையாடுங்கள்.
- காணொளி ஊடாகப் பார்த்த ஆதிப் பெற்றோர் தொடர்பாக மாணவர் கருத்தைக் கேட்டறியுங்கள்.
- எமது ஆதிப்பெற்றோர் ஆதாம், ஏவாள் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.

- இறை தந்தையின் அன்பு காரணமாக உருவாக்கப்பட்ட ஆதிப் பெற்றோர் ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்த மகிழ்வான வாழ்க்கையை எடுத்துக் காட்டுங்கள். அவர்கள் இறைவனுக்குக் கீழ்ப்படியாமல் நடந்த விதம் பற்றி விபரித்துக் கூறுங்கள்.
- ஆதிப் பெற்றோரின் பிள்ளைகளான காயின், ஆபேல் பற்றிய விபரங்களை மாணவருக்கு முன்வையுங்கள்.
- அனைத்து மாணவர்களையும் செப வழிபாட்டுக்கு ஆயத்தம் செய்யுங்கள்.
- செபம் அடங்கிய சுவரொட்டியை மாணவருக்கு முன்வையுங்கள்.
- மாணவருடன் இணைந்து பின்வரும் செப வழிபாட்டில் ஈடுபடுங்கள்.

**அன்பின் இறைவா, ஆதிப் பெற்றோர் வாயிலாக உமது அன்பை எமக்கு வெளிப்படுத்தியமைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். இந்த அழகிய படைப்பினைப் பாதுகாப்பதற்கான வரத்தை எமக்கு அருளுமாறு வேண்டுகிறோம்.**

**படிமுறை 2**

- திருவிவிலியத்தில் தொடக்க நூல் 1: 27-28 மற்றும் தொடக்க நூல் 2: 8-9 பகுதிகளை வாசித்து மாணவருக்கு விளக்குங்கள்.
- இறைதந்தை ஏதேன் தோட்டத்தில் எமது ஆதிப்பெற்றோருக்கு தேவையான அனைத்தையும் வழங்கினார் என்பதையும் அவர்கள் அங்கு மிகுந்த மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள் என்பதையும் மாணவருக்கு தெளிவுபடுத்திக் கூறுங்கள்.
- இறைதந்தையின் உயரிய பண்புகளை மாணவர்களுக்கு விளக்குங்கள்.
    - படைப்பின் மூலமாக அன்பும் கருணையும்
    - மன்னிப்பு வழங்குதல் மூலமாக
- ஏதேன் தோட்டத்தில் அவர்களுக்கு இறை தந்தையின் பூரணமான பாதுகாப்பும் ஆசீர்வாதமும் கிடைத்தது என்பதை மாணவருக்கு விளக்கிக் கூறுங்கள்.
- மாணவர் செயல்நூலில் உரிய பாடத்தில் முதல் பக்கத்தில் உள்ள பகுதியை மாணவர்களுக்கு விளக்கி, அதனை உரத்து வாசியுங்கள்.

**படிமுறை 3**

- கீழேயுள்ள படத்தை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- சேகரித்த கடதாசிகளைக் கொண்டு இந்த சித்திரத்தை பூர்த்தி செய்க.
- ஏதேன் தோட்டத்தில் ஆதாம், ஏவாள் மகிழ்வாக இருக்கும் படத்தை நிறந்தீட்டுங்கள்.
- இறைவனுக்கு நன்றி கூறும் விதத்தை எடுத்துக்காட்டுங்கள்.
- பாடலைப் பாடி நன்றி கூறுவதற்கு வழிகாட்டுங்கள்.

**மாணவர் செயல்நூல் தொடர்பான ஆலோசனை**

- இறைவன் எங்களுக்காக படைத்த ஏதேன் தோட்டத்தை நிறந்தீட்ட அறிவுறுத்துங்கள்.

**கணிப்பீடு**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப் பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.2 சமயக் கதைகள் வாயிலாக மறை அறிஞர் களின் விசேட பண்புகளைக் கூறுவார். | 2.2.1 | சமயக் கதைகளில் அடங்கியுள்ள ஏதேன் தோட்டத்தில் இறையன்பு காரணமாக படைக்கப் பட்டவற்றை கூறி அவற்றுக்கு நிறந்தீட்டு-வார். | சமயக் கதைகளில் அடங்கியுள்ள ஏதேன் தோட்டத்தில் இறை அன்பு காரணமாக படைக்கப்பட்ட ஒன்றைக் கூறி அதற்கு நிறந்தீட்டுவார். | சமயக் கதைகளில் அடங்கியுள்ள ஏதேன் தோட்டத்தில் இறையன்பு காரணமாக படைக்கப்பட்ட ஒன்றை உதவியோடு கூறி அதற்கு நிறந்தீட்டுவார். | சமயக் கதைகளில் அடங்கியுள்ள ஏதேன் தோட்டத்தில் இறையன்பு காரணமாக உருவாக் கப்பட்ட எதையும் கூற மாட்டார், நிறந்தீட்ட இடர்படுவார். |
| 2.1 சமயம் சார் கதைகளை விருப்புடன் செவிம டுப்பார். | 2.1.1 | ஆதாம், ஏவாளின் பிள்ளைகள் இருவரது பெயர்கை-ளயும் கூறுவார். | ஆதாம், ஏவாளின் பிள்ளைகளில் ஒருவர் பெயரைக் கூறுவார். | ஆதாம், ஏவாளின் பிள்ளைகள் இருவரது பெயர்களையும் உதவியோடு கூறுவார். | ஆதாம், ஏவாளின் பிள்ளைகள் இருவரது பெயர்க ளையும் கூற இடர்படுவார். |

# 3 எண்ணக்கரு - சமூக மற்றும் கலாசார புரிந்துணர்வு
## தேவாலயம் செல்வோம்

நாம் தேவாலயத்திற்குச் செல்வதற்கு முன் அவசியமானவற்றைத் தயார் செய்துகொண்டு, பணிவுடன் தேவாலயத்திற்கு சென்று அதன் புனித தன்மையை பேணும் விதமாக வழிபாடுகளில் முறையாகப் பங்குபற்றி இறைதந்தைக்கு எமது அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 3. புனித வணக்கத் தலங்களை இனங்கண்டு, அவ்விடங்களில் கண்ணியமாக நடந்து கொள்வார். | கத்தோலிக்க தேவாலயம் | 3.1 தமது சமயத் தலங்களை இனங்கண்டு பெயர் கூறுவார். | 3.1.1 தலங்களை இனங்காணல். |
| | | 3.2 சமய தலங்களில் அவரவர் சமய விதிமுறைகளை அனுசரித்து நடப்பார். | 3.2.1 சமய விதிமுறைகளை அனுசரித்தல் |

**கற்பித்தல் வளங்கள் :**

- தேவாலயம் அடங்கிய படம்
- பாடல் புத்தகம்
- செபமாலை
- வர்ணம்
- தேவாலயத்திற்கு கொண்டு செல்லும் பொருட்கள்
- விளக்கு

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**தேவாலயம் செல்வதற்கான முன்னாயத்தம்**

(தேவாலயம் செல்வதற்கான சந்தர்ப்பம் இல்லையெனில் தேவாலயம் உள்ள படத்தைக் காட்டுங்கள். அதன் பின்னர் அத்தகைய இடத்திற்குச் சென்று மாணவரைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.)

- அதிபருடன் கலந்துரையாடி தேவாலயம் செல்வதற்கான பயணத்தை ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்.
- தேவாலயத்திற்கு மாணவரை அழைத்துச் செல்வது தொடர்பாக ஆலய பங்குத் தந்தைக்கு அறிவித்து அவரது அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- பிள்ளைகளை தேவாலயத்திற்கு அழைத்துச் செல்வது தொடர்பாக பெற்றோரையும் அறிவுறுத்துங்கள்.

- தேவாலயத்திற்கு செல்வதற்கு முதல் நாள் தேவாலயத்தில் நடந்துகொள்ள வேண்டிய விதிமுறை (அமைதி பேணல்) பற்றி அறிவுறுத்துங்கள்.
- உரியமுறையில் தேவாலயத்திற்கு செல்லுங்கள்.

**தேவாலயத்திற்குச் சென்ற பின்னர்**

**படிமுறை 1**

- தேவாலயத்திற்கு உள்ளே செல்லும் முன்னர் செபமாலை, பாடல் புத்தகம் என்பவற்றை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை ஆசிரியர் தாம் வைத்திருக்கும் செபமாலை, பாடல் புத்தகம் என்பவற்றின் மூலம் விளக்கம் அளியுங்கள்.
- மாணவர்களை வரிசைப்படுத்தி கைகளைக் கூப்பியவாறு செல்லுவதற்கு அறிவுறுத்துங்கள்.
- தேவாலயத்திற்கு உட்செல்லும் போது, மிகவும் அமைதியாகவும் பக்தியுடனும் செல்ல வேண்டும் என்பதை தெளிவுபடுத்துங்கள்.

**படிமுறை 2**

- பலிபீடம் அடங்கிய படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- தேவாலயம் என்பது இறைதந்தை வீற்றிருக்கும் புனித தலம் என்பதைக் கூறுங்கள்.
- அதனால் நாம் தேவாலயத்துள் நண்பர்களுடன் பேசுவதை விட்டு, அமைதியாக இருக்க வேண்டும் எனவும் தேவாலயத்தின் உள்ளே இருக்கையில் நாம் இறைதந்தையுடன் மட்டுமே உரையாட வேண்டும் என்பதையும் விளக்கிக் கூறுங்கள்.
- தேவாலயத்தின் உள்ளே இருக்கும் விசேட இடம் திருப்பலி பீடம் என்பதைக் கூறுங்கள்.
- குருவானவர் பீடத்தில் தான் திருப்பலி நிறைவேற்றுவார் என்பதை தெளிவுபடுத்துங்கள்.
- பீடத்தில் சிவப்பு விளக்கு ஏற்றப்பட்டு திவ்விய நற்கருணைநாதர் தாபிக்கப்பட்டுள்ள விசேட இடமே மிக மரியாதைக்குரிய இடமாகும் என்பதை மாணவர்களுக்குக் கூறுங்கள்.

**படிமுறை 3**

- இப்போது நாம் தேவாலயத்தில் உள்ள எல்லாம் வல்ல இறைதந்தையை வணங்குவோம். முதலில் கைகளைக் கூப்பி வணங்குமாறு அறிவுறுத்துங்கள்.
- வலது முழங்காலை தரையில் வைத்து தலை குனிந்து பணிவுடன் வணங்கும் முறையை ஆசிரியர் மாதிரியாகச் செய்து காட்டுங்கள்.
- பின்னர் மாணவர்களுடன் இணைந்து வணங்கிய பின் படிப்படியாக மாணவர்களையும் அவ்வாறு இறைவனை வணங்குவதற்குப் பயிற்சி அளியுங்கள்.

**படிமுறை 4**

- மாணவர்களை சிலுவையின் பாதப்படிக்கு அழைத்துச் செல்லுங்கள். முழந்தாட்படியிட்டு கைகளை கூப்பி வணங்குமாறு கூறுங்கள்.
- “நீர் எந்தன் பாறை என் அரணான யேசுவே” எனும் பாடலை மாணவர்களுடன் இணைந்து பக்தியோடு பாடுங்கள். மாணவர்களை எழும்புமாறு கூறுங்கள்.
- தேவாலயத்தின் உள்ளே இருக்கும் வாங்குகளில் அமைதியாக இடைவெளி விட்டு அமரச் செய்யுங்கள்.

- அமைதியாக இருந்து இறைத்தந்தையுடன் சிறிதுநேரம் மௌனமாக உரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் முன்வைக்க வேண்டிய மன்றாட்டு, நன்றுகூறல் என்பவற்றை நினைவூட்டுங்கள்.

**படிமுறை 5**

- மாணவர்களை தேவாலயத்திற்கு வெளியே அமைதியாக அழைத்துச் செல்லுங்கள்.
- தேவாலயத்தின் உள்ளே அவர்கள் பார்த்தவற்றைப் பற்றி உரையாடுங்கள்.
- தேவாலயத்தை விட்டு வெளியேறும் முன்னர் தாம் அமர்வதற்குப் பயன்படுத்திய வாங்குகளை மீண்டும் ஒழுங்காக வைக்கவும் தேவாலய தரையைச் சுத்தம் செய்யவும் மாணவரை வழிப்படுத்துங்கள்.
- தாம் எடுத்து வந்த பொருட்களை மீண்டும் எடுத்துச் செல்லவும் அறிவுறுத்துங்கள்.

**தேவாலயம் சென்று திரும்பிய பின்னர்**

**மாணவர் செயல்நூல் தொடர்பான ஆலோசனை**

- எமது தேவாலயத்தின் படத்தை அழகாக நிறந்தீட்டுங்கள்.
- தேவாலயம் செல்லும் போது எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்களை இணையுங்கள்.
- தேவாலயத்தின் உள்ளே மிக விசேட இடமாக இனங்கண்ட பலி பீடத்தின் படம் ஒன்றைக் காட்டி அதன் முக்கியத்துவத்தை விளக்குங்கள்.
- தேவாலயத்திற்குச் சென்று மரியாதையுடன நடந்துகொண்ட விதம் பற்றி மீண்டும் நினைவுபடுத்துங்கள்.
- மாணவர்களுடன் இணைந்து "நீர் எந்தன் பாறை என் அரணான இயேசுவே" எனும் பாடலைப் பாடுங்கள்.
- மாணவர் செயல்நூலில் அடங்கியுள்ள படத்தைப் பார்த்து ஞாயிறு தேவாலயத்திற்குச் செல்லும் பாதையைச் சரியாக நிறந்தீட்டுங்கள்.

**கணிப்பீடு:**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 3.1 தமது சமய தலங்களை இனங்கண்டு பெயர் கூறுவார். | 3.1.1 | தேவால யத்திற்குக் கண்ணியமாகச் சென்று சமயத் தலங்களை இனங்கண்டு பெயர் கூறுவார். | தேவால யத்திறகுக் கண்ணிய மாகச் சென்று சமயத் தலங்களை இனங்கண்டு ஓரளவு பெயர் கூறுவார். | தேவால யத்திற்குக் கண்ணியமாகச் சென்று சமயத் தலங்களை இனங்கண்டு உதவியோடு பெயர் கூறுவார். | தனது சமயத் தலங்களை இனங்காண இடர்படுவார். |
| 3.2 சமயத் தலங்களில் சமய முறைப்படி நடந்து கொள்வார். | 3.2.1 | சரியான முறைப்படி இறை தந்தைக்கு வணக்கம் செலுத்துவார். | ஒருவரது உதவியுடன் சரியான முறைப்படி இறை தந்தைக்கு ஓரளவு வணக்கம் செலுத்துவார். | ஒருவரது உதவியுடன் சரியான முறைப்படி இறை தந்தைக்கு வணக்கம் செலுத்துவார். | சரியான முறைப்படி இறை தந்தைக்கு வணக்கம் செலுத்த இடர்படுவார். |

# 4 எண்ணக்கரு - சமூக மற்றும் கலாசார புரிந்துணர்வு

## திருச்சிலுவை

கலாசார புரிந்துணர்வை மேலோங்கச் செய்து திருச்சிலுவைக்கு மரியாதை செலுத்தலும் கிறிஸ்தவ கலாசாரத்தின் குறியீடாக விளங்கும் திருச்சிலுவையை அர்த்தமுள்ளவகையில் அணிந்து கொள்ளலும் கலாசார விழாக்களில் கௌரவமான முறையில் கலந்துகொள்ளலும் இதன் வாயிலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 4. சமய மற்றும் கலாசார விழாக்களில் கலந்துகொண்ட அனுபவம் பெறுவார். | குறியீடு | 4.1 விசேட சமய விழாவில் வினைத்திறனுடன் பங்கேற்பார். | 4.1.1 வினைத்திறனுடன் பங்குபற்றல். |
| | | 4.3 விசேட சமய அல்லது கலாசார விழா ஒன்றை மாதிரியாக செய்துகாட்டுவார். | 4.3.1 செயற்பாடுகளில் ஈடுபடுதல். |

**கற்றல் வளங்கள் :**

- திருச்சிலுவை /திருச்சிலுவையின் படம்
- சிறிய சிலுவையொன்று, திருச்சிலுவை அணிவதற்கு அவசியமான நாடா
- பாடல் அடங்கிய சுவரொட்டி
- கிறிஸ்துவின் கல்வாரிப் பயணம் அடங்கிய காணொளி
- பாடல் அடங்கிய ஒலிப்பேழை
- வர்ணம் /காய்ந்த இலைச் சருகு / பசை
- சிறிதாக துண்டாக்கப்பட்ட கடதாசி
- மாரவில தேவாலயத்திக் படம் அடங்கிய காணொலி

**இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்**

**திரும்பிப் பார்க்க மாட்டேன் திரும்பிப் பார்க்க மாட்டேன்**

**சிலுவையே முன்னால் உலகமே பின்னால்**

**சிலுவையே முன்னால் உலகமே பின்னால்**

**இயேசு சிந்திய குருதியினாலே**

**விடுதலை அடைந்தேனே விடுதலை அடைந்தேனே**

**கற்றல் - கற்பித்தல் செயன்முறை:**

**படிமுறை 1**

- திருச்சிலுவை உருவம் / திருச்சிலுவையின் படம் என்பவற்றை மாணவர் முன்பாக மரியாதையோடு காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- காட்சிப்படுத்தப்பட்ட உருவம் என்னவென்பதற்கான விடையை மாணவரிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்.
- கிறிஸ்துவின் திருச்சிலுவை தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கம் அளியுங்கள்.
- கிறிஸ்தவர்களாகிய எமக்கு திருச்சிலுவை உன்னதமான இலச்சினை என்பதை மாண-வர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.
- கிறிஸ்தவர்களாகிய எமக்கு மீட்பை அருளிய திருச்சிலுவைக்கு மரியாதை செலுத்த வேண்டிய விதம் பற்றி மாணவர்களுக்கு தெளிவுபடுத்துங்கள்.
- "இயேசுவின் பின்னால்" எனும் பாடல் அடங்கிய சுவரொட்டியைக் காட்சிப்படுத்துங்கள்.
- அப்பாடல் வரிகள் மற்றும் அதன் பொருள் பற்றி விளக்கிக் கூறுங்கள்.
- பாடலைச் செவிமடுப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கைகளைக் கூப்பி மிகவும் பக்தியுடனும் பணிவுடனும் மாணவர்களுடன் இணைந்து பாடலைப் பாடுங்கள்.

**படிமுறை 2**

- இயேசுவின் கல்வாரி பயணத்தைக் காட்டும் காணொளியைக் காட்சிபடுத்துங்கள்.
- தவக்காலத்தில் பக்தி முயற்சிகள் பற்றி மாணவரை அறிவுறுத்தி அவர்கள் அனுபவத்தைக் கேட்டறியுங்கள்.
- மாணவர்களை மாணவர் செயல்நூலில் உள்ள படங்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- சித்திரம் தொடர்பான கருத்துக்களை மேலோங்கச் செய்யுங்கள்.
- மாணவர் கருத்துக்களைப் பாராட்டுங்கள்.
- அதில் அடங்கியுள்ள விடயங்களை ஒவ்வொரு வசனமாக மாணவருடன் சேர்ந்து உரத்து வாசியுங்கள்.
- மீட்பராம் கிறிஸ்து மரணத்தை வென்று எமக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தமைக்கான அடையாளம் திருச்சிலுவை என்பதை மாணவர்களிடம் உறுதிப்படுத்துங்கள்.
- தவக்கால அனுபவங்களை மாணவரிடம் கேட்டறியுங்கள்.

**படிமுறை 3**

- தவக்கால பக்தி முயற்சி பற்றி விளக்குங்கள்.
- நற்கிரியைகள் /நல்ல செயல்கள் எவை என்பதை மாணவர்களிடம் வினவுங்கள்.
- அன்றாடம் மாணவர் செய்கின்ற நற்செயல்ளைக் கேட்டறிந்து கரும்பலகையில் குறித்துக்கொள்ளுங்கள்.

உதா: நான் தவக்காலத்தில் ஆலயம் சென்றேன்.

நான் பாடல்கள் பாடினேன்.

நான் அம்மாவுக்கு உதவி செய்தேன்.

நான் ஆசிரியருக்குக் கீழ்ப்படிந்து நடந்தேன்.

நான் வீட்டைச் சுத்தம் செய்தேன்.

நான் கோப்பையைக் கழுவினேன்.

- மாணவர் பதில்களைப் பாராட்டுங்கள்.
- முடிந்தவரையில் காய்ந்த இலைச் சருகுகளைக் கொண்டு சிலுவையை நிர்மாணிக்கச் செய்யுங்கள்.
- நீங்கள் நற்செயல் ஒன்றைச் செய்த பின்னர் நிர்மாணித்த சிலுவையை மாணவர் ஆக்கங்களுக்கான பலகையில் ஒட்டுங்கள். இங்கு பல்வேறு விதமாக மாணவர் ஆக்கபூர்வமான நிர்மாணங்களைக் கட்டியெழுப்பும் வண்ணம் சிலுவைகளை ஒட்டுவதற்கு அறிவுறுத்துங்கள்.

**படிமுறை 4**

- எடுத்து வந்த சிறிய திருச்சிலுவை மற்றும் நாடாவை ஆசிரியர் மேசையில் வைக்குமாறு கூறுங்கள். (ஏனையோருடனும் பகிர்ந்து கொளளக்கூடியவாறு மேலதிகமாக சிலுவை மற்றும் நாடாவை எடுத்துவரும்படி மாணவரை அறிவுறுத்துங்கள்.)
- வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் திருச்சிலுவை மற்றும் நாடாவைப் பகிர்ந்து அளியுங்கள்.
- சிலுவையை நாடாவில் இணைத்து தமது கழுத்தில் அணிந்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள். மாணவர்களுக்கு ஆசிரியர் உதவி வழங்குங்கள்)
- திருச் சிலுவையை கழுத்தில் அணிந்ததும் தாம் தேவ ஆசீர்வாதம் பெற்று பலம் பெறுகின்றோம் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்துங்கள்.
- எமது கிறிஸ்தவ தன்மையின் அடையாளமாக விளங்கும் திருச்சிலுவைக்கு நாம் அன்புடன் மதிப்பளிக்க வேண்டும் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.
- ஒரு சாதாரண ஆபரணம் போல அல்லாமல், மிகுந்த கௌரவத்துடன் திருச் சிலுவையைக் கழுத்தில் அணிந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்கிக் கூறுங்கள்

**மாணவர் செயல்நூல் தொடர்பான ஆலோசனை**

- செயல்நூலில் தரப்பட்டுள்ள திருச்சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் உருவத்தைப் பார்த்து மாணவர் கருத்துக்களை வினவுங்கள்.
- இயேசுவின் கல்வாரிப் பயணம் அடங்கிய காணொளியை அவதானிக்கச் செய்யுங்கள்.
- திருச்சிலுவை கிறிஸ்தவர்களது வெற்றியின் சின்னம் என்பதை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- திருச்சிலுவை அடையாளத்தை ஒட்டு (கொலோஜ்) முறையால் பயன்படுத்தி பூர்த்தி செய்வதற்கு வழிகாட்டுங்கள்.
- செயல்நூலில் உள்ள சித்திரத்தை அழகாக நிறந்தீட்டச் செய்யுங்கள்.

**கணிப்பீடு:**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|
| | | நிலை 2 | நிலை 1 |
| 4.1 விசேட சமய விழாக்களில் வினைத் திறனுடன் பங்கேற்பார். | 4.1.1 | கலாசார புரிந்துணர்வை மேலோங்கச் செய்யும் திருச்சிலுவை அடையாளத்துக்கு கௌரவம் அளிப்பார். | கலாசார புரிந்துணர்வை மேலோங்கச் செய்யும் திருச்சிலுவை அடையாளத்துக்கு கௌரவம் அளிக்க இடர்படுவார். |
| 4.3 விசேட சமய கலாசார விழா ஒன்றை மாதிரியாக செய்து காட்டுவார். | 4.3.1 | விசேட சமய அல்லது கலாசார விழா ஒன்றை மாதிரியாகச் செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | விசேட சமய அல்லது கலாசார விழா ஒன்றை மாதிரியாகச் செய்து காட்டுகின்ற செயற்பாடுகளில் இடர்படுவார். |

# 5

## எண்ணக்கரு - ஒழுகலாறு விழுமியம் மற்றும் புரிந்துணர்வு

## திருச்சிலுவை வரைவோம்

கத்தோலிக்க வழிபாட்டு முறைமை மற்றும் ஒழுங்குமுறைகளை அனுசரித்து இச் செபவழிபாட்டை அறிமுகம் செய்தலும் திருச்சிலுவை அடையாளமிடுதலும் புனித தலங்களில் சரியான நிலைப்பாட்டை வெளிக்காட்டலும் இதன் வாயிலாக எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 5. புனித தலங்களில் சரியான ஒழுங்கு விதிகள் மற்றும் நற்பழக்க வழக்கங்களை அனுசரித்து நடப்பார். | வழிபாடு செய்தல் மற்றும் ஒழுங்குமுறைகள் | 5.2 சரியான ஒழுங்கு முறை மற்றும் பழக்க வழக்கங்களுக்கு அமைய செயலாற்றுவார். | 5.2.1 சரியான ஒழுங்கு முறை மற்றும் பழக்க வழக்கங்களுக்கு அமைய செயலாற்றுவார். |
| 6. சமய வழிபாடு மற்றும் செயற்பாடுகளில் ஈடுபடும்போது, சரியான ஒழுங்குமுறை, பழக்கவழக்கம் மற்றும் அவையவங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவார். | விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை | 6.3 சமயம் வழிபாடு செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவையவங்களின் சரியான நிலையை வெளிக்காட்டுவார். | 6.3.1 அவையவங்களின் சரியான நிலையை வெளிக்காட்டுவார். |

**கற்பித்தல் வளங்கள் :**

- திருச் சிலுவையின் உருவம்
- வர்ணக் கடதாசி, பசை
- நிறப் பென்சில்

**கற்றல் - கற்பித்தல் செயன்முறை:**

**படிமுறை 1**

- அமைதியான சூழலுக்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.
- செப வழிபாடு அடங்கிய படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- படத்தைப் பார்த்து மாணவர் தமது கருத்துக்களை முன்வைப்பதற்கு வழிகாட்டுங்கள்.

- கிறிஸ்துவின் திருச்சிலுவை கிறிஸ்தவர்களாகிய எமது உன்னத அடையாளம் என்பதை மீண்டும் வலியுறுத்துங்கள்.
- "திருச்சிலுவை செபத்தில்" ஈடுபடும் சந்தர்ப்பத்தில் இத்திருச்சிலுவை அடையாளத்தை எமது உடலில் வரைந்துகொள்வது தொடர்பாகக் கூறுங்கள்.
- திருச்சிலுவை செபம் மிகவும் வல்லமை வாய்ந்த செபம் என்பதைக் கூறுங்கள்.
- இச் செபத்தைக் கூறும் சந்தர்ப்பத்தை விளக்குங்கள்.

**படிமுறை 2**

- மாணவரை எழும்பச் செய்து அவர்களை அமைதிப்படுத்தி வகுப்பறைச் சூழலை செபவழிபாட்டுக்கு ஏற்றவிதமாக தயார் செய்து கொள்ளுங்கள்.
- அனைத்து மாணவர்களையும் கைகளைக் கூப்பியவாறு இருக்கும் படி செய்யுங்கள்.
- ஆசிரியர் கீழேயுள்ள அறிவுறுத்தல்களை மாணவரிடம் கூறுங்கள். எடுத்துக்காட்டுடன் செய்து காட்டுங்கள்.
- வலது கையை முன்னெடுத்து பெருவிரலை நேராகவும் ஏனைய விரல்களை மடக்கியும் வைத்திருங்கள்.

1. முதலாவதாகப் பெருவிரலால் நெற்றியில் சிலுவை அடையாளமிடுங்கள்.

   "திருச்சிலுவை அடையாளத்தினாலே" எனக் கூறுங்கள்.

2. உதடுகளில் சிலுவை அடையாளமிடுங்கள்.

   "எங்கள் எதிரிகளிடமிருந்து எங்களை விடுவித்தருளும்" எனக் கூறுங்கள்.

3. மார்பில் சிலுவை அடையாளமிடுங்கள்.

   "எங்கள் இறைவா" எனக் கூறுங்கள்.

4. நெற்றி, மார்பு, இடது, வலது தோள்களில் முறையே அடையாளமிடுக.

   "தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே" எனக் கூறுங்கள்.

5. இருகைகளைக் குவித்து தலை குனிந்து வணங்கி "ஆமென்" என்று கூறுங்கள்.

- இவ்வாறு சரியான நிலைப்பாட்டில் இருந்து "திருச்சிலுவை செபத்தை" ஆசிரியர் மாணவருடன் இணைந்து பலதடவை கூறுங்கள்.
- எமது கிறிஸ்தவ வாழ்வின் அடையாளமாக இருக்கின்ற சிலுவைக்கு நாம் அன்பும் மரியாதையும் செலுத்த வேண்டியது அவசியம் என்பதை மீண்டும் தெளிவுபடுத்துங்கள்.

**படிமுறை 3**

- வீட்டிலிருந்து செல்லும்போது இந்த செபத்தை சொல்ல வேண்டும் என விளக்குங்கள்.
- செபம் செய்வதற்கு முன்னரும் இதனைச் சொல்ல வேண்டும் என்பதைக் கூறுங்கள்.
- முன்னர் கூறிய திருச்சிலுவை செபத்தை மீண்டும் பக்தியுடன் கூறச் செய்யுங்கள்.

- சரியாக இச்செபத்தைக் கூறுகின்ற மாணவரை முன்னால் அழையுங்கள். அதன் பின்னர் மீண்டும் அவர்களை சரியான கை அசைவுகளைப் பயன்படுத்திக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- கைகளைத் தட்டி மாணவரைப் பாராட்டுங்கள்.

**மாணவர் செயல்நூல் தொடர்பான ஆலோசனை**

- திருச்சிலுவைக் குறியீட்டைச் சரியான முறையில் பக்தியுடன் அடையாளமிடுங்கள். அதன் பின்னர் சித்திரத்தை நிறந்தீட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- சரியான முறையில் திருச்சிலுவை அடையாளமிடுகின்ற ஒழுங்குமுறைக்கேற்ப பொருத்தமான இலக்கத்தை இணைக்கச் செய்யுங்கள்.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 5.2 சரியான சமய வழி முறைக்கேற்ப நடந்து கொள்வார். | 5.2.1 | பக்தியோடு திருச்சிலுவை அடையாளத்தை இட்டு பக்தியோடு செபிப்பார். | பக்தியோடு திருச்சிலுவை அடையாள-த்தை இட்டு தெளிவாக பக்தியோடு செபிப்பார். | பக்தியோடு திருச்சிலுவை அடையாள-த்தை இட்டு பிறர் உதவி-யோடு செபிப்பார். | பக்தியோடு திருச்சிலுவை அடையாள-த்தை இட்டு செபிப்பதற்கு இடர்படுவார். |
| 6.3 சரியான சமய வழி முறைக்கேற்ப மெய்ந் நிலைகளை வெளிப்படுத்-துவார். | 6.3.1 | சரியான சமய வழி முறைக்கேற்ப மெய்ந் நிலைகளை வெளிப்படு-த்துவதை கூறுவார். | சரியான சமய வழி முறைக்கேற்ப மெய்ந் நிலைகளை வெளிப்படு-த்துவதை ஓரளவு கூறுவார். | சரியான சமய வழி முறைக்கேற்ப மெய்ந்நிலை-லகளை வெளிப்படுத்-துவதை பிறர் உதவியோடு கூறுவார். | சரியான சமய வழி முறைக்கேற்ப மெய்ந்நிலை-லகளை வெளிப்படு-த்துவதற்கு இடர்படுவார். |

# 6 எண்ணக்கரு - ஒழுகலாறு விழுமியம் மற்றும் புரிந்துணர்வு
## பலத்துடன் நடப்போம்

மனதை ஒருநிலைப்படுத்தி பலத்தோடு நடப்பதற்கு பயிற்சியளிப்பதன் வாயிலாக அன்றாட நடவடிக்கைகளை இயேசுவோடு இணைந்து சரியான முறையில் செய்வதற்கான வழிகாட்டலை வழங்குவது இப்பாடத்தின் எதிர்பார்ப்பாகும்.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 11. அன்றாட செயற்பாடுகளின் போது போதிய நினைவாற்றலுடன் செயற்படுவார். | அன்றாட நன்னடத்தை மற்றும் உறுதிப்பாடு | 11.1 நடந்து செல்கையில் போதிய நினைவாற்றலுடன் நடப்பார். | 11.1.1 நினைவாற்றலுடன் நடந்து செல்லல். |
| | | 11.2 நடையின் போது வன்மை - மென்மை, ஈரம் - வரட்சி, வெப்பம் - குளிர் என்பவற்றை உணர்ந்தவாறு நடையில் ஈடுபடுவார். | 11.2.1 வன்மை - மென்மை, ஈரம் - வரட்சி, வெப்பம் - குளிர் என்பவற்றை இனங்காணல். |

**கற்றல் வளங்கள் :**

- "இயேசு நேசிக்கிறார்" எனும் பாடல் அடங்கிய ஒலிநாடா
- சித்திரம் நிறந்தீட்டுவதற்கு தேவையான வர்ணங்கள்
- இயேசுவின் உருவம் கொண்ட படம்
- இயற்கை மலர்கள், மலர்க் கூடை

**கற்றல் - கற்பித்தல் செயன்முறை:**

**படிமுறை 1**

- வெளியான ஒரு இடத்திற்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவர் இடையே இடைவெளி இருக்குமாறு நிற்கச் செய்யுங்கள்.
- மனதை ஒருநிலைப்படுத்திப் பாடலைக் கேளுங்கள். பின்னர் "இயேசு நேசிக்கிறார் இயேசு நேசிக்கிறார்" பாடலைச் செவிமடுத்து மாணவரைப் பாடச் செய்யுங்கள்.
- சிறிய தியானம் ஒன்றின் வாயிலாக மனதை ஒருநிலைப்படுத்துவதற்கு மாணவரிடம் இவ்வினாக்களை வினவுங்கள்.

- அனைத்து மாணவரிடமும் இவ்வாறு வினவுங்கள்:
- நீங்கள் பாடிய பாடல் என்ன? அதன் கருத்து என்ன?
- உங்களை இயேசு நேசிக்கிறார் என்பதை எப்படி உணர்வீர்கள்?
- மேலும் இதுபோன்ற வினாக்களை முன்வைத்து மாணவர்கள் கவனத்தை ஈர்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.
- இவ்வினாக்களின் ஊடாக மாணவர் கவனத்தை உங்கள் பால் திருப்புங்கள்.

**படிமுறை 2**

- தமது காலணிகளை கழற்றி ஒழுங்காக ஒரு இடத்தில் வைப்பதற்கு மாணவரை வழிகாட்டுங்கள்.
    - நீங்கள் இருக்கும் நிலை புரிகின்றதா?
    - உங்கள் உடலின் பாரம் கால்களுக்குத் தெரிகின்றதா?
    - நீங்கள் நிற்கும் போது உங்கள் பாதம் உணர்வது என்ன?
    - உங்கள் அடிப்பாதத்தில் உணர்கின்ற உணர்வு யாது?
    - வன்மை, மென்மை, சூடு என உணர்கின்றீர்களா?
    - உங்கள் முதுகு நேராக இருக்கின்றமையை உணர்கின்றீர்களா?
- தெரிவு செய்த இடத்தில் அங்குமிங்கும் நடப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள். பின்னர் நடக்கும் வேகத்தை அதிகரிக்கச் செய்யுங்கள்.
- வலது காலை வைக்கும்போது வலது காலுக்கும் இடது காலை வைக்கும்போது இடது காலுக்கும் உணர்வு புரிகின்றதா என மாணவர்களிடம் வினவுங்கள்.
- குளிர் மற்றும் சூடு, வன்மை, மென்மை என்பவற்றில் அவதானம் செலுத்தி அவற்றை உணர்ந்தவாறு நடப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

**படிமுறை 3**

- பலத்தோடு நடந்து செல்லும் போது தாம் பெற்ற அனுபவத்தை மாணவரிடம் வினவுங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் தமது அனுபவத்தைக் கூறுவதற்கு இடமளியுங்கள்.
- பலத்தோடு நடப்பதன் பயனை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- ஆரோக்கியமான வாழ்வுக்கு உறுதியாக நடப்பதால் கிடைக்கும் பயன்கள் பற்றி மாணவரை அறிவுறுத்துங்கள்.
- சிறுவயது முதல் உறுதியோடு செயற்பட வேண்டும் என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.
- மாணவருடன் நற்சிந்தனை தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- கிறிஸ்துவின் அன்பு, கருணை, இரக்கம் போன்ற குணாதிசயங்களை மேலோங்கச் செய்து

விளங்குங்கள்.

- பாடசாலையிலும் வீட்டிலும் அன்பு, கருணையை வெளிப்படுத்தும் விதம் பற்றிய கருத்துக்களை மாணவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் பாடலை மாணவருடன் இணைந்து தாளத்துடன் பாடுங்கள்.

தொடும் என் கண்களையே உம்மை நான் காண வேண்டுமே

இயேசுவே உம்மையே நான் காண வேண்டுமே

- கைளை உயர்த்தி மாணவருடன் இணைந்து பாடுங்கள்.

தொடும் என் கைகளையே உம் பணி செய்ய வேண்டுமே

இயேசுவே உம் பணி செய்ய வேண்டுமே

- மாணவர் காலணிகளை அணிந்து கொண்டபின் அவர்களை ஒழுங்காக வகுப்பறைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

**படிமுறை 4**

- கிறிஸ்து இயேசு எம்மோடு இருப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?
- மாணவர் மனதில் பின்வரும் மனப்பாங்குகளை மேலோங்கச் செய்யுங்கள்.
    - பிறரை அன்பு செய்தல்
    - மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளல்
    - எப்போதும் கருணை காட்டுதல்
    - நாம் யாரை அன்பு செய்ய வேண்டும்?
    - விசேடமாக எமது அன்பை எதிர்பார்ப்பவர்கள் யார்?
    - நாம் மற்றவர்களுடன் எதனைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்?
    - நாம் மற்றவர்களுடன் எவ்வாறு பகிர்ந்து கொள்ள வேண்டும்?
    - இயேசு கிறிஸ்து யாரிடம் அன்பு காட்டினார்?
    - இயேசு கிறிஸ்து யாரிடம் கருணை காட்டினார்?
- மாணவர் கருத்துக்களை வினவுங்கள். அவர்கள் கருத்துக்களைப் பாராட்டுங்கள்.
- அன்பு, கருணை, பகிந்துகொள்ளல் ஆகிய பண்புகள் இருக்கும் இடத்தில் இறைவன் இருக்கின்றார் என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.
- நாங்கள் இறைவன் பெயரால் ஒன்றுகூடியிருக்கும் போது எம்முடன் இறைவன் இருப்பார் என்பதை என்பதை விளக்கிக் கூறுங்கள்.
- மாணவரை அமைதியாக இருத்தி பின்வரும் வரிகளைத் தாளத்துடன் பாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**எனது மனம் சுத்தமானது சுத்தமானது சுத்தமானது**

**எனது மனம் அமைதியானது அமைதியானது அமைதியானது**

**எனது மனம் சாந்தமானது சாந்தமானது சாந்தமானது**

**எனது மனம் சுத்தமானது, அமைதியானது, சாந்தமானது**

**மாணவர் செயல்நூல் தொடர்பான ஆலோசனை**

- காணிக்கைப் பாடலை பாடுங்கள்.
- மாணவர்கள் பலத்துடன் நடக்கும் படத்தை நிறந்தீட்டுங்கள்.
- மாணவர் செயல்நூலில் உள்ள பாடலை மாணவருடன் இணைந்து தாளத்துடன் பாடுங்கள்.
- பூக்களை நிறந்தீட்டுமாறு அறிவுறுத்துங்கள்.
- மனதை ஒருநிலைப்படுத்திப் பக்தியோடு தாம் கொண்டு வந்த பூக்களை இயேசுவின் திருச்சுரூபம் அல்லது படத்தின் முன்னால் வையுங்கள்.

- **கணிப்பீடு:**

| **கணிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு நியம இல** | **தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர்** | |
|---|---|---|---|
| | | **நிலை 1** | **நிலை 2** |
| 11.1 நடந்து செல்லும் போது மிக நினைவாற்றலுடன் நடப்பார். | 11.1.1 | நடந்து செல்கையில் சரியான மெய்ந்நிலையில் பலத்துடன் நடப்பார். | நடந்து செல்கையில் சரியான மெய்ந்நிலையில் பலத்துடன் நடப்பதற்கு இடர்படுவார். |
| 11.2 நடந்து செல்கையில் கீழ்ப்பாதத்தில் உணர்கின்ற வன்மை, மென்மை, வரட்சி, ஈரம், சூடு, குளிர் ஆகியவற்றை இனங்கண்டு கொண்டு நடப்பார். | 11.2.1 | நடந்து செல்கையில் கீழ்ப்பாதத்தில் உணர்கின்றவற்றைக் கூறுவார். | நடந்து செல்கையில் கீழ்ப்பாதத்தில் உணர்கின்றவற்றைக் கூறுவதற்கு இடர்படுவார். |

உள்ளடக்கம்

இரண்டாம் தவணை

1 - திருவிவிலியம் எமது உன்னதமான நூல்

2 - தலவில புனித அன்னாள் தேவாலயம்

3 - இல்லத்தில் இறைவனைச் சந்திப்போம்

4 - திருக்குடும்பமும் எமது குடும்பமும்

5 - ஆசிரியரைக் கனம் பண்ணுவோம்

6 - ஒற்றுமையாகச் செயற்படுவோம்

# 1

## எண்ணக்கரு - நடத்தை விருத்தி

# திருவிவிலியம் எமது உன்னதமான நூல்

திருவிவிலியத்தை விளங்கி, இறைசெய்திகள் அடங்கிய மறைநெறியைப் புரிந்துகொண்டு, இறைவார்த்தையைச் செவிமடுத்து அதற்கு மதிப்பளித்துத் தமது வாழ்வை அர்த்தமுள்ளதாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 1. சமய விதிமுறைகள் மற்றும் சமயநெறி தொடர்பாகத் தமது நடத்தை விருத்திக்குப் பொருத்தமான முன்மாதிரிகளைப் பெற்றுக்கொள்வார். | பரலோக தந்தை | 1.4 சமய பாடம் தொடர்பாக அறிந்துகொண்டு அதனைப் பயன்படுத்துவார். | 1.4.2 மறைநெறியை இனங்கண்டு பயன்படுத்தல் |
| 2. திருச்சபைத் தந்தையர் / தாபகர்கள் தொடர்பான கதைகள் மற்றும் திருவிவிலிய கதைகள் அடிப்படையில் நடத்தை விருத்திக்கு உரிய விசேட பண்புகளை இனங்காண்பார். | பரலோக தந்தையின் திரு வார்த்தை | 2.4 விவிலிய கதைகளையும் பாடல்களையும் செவிமடுத்து அதனைத் தாளத்துடன் இசைப்பார். | 2.4.2 தாளத்துடன் இசைத்தல். |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம் (புனித லூக்கா 18:15-17 )
- வெள்ளை விரிப்பு, பூக்கள், விளக்கு , தீப்பெட்டி, மெழுகுதிரி
- “பக்திப் பாடல் புத்தகம் - பாடல் இல. 37
- செபம் அடங்கிய பதாகை
- மாணவர் செயல்நூலில், செயற்பாடு 1 இல் உள்ள பந்தி அடங்கிய பதாகை

**கற்றல் - கற்பித்தல் செயன்முறை**

**படிமுறை 1**

- திருவிவிலியத்தை கௌரவமான முறையில் வைப்பதற்குப் பொருத்தமான இடத்தைத் தயார் செய்துகொள்ளுங்கள்.
- பாடல் அடங்கிய பதாகையை வகுப்பின் முன்னால் காட்சிப்படுத்துங்கள்.
- ஆசிரியர் திருவிவிலியத்தை மரியாதையுடன் ஊர்வலமாகக் கொண்டு சென்று, அதனை முத்தம் செய்து தயார் செய்யப்பட்ட இடத்தில் வையுங்கள். ஏற்கனவே அறிவித்தவாறு பிள்ளைகள் பூக்கள் மற்றும் ஏற்றப்பட்ட மெழுகுதிரியுடன் ஆசிரியரின் பின்னால் அமைதியாகச் சென்று அவற்றைத் தயார் செய்யப்பட்ட இடத்தில் மெதுவாக வையுங்கள். ஊர்வலத்தின்போது பாடலைப் பாடியவாறு பக்தியுடன் செல்ல வேண்டும்.
- திருவிவிலியத்தில் புனித லூக்கா 18: 15-17 வரையிலான பகுதியை மாணவர் செவிமடுக்கும் வகையில் உரத்து வாசியுங்கள். (சிறுவர்களை என்னிடத்தில் வர விடுங்கள்)
- வாசிக்கக்கூடிய மாணவர்கள் இருப்பின் அவர்களில் மாணவனுக்கு அல்லது மாணவிக்கு திருவிவிலியத்தின் இப்பகுதியை மிகவும் பக்தியுடன் வாசிப்பதற்கு அறிவுறுத்துங்கள்.
- மாணவர்களுக்குப் புனித நற்செய்திக்கான விளக்கத்தை அளித்து, இறை வார்த்தையை எப்போதும் செவிமடுப்பதற்கு இடமளியுங்கள்.
- செபம் அடங்கிய கீழ்க்காணும் பதாகையை மாணவர் முன் காட்சிப்படுத்துங்கள்.
- இருகைகளைக் கூப்பி பக்தியுடன் மாணவர்களுடன் இணைந்து செபியுங்கள்.

**அன்பான இயேசுவே, இறைவார்த்தை வாயிலாக எம்முடன் பேசுகின்ற உமக்கு நன்றி**

**படிமுறை 2**

- இறைவார்த்தை அடங்கிய புனித விவிலியம் கிறிஸ்தவர்களாகிய எமது உன்னதமான நூல் என்பதை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- இறைவார்த்தை ஊடாக எமது வாழ்க்கை ஒளிமயமாக மாறுகின்ற விதம் பற்றி மாணவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறுங்கள்.
- மெழுகுதிரி ஏற்றுவதற்கான அர்த்தம் பற்றி விளக்கியபின், செயல்நூலில் தரப்பட்ட மெழுகுதிரிகளுக்கு நிறந்தீட்டுங்கள்.

**படிமுறை 3**

- மாணவர் செயல்நூலில் செயற்பாடு 2 மற்றும் செயற்பாடு 3 இல் உள்ள பந்தியை மாணவர்களுடன் இணைந்து வாசியுங்கள்.
- இப்பந்தியைப் போதிய விளக்கத்துடன் மாணவருடன் சேர்ந்து உரத்து வாசியுங்கள்.
- வாசிக்கக்கூடிய மாணவர்களை முன்னால் அழைத்து, உரத்து வாசிக்கச் செய்யுங்கள்.
- இவ்வாறு மாணவர் அதிகம் விரும்புகின்ற பந்தியைத் தெரிவு செய்து கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**மாணவர் செயல்நூல் தொடர்பான அறிவுறுத்தல்**

- இறைவார்த்தைக்கு மதிப்பளித்தவாறு மெழுகுதிரியை நிறந்தீட்டச் செய்யுங்கள்.
- திருவிவிலியத்தில் அடங்கியுள்ள பந்தியை மாணவருடன் இணைந்து உரத்து வாசியுங்கள்.
- "இறை வார்த்தைக்குச் செவிமடுப்போம்" எனும் வாக்கியத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

**கணிப்பீடு:**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| மறை நெறியை இனங்கண்டு அதனைப் பயன் படுத்துவார். | 1.4.2 | இறைவார்த்தைக்கு மதிப்பளித்து முன்மாதிரியாகப் பாடத்தைப் பயன்படுத்துவார். | இறைவார்த்தைக்கு மதிப்பளித்து முன்மாதிரியாகப் பாடத்தை ஓரளவாகப் பயன்படுத்துவார். | இறை வார்த்தைக்கு மதிப்பளித்து முன்மாதிரியாகப் பாடத்தை ஆசிரியர் உதவியுடன் பயன்படுத்துவார். | இறைவார்த்தைக்கு மதிப்பளித்து முன்மாதிரியாகப் பாடத்தைப் பயன்படுத்த இடர்படுவார். |
| உபதேச கதைகளை பாடல்களை செவிமடுத்து தாளத்துடன் பாடுவார். | 2.4.2 | தாளத்துடன் பாடுவார். | ஓரளவு தாளத்துடன் பாடுவார். | ஆசிரியர் உதவியுடன் தாளத்துடன் பாடுவார். | தாளத்துடன் பாட இடர்படுவார். |

# 2 எண்ணக்கரு - சமூக கலாசார புரிந்துணர்வு

## தலவில புனித அன்னாள் தேவாலயம

புனித யாத்திரைத் தலமான புனித அன்னம்மாள் தேவாலயம் அமைந்துள்ள இடம், அதன் சுற்றுச்சூழல் பற்றி நன்கு அறிந்துகொண்டு கௌரவமான முறையில் பக்தியோடு புனித யாத்திரையில் பங்குகொண்டு ஆன்மீக வளர்ச்சி பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 1. சமயத் தலங்களை இனங்கண்டு அவ்விடங்களில் மரியாதையுடன் நடந்துகொள்வார். | கத்தோலிக்கத் தேவாலயம் திருத்தலம் | 3.2 சமய திருத்தலங்களில் சமய வழிமுறையைப் பின்பற்றி நடப்பார். | 3.2.1 சமய விதிமுறைகளுக்கு ஏற்றவாறு நடப்பார். |
| 2. சமய, கலாசார திருவிழாகக்ளில் பங்குகொள்ளும் அனுபவத்தைப் பெறுவார். | கத்தோலிக்கத் தேவாலயம் திருத்தலம் | 4.1 விசேட ஆலய திருவிழாக்களில் வினைத்திறனுடன் பங்கேற்பார். | 4.1.1 வினைத் திறனுடன் பங்குபற்றுவார். |

**கற்பித்தல் வளங்கள் :**

- புனித அன்னம்மாள் தேவாலயம் மற்றும் புனித அன்னம்மாள், சுவக்கீன் ஆகியோர் அடங்கிய சித்திரங்கள்
- புனித அன்னம்மாள் பாடல் அடங்கிய ஒலிநாடா
- செபமாலை
- வழிபாட்டுக்கு அவசியமான உபகரணங்கள்
- தரவிறக்கம் செய்யப்பட்ட தலவில திருத்தலம் தொடர்பான காணொளி
- புனித அன்னம்மாள் பெயரில் அமைந்துள்ள் வேறு திருத்தலங்களின் படங்கள்

**கற்றல், கற்பித்தல் செயன்முறை**

**படிமுறை 1**

- அனைத்து மாணவர்களையும் ஒன்றுகூடச்செய்து புனித அன்னம்மாள் பாடலை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- செவிமடுத்த பாடலின் பொருள் என்னவென்பதை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- எல்லா மாணவர்களும் சரியான முறையில் நின்றவாறு பாடலைப் பாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.

**படிமுறை 2**

- தலவில தேவாலயத்தின் படம் அல்லது காணொளியை காட்சிப்படுத்துங்கள்.
- இத்திருத்தலத்தலம் தொடர்பான விபரங்களைக் கலந்துரையாடலுடன் முன்வையுங்கள்.

**பின்வரும் விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்துங்கள்**

- இந்த திருத்தலம் தலவில பிரதேசத்தில் அமைந்துள்ளது.
- இத்தேவாலய சுற்றுச் சூழலின் எழில் பற்றி மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள். உதா: அழகிய கடற்கரை
- புனித அன்னம்மாள் மற்றும் புனித சுவக்கீன் ஆகியோரது படங்களைக் காட்சிப்படுத்துங்கள். அவர்கள் பற்றிய விபரங்களை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- புனித அன்னம்மாள் இறைமகன் இயேசுவின் பாட்டி என்பதையும் மரியன்னையின் தாய் என்பதையும் விளக்குங்கள்.

**படிமுறை 3**

- பாத்திரமேற்று நடிப்பதற்காகத் தெரிந்து கொண்ட மாணவர்களை அறிவுறுத்துங்கள்.
- ஏற்கனவே அறிவித்தபடி தாம் ஏற்கும் பாத்திரங்களுக்குப் பொருத்தமான ஆடை, அணிகளை அணிந்தவாறு தல யாத்திரை செல்லும் நிகழ்வை நடிக்கச் செய்யுங்கள். யாத்திரையின் போது உரையாடலில் பயன்படுத்த வேண்டிய சொல்லாடல் பற்றி அறிவுறுத்துங்கள். அதற்கென பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்ளுங்கள்:
  - ஓட்டுனரின் இருக்கையில் அமருதல்
  - மாணவர்களை இருக்கைகளில் ஒழுங்காக அமரச் செய்தல்
  - நடத்துனர் பயணம் ஆரம்பிப்பதற்கான சமிக்ஞை அளித்தல்
  - ஆசிரியர் எடுத்துவந்த செபமாலையைக் கொண்டு செபமாலை வழிபாட்டில் மாணவரை ஈடுபடுத்தல்
  - பக்திப்பாடலைப் பாடி, செபம் செய்தவாறு பக்தியுடன் யாத்திரையில் பங்குபற்றல்
  - வணக்கத்தலங்களில் சமய விதிமுறைகளுக்கேற்ப நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்குமுறை பற்றி மாணவர்களை அறிவுறுத்துங்கள்
  - பேருந்தில் இருந்து இறங்கி ஆலயத்திற்குச் செல்லுதல்

- ஒன்றாக இணைந்து செபித்த பின்னர், புனித அன்னம்மாள் பாடலைப் பாடுதல்
- தேவாலயத்தின் அழகிய சுற்றுச் சூழலுக்கு அழைத்துச் செல்லல்
- எடுத்து வந்த உணவை உட்கொள்ளல் பின்னர் சூழலைச் சுத்தம் செய்தல்
- பேருந்தின் உள்ளே சென்று அமர்ந்து இறைவனுக்கு நன்றிகூறி பாடசாலைக்குச் செல்லுதல்.

- நடிப்பில் ஈடுபட்ட தல யாத்திரை தொடர்பான விபரங்களை மாணவர்களிடம் கேட்டறிந்து கரும்பலகையில் குறித்துக் கொள்ளுங்கள். மாணவரை மதிப்பீட்டுக்கு உட்படுத்துங்கள்.
- செயல்நூலில் தரப்பட்ட ஒப்படையைப் பூர்த்தி செய்யுங்கள்.
- புனித அன்னம்மாள் பெயரில் அமைந்துள்ள ஏனைய தேவாலயங்களின் படங்களைக் காட்சிப்படுத்தி அவை அமைந்துள்ள இடங்களின் பெயர்களை இணைப்பதற்கு உதவுங்கள்.

(உதா: பலகதுர / வத்தளை / குரண / வங்காளை......) தமது பிரதேசத்திற்கு உரிய தலத்தையும் இதுபோன்று பெயரிடுங்கள்.

**மாணவர் செயல்நூல் தொடர்பான அறிவுறுத்தல்**

- தரப்பட்ட அறிவுறுத்தலின்படி செயற்பாடு 1,2,3,4 ஆகியவற்றில் ஈடுபடுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 3.2 வணக்கத் தலங்களில் சமய விதிமுறைக் கேற்ப நடந்து கொள்வார் | 3.2.1 | சமய விதிமுறைக் கேற்ப நடந்து கொண்ட நிகழ்வைக் கூறுவார். | சமய விதிமுறைக் கேற்ப நடந்து கொண்ட நிகழ்வை ஓரளவு கூறுவார். | சமய விதிமுறைக் கேற்ப நடந்து கொண்ட நிகழ்வை ஆசிரியர் உதவியுடன் கூறுவார். | சமய விதிமுறைக் கேற்ப நடந்து கொண்ட நிகழ்வைக் கூறுவதற்கு இடர்படுவார். |
| 4.1 விசேட சமய உற்சவங்க-ளில் வினைத்-திறனுடன் பங்கு-பற்றுவார். | 4.1.1 | ஆலயத்தில் உரத்து செபம் செய்வார். | ஆலயத்தில் ஓரளவு உரத்து செபம் செய்வார். | ஆலயத்தில் பிறர் உதவியுடன் உரத்து செபம் செய்வார். | ஆலயத்தில் உரத்து செபம் செய்வதற்கு இடர்படுவார். |

# 3

**எண்ணக்கரு - நன்னடத்தை, ஒழுக்கம் மற்றும் நல்லிணக்கம்**

## இல்லத்தில் இறைவனைச் சந்திப்போம்

குடும்பத்தில் அனைவரும் ஒன்றாகச் செபிக்க வேண்டும் என்பதையும் வணக்கத் தலங்களுக்குச் சென்று அங்கும் இறைமகன் இயேசுவை சந்திக்கமுடியும் என்பதையும் விளங்கிக்கொண்டு குடும்பமாக இணைந்து சிறப்பான வழிபாட்டு முறையைப் பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 5. வணக்கத் தலங்களில் சரியான வழிபாட்டு முறைகளையும் நற்பழக்க வழக்கங்களையும் அனுசரிப்பார். | தலயாத்திரை மற்றும் வழிபாட்டுமுறை | 5.1 வணக்கத் தலங்களில் அனுசரிக்க வேண்டிய சரியான வழிபாட்டு முறைகளை இனங்காண்பார். | 5.1.1 சரியான வழிபாட்டு முறையைக் கூறுதல். |
| 6. சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது சரியான வழிபாட்டு முறைமையையும் நற்பழக்க வழக்கங்களையும் வெளிக்காட்டுவார். | சரியான வழிபாட்டுமுறை மற்றும் அவயவங்களின் நிலை | 6.4 சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது பொருத்தமானவாறு சொற்களைப் பயன்படுத்துவார். | 6.4.1 சரியான சொற்களைப் பயன்படுத்தல். |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம் - திருப்பாடல் 5:3
- இறைவார்த்தை அடங்கிய வாக்கியம் எழுதப்பட்ட கடதாசி
- குடும்பத்தில் அனைவரும் இணைந்து செபிக்கும் படம்
- துதிப்பாடல் எழுதப்பட்ட பதாகை
- சிறுவர் பாடல் அடங்கிய ஒலிநாடா
- நடனத்துக்கு ஏற்ற உடைகள்
- வர்ணம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை**

**படிமுறை1**

- “நல்லதொரு செய்தியினை” பாடல் அடங்கிய ஒலிநாடாவைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- பாடலில் உளள் கருத்துக்கள் தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- பாடலை அபிநயத்துடன் பாடுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

பாடநூலில் உள்ள பாடலை அழகாகப் பாடச் செய்யுங்கள். பின்னர் நடனத்தில் ஈடுபடுத்துங்கள். கீழ்க்காணும் பாடல் வரிகளைச் செவிமடுக்க வழிப்படுத்துங்கள். அதன் பொருளை விளக்கிக் கூறுங்கள்.

ஓடி ஓடி ஆடுவோம்

ஒன்றுகூடிப் பாடுவோம்

காக்கை குருவி போலவே

கலந்து நாமும் வாழுவோம்

குயிலும் மயிலும் போலவே

கூடி நாமும் வாழுவோம்

அண்ணன் தம்பி போலவே

அன்பு செய்து வாழுவோம்

**படிமுறை 2**

- பின்வரும் உரையாடலில் ஈடுபடக்கூடிய மாணவர் உதவியுடன் கலந்துரையாடலை முன்வையுங்கள்.
- ஒவ்வொரு பாத்திரத்திற்கும் ஏற்றவாறான அங்க அசைவுகளுடன் உரையாடலை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் முன்வைப்புகளைப் பாராட்டுங்கள். அது தொடர்பான கலந்துரையாடலில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- குடும்பமாக இணைந்து செபிக்கின்ற படத்தை மாணவர் முன் காட்சிப்படுத்துங்கள்.
- குடும்பமாக இணைந்து செபிப்பதன் முக்கியத்துவம் பற்றி மாணவர்களுக்கு தெளிவுபடுத்துங்கள்.
- தமது குடும்பத்தினருடன் இணைந்து செபித்த சந்தர்ப்பம் பற்றி மாணவருடன் உரையாடுங்கள்.

உதா: எமது பாட்டிக்குச் சுகயீனம் ஏற்பட்டது. நாம் அனைவரும் இணைந்து செபித்தோம்.
அக்கா பரீட்சைக்கு சென்றபோது நாம் எல்லோரும் இணைந்து செபித்தோம்.

அப்பா புதிய வேலைக்குச் சென்றபோது / வெளிநாடு சென்ற போது அனைவரும் இணைந்து செபித்தோம்.

- இவ்வாறு ஒவ்வொரு பிள்ளையும் தான் பெற்ற அனுபவத்தை முன்வைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

- குடும்பச் செபத்தின் வாயிலாக மாணவர் பெற்ற அனுபவங்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தேவாலயத்திற்குச் சென்று செபித்த சந்தர்ப்பம் பற்றி மாணவரிடம் வினவுங்கள்.

**பெற்றோர் பிள்ளைகளிடையே உரையாடல்**




நான்

நாம் எப்படி எமது வீட்டில் இறைமகன் இயேசுவை சந்திக்கலாம்?




அம்மா

நற்செயல்களைச் செய்யும் இடத்தில் இறைமகன் இயேசுவை சந்திக்கலாம் மகளே



அண்ணா

இறைமகன் இயேசுவை சந்திப்பதற்கு வீட்டில் நாம் என்ன செய்ய வேண்டும்?



அப்பா

குடும்பத்தில் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். பிறருக்கு உதவி செய்ய வேண்டும்.



அக்கா

அப்படியானால் அம்மா நாம் செபிப்போம். தம்பி தொலைக்காட்சி பார்க்கிறான். அவனையும் அழைப்போம். நான் பூக்களைப் பறிக்கிறோம். விளக்கு ஏற்றுகிறேன்

**படிமுறை 3**

- வீட்டிலும் தேவாலயத்திலும் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுசேர்ந்து சரியான முறையில் முழந்தாளிட்டு இறைவனை வணங்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- இறைவார்த்தை அடங்கிய தாளைக் காட்சிப்படுத்துங்கள்.

**இறைவா, அதிகாலையில் எனது மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும். திருப்பாடல் 5:3**



- இந்த இறைவார்த்தையை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- அதிகாலை எழுந்தவுடன் இறைவனை வணங்குவது சிறந்த பழக்கம் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- அதிகாலைச் செபத்தை இறைவன் மிகவும் விரும்புகின்றவர் என்பதால் காலையில் செபிக்க வேண்டிய வழிமுறையை எடுத்துக் காட்டுங்கள்.
- செயல்நூலில் உள்ள செயற்பாட்டைப் பூர்த்தி செய்ய வழிகாட்டுங்கள்.

**மாணவர் செயல்நூல் தொடர்பான அறிவுறுத்தல்:**

- பாடலைப் பாடியவாறு அபிநயம் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- படத்தைப் பார்த்து கருத்துக்களைக் கூறச்செய்யுங்கள்.
- ஒரே குடும்பமாக இறைவனை வணங்கிய பின்னர் விளக்குகளை நிறந்தீட்டுங்கள்.

**கணிப்பீடு**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 5.1 வணக்கத் தலங்களில் கடைப்பிடிகக் வேண்டிய சரியான வழிமுறை களை இனங்கண்டு கொள்வார். | 5.1.1 | ஒரே குடும்பமாக செபிக்க வேண்டிய சரியான விதிமுறைகள் பற்றிக் கூறுவார். | ஒரே குடும்பமாக செபிக்க வேண்டிய சரியான விதிமுறைகள் பற்றி ஓரளவு கூறுவார். | ஒரே குடும்பமாக செபிக்க வேண்டிய சரியான விதிமுறைகள் பற்றி ஆசிரியர் உதவியுடன் கூறுவார். | ஒரே குடும்பமாக செபிக்க வேண்டிய சரியான விதிமுறைகள் பற்றிக் கூற இடர்படுவார். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6.4 சமய வழிபாடுகளில் ஈடுபடும்போது சரியான சொற்களை பயன்படுத் துவார். | 6.4.1 | சமய வழிபாடுகளில் ஈடுபடும் போது சரியான சொற்பிரயோ கத்தைப் பயன்படு த்துவார். | சமய வழிபாடுகளில் ஈடுபடும் போது ஓரளவு சரியான சொற்பிர யோகத்தைப் பயன்படு த்துவார். | சமய வழிபாடுகளில் ஈடுபடும் போது ஆசிரியர் உதவியுடன் சரியான சொற் பிரயோ கத்தைப் பயன்ப டுத்துவார். | சமய வழிபாடுகளில் ஈடுபடும் போது சரியான சொற் பிரயோகத்தைப் பயன்படுத்த இடர்படுவார். |

# 4 எண்ணக்கரு - நடத்தை விருத்தி

## திருக்குடும்பமும் எமது குடும்பமும்

திருக்குடும்பம் பற்றி அறிந்துகொண்டு சிறந்த ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் இருக்க வேண்டிய விசேட பண்புகளை எடுத்துக்காட்டி, குடும்பத்தில் அனைவரையும் அன்பு செய்து, நல்ல வார்த்தைகளைப் பேசி வாழுகின்ற வாழ்க்கை முறையே இங்கு எதிர்பாரக்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 2. திருச்சபைத் தந்தையர், தாபகர்கள் தொடர்பான கதைகள் மற்றும் விவிலிய கதைகளின் அடிப்படையில் நடத்தை விருத்திக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங்கண்டு கொள்வார். | கிறிஸ்தவ குணநலன்கள் | 2.2 சமயக் கதைகள் வாயிலாக திருச்சபைத் தந்தையர் விசேட பண்புகளைக் கூறுவார். | 2.2.1 விசேட பண்புகளைக் கூறுதல். |
| | கிறிஸ்தவ குணநலன்கள் | 2.3 சமயக் கதைகள் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகளைக் கூறுவார். | 2.3.1 முன்மாதிரியைக் கூறுதல். |

**கற்றல் வளங்கள்:**

- திருக்குடும்பத்தின் படம்
- குடும்பம் ஒன்றின் படம்
- கிறிஸ்தவ பாடல் புத்தகம்
- புனித விவிலியம் - (எபேசியர் 6 : 1)
- எபேசியர் 6 : 1 பந்தி அடங்கிய பதாகை
- படத்தை நிறந்தீட்டுவதறகு தேவையான வர்ணங்கள்

**கற்றல் - கற்பித்தல் செயன்முறை**

**படிமுறை 1**

- மாணவர் செயல்நூலில் உள்ள திருக்குடும்பத்தின் படம் தொடர்பில் மாணவர் அவதானம் செலுத்தச் செய்யுங்கள்.
- மாணவரிடம் பின்வரும் வினாவை வினவுங்கள்.
    - இப்படத்தில் இருப்பவர்களை உங்களுக்குத் தெரியுமா?

மாணவர் தரும் கருத்துக்களைப் பாராட்டுங்கள்.


- இறைமகன் இயேசுவின் வளர்ப்புத் தந்தை பெயர் உங்களுக்குத் தெரியுமா?
- இறைமகன் இயேசுவின் தாயின் பெயர் தெரியுமா?
- இறைமகன் இயேசுவின் தாய் மற்றும் வளர்ப்புத் தந்தையின் பெயர்களை பல தடவைகள் கூறச் செய்யுங்கள்.
- மாணவர் செயல்நூலில் காணப்படும் பெற்றோரை வணங்குகின்ற படத்தை நன்றாக அவதானிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பெற்றோரை வணங்குதல், அவர்களது ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளல் மிகவும் பெறுமதியான விடயம் என்பதை மாணவர் உணரச் செய்யுங்கள்.
- பாடசாலை செல்வதற்கு முன்னர் (விசேடமாக) / பிரயாணம் செல்வதற்கு முன்னர் தினமும் பெற்றோரை / முதியோரை வணங்கி ஆசிர்வாதம் பெற்றுக்கொள்வது வாழ்க்கையில் சிறந்த நற்பழக்கம் என்பதை மாணவருக்கு அறிவுறுத்துங்கள்.
- பெற்றோரை / பாதுகாவலரை தாம் வாழும் இடத்தில் தம்மைப் (சிறுவர் இல்லம்) பராமரிப்பவரை வணங்கி, இறை ஆசீரைப் பெற்றுக்கொள்வது முக்கியமானது என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

**படிமுறை 2**

- தமக்காகப் பெற்றோர் / பாதுகாவலர் செய்கின்ற சேவைகளைப் போற்றி "நன்றி" எனும் வார்த்தையை தினமும் கூறவேண்டியது அவசியம் என்பதை உணரச் செய்யுங்கள்.
- வாய்மொழியாகக் கூற வழிப்படுத்துங்கள்.

  உதா: சுவையான உணவை எனக்குச் சமைத்துத் தந்தமைக்கு நன்றி அம்மா. பாடசாலை செல்லும்போது எனது புத்தகப்பையைக் கொண்டுவந்தமைக்கு நன்றி அப்பா.

  (மாணவரது குடும்பப் பின்னணியை அறிந்து அவர்கள் மனம் நோகாதவாறு பெற்றோரைப் பற்றி உரையாடுவதற்கு முயற்சி செய்யுங்கள்)



- மாணவருக்குப் பெற்றோர் செய்த உதவிகள் பற்றி வினவுங்கள்.

- தமது குடும்பத்தை / பெற்றோர்களை நினைத்து செபம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பெற்றோர் / பாதுகாவலர்கள் எமக்குச் செய்கின்ற உபகாரங்கள் பற்றி மாணவர்களிடம் வினவுங்கள்.
- மாணவர் கருத்துக்களுக்கு முதலிடம் அளியுங்கள்.

**படிமுறை 3**

- குடும்பத்தில் அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கின்ற படத்தைக் காண்பித்து, மாணவர் அவரவர் கருத்துக்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தமது வீட்டில் தான் வாழும் இடத்தில் (சிறுவர் இல்லம்) பெற்றோர் / பாதுகாவலர் ஆகியோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நடிப்பின் வாயிலாக முன்வைப்பதற்கும் அவை தொடர்பாக உரத்துக் கூறுவதற்கும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

  உதா: வீட்டைச் சுத்தம் செய்வது போன்று நடித்தல் - நான் வீட்டைச் சுத்தம் செய்கிறேன். தலைமுடியைச் சீவியவாறு - நானே எனது தலைமுடியைச் சீவு கிறேன்.

  ஆடைகளைக் கழுவியவாறு - நானே எனது ஆடையைக் கழுவுகிறேன்.



**படிமுறை 4**

- "உதிரத்தைப் பாலாய் ஊட்டி வளர்த்த அம்மா" என்ற பாடலை உணர்வுபூர்வமாகச் செவிமடுப்பதற்கு ஆவன செய்யுங்கள்.
- மாணவர்களை எழும்பி நிற்குமாறு கூறி, மரியாதையுடன் இப்பாடலைப் பாடச் செய்யுங்கள்.
- மாணவர்கள் தமது பெற்றோர் / பாதுகாவலர் / முதியோர்கள் தொடர்பான கருத்துக்களைக் கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள். அவர்களது கருத்துக்களைப் பாராட்டுங்கள்.
- திருவிவிலியத்தில் எபேசியர் 6:1 பகுதி அடங்கிய பதாகையை மாணவர் முன்னால் உரத்து வாசியுங்கள்.

  **பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடவுங்கள். இதுவே கிறிஸ்துவுக்கு ஏற்புடையது. எபேசியர் 6:1**

- ஒவ்வொரு வார்த்தையையும் மிகவும் கண்ணியமான முறையில் மாணவர்களுடன் இணைந்து வாசியுங்கள்.
- பெற்றோருக்குப் பணிந்து நடக்க வேண்டும் என இறைவன் எம்மிடம் எதிர்பார்க்கின்றார் என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.
- பெற்றோரை மதித்து நடப்பதன் முக்கியத்துவம் பற்றி மாணவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.

**மாணவர் செயல்நூல் தொடர்பான அறிவுறுத்தல்:**

- படத்தைப் பார்த்து ஒரு வாக்கியம் கூறச்செய்யுங்கள்.
- படத்தை நிறந்தீட்டச் செய்யுங்கள்.

**கணிப்பீடு**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.2 சமயக் கதைகள் வாயிலாக திருச்சபைத் தந்தையர் விசேட பண்புகளைக் கூறுவார். | 2.2.1 | திருக்குடும்பம் தொடர்பான கதைகளைச் கூறுவார். | திருக்குடும்பம் தொடர்பான கதைகளை ஓரளவு கூறுவார். | திருக்கு டும்பம் தொடர்பான கதைகளை ஆசிரியர் உதவியுடன் கூறுவார். | திருக்குடும்பம் தொடர்பான கதைகளைச் கூற இடர்படுவார். |
| 2.3 சமயக் கதைகள் வாயிலாகப் பெற்ற முன்மாதிரி களைக் கூறுவார். | 2.3.1 | இறைமகன் இயேசுவி டமிருந்து பெற்றுக் கொண்ட முன்மா திரியைக் கூறுவார். | இறைமகன் இயேசுவி டமிருந்து பெற்றுக் கொண்ட முன்மா திரியை ஓரளவு கூறுவார். | இறைமகன் இயேசுவி டமிருந்து பெற்றுக் கொண்ட முன்மா திரியை ஆசிரியர் உதவியுடன் கூறுவார். | இறைமகன் இயேசுவி டமிருந்து பெற்றுக் கொண்ட முன்மா திரியைக் கூற இடர்படுவார். |

# 5

## எணணக்கரு - நன்னடத்தை, ஒழுக்கம் மற்றும் நல்லிணக்கம்

## ஆசிரியரைக் கனம் பண்ணுவோம்.

ஆசிரியரைக் கனம் பண்ணி, அவருக்குக் கீழ்ப்படிந்து, மதிப்பளித்து, உணர்வுபூர்வமாக அவருக்கு நன்றி செலுத்துவதன் வாயிலாக ஒழுக்கம் மற்றும் விழுமியங்களைக் கடைப்பிடிப்பார்.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 7. நல்லதொரு பிள்ளை என்றவகையில் இருக்க வேண்டிய நற்குணங்கள் / பழக்கவழக் கங்களைக் கடைப்பிடிப்பார். | ஒழுக்கம் மற்றும் நல்லிணக்கம் | 7.1 நல்லதொரு சிறந்த பிள்ளை என்றவ கையில் கடைப்பிடிக்க வேண்டிய நற்குணங்களை இனங்காண்பார். | 7.1.1 சரியான முறையில் இனங்காணல். |
| | சிறந்த ஒரு பிள்ளையின் நற்பழக்க வழக்கங்கள் | 7.2 சிறந்த ஒரு பிள்ளையாகச் செயற்படுவார். | 7.3.1 சரியான முறையில் நடந்துகெ-ாள்ளல். |

**கற்றல் வளங்கள்:**

- வெற்றிலை / தோட்டத்தில் பறித்த மலர்கள்
- ஆசிரியர் பற்றிய பாடல் அடங்கிய ஒலிநாடா
- வர்ணக் கடதாசி, பசை, கத்தரிக்கோல்
- வாழ்த்து மடல் தயாரிப்பதற்கு அவசியமான பொருட்கள்
- சிறிய மணி (ஓசை எழுப்பக் கூடியவை)
- ஆசிரியரின் சேலையில் வரைவதற்கு ஏற்ற சித்திரங்கள்



**கற்றல்- கற்பித்தல் செயன்முறை:**

**படிமுறை 1**

- சிறிய மணியை ஒருதடவை ஒலித்து, மாணவர் அவதானத்தை ஆசிரியர் பக்கம் செலுத்தச் செய்யுங்கள்.
- ஆசிரியை தம்மைப் பற்றிய சுருக்கமான அறிமுகம் ஒன்றை மாணவர் முனனால கூறுங்கள்.
- முதலில் ஆசிரியர் தனது பெயரையும் ஊரையும் கூறுங்கள்.
- அதன் பின்னர் தான் வகுப்பாசிரியர் / பாட ஆசிரியர் என்பது பற்றி விளக்கிக் கூறுங்கள்.
- ஆசிரியரது படம் ஒன்றை மாணவர்களுக்கு வழங்கி அதில் அவரது சேலையில் மலர்களை ஒட்டி அழகுபடுத்த ஆவன செய்யுங்கள்.

**படிமுறை 2**

- வகுப்பில் மாணவர் அனைவரையும் எழுந்து நிற்கச் செய்யுங்கள். முன்னரே கூறியவாறு மாணவர் எடுத்து வந்த வெற்றிலை / மலர்களை ஆசிரியருக்கு வழங்கி அவரை வணங்கி அவரது ஆசியைப் பெற்றுக்கொள்வதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஏனைய ஆசிரியர்களை அறிமுகம் செய்யுங்கள். அவர்களையும் வணங்கி ஆசிபெறுவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- தமது வகுப்பின் அருகில் உள்ள சமாந்தர வகுப்புகளில் / வேறு வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களை அறிமுகம் செய்யுங்கள். அவ்வாசிரியர்களை வணங்கி, அவர்களது ஆசிரிரைப் பெறுவதற்கும் மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படிமுறை 3**

**ஆசிரியருக்கான பாடல்**

அன்பைக்காட்டி அறிவை வளர்க்கும் ஆசிரியர்

பாசம் காட்டி பாடம் கூறும் ஆசிரியர்

பாலர் எமது உயர்விலே மகிழ்ச்சி கொள்ளும் ஆசிரியர்

கதைகள் பல சொல்லி எம்மை கவருகின்ற ஆசிரியர்

ஆண்டவராம் இறைவனை நாம் அறியச் செய்யும் ஆசிரியர்

- மாணவர்களை வகுப்பறையின் உள்ளே அல்லது வெளியான இடம் ஒன்றிற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- தயார் செய்யப்பட்ட பாடலைச் செவிமடுப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்னர் மீண்டும் ஒருதடவை பாடலை செவிமடுக்கச் செய்து அபிநயத்துடன் பாடுவதற்கு வழிகாட்டுங்கள்.

**படிமுறை 4**

- செயற்பாடு 2 இன்படி வகுப்பை மீண்டும் சுத்தம் செய்வதற்கு வழிகாட்டுங்கள்.
- விளக்கை ஏற்றி, வகுப்பறையில் உபகரணங்கள், தண்ணீர் போத்தல்கள் மற்றும் பைகள் என்பவற்றை ஒழுங்காக வைக்குமாறு கூறுங்கள்.
- மாணவர்களை எழும்பி நிற்கச் செய்து அனைவரும் ஒன்றாக கைகளை கூப்புமாறு கூறுங்கள்.
- கண்களை மூடி ஆசிரியருக்காக செபிப்பதற்குத் தயார் செய்யுங்கள்.
- தமக்குக் கற்பிக்கின்ற எல்லா ஆசிரியர்களுக்காகவும் செபிக்க வேண்டியதன் அவசியம் பற்றி தெளிவுபடுத்துங்கள்.
- எப்போதும் அவர்களுக்காக செபிப்பதன் வாயிலாக நன்றியை வெளிக்காட்ட முடியும் என்பதை விளக்குங்கள்.
- மார்புக்கு நேராக கைகளைக் கூப்பி செபிக்க வேண்டிய முறை பற்றிக் கூறுங்கள்.
- பின்வரும் செபத்தை ஆசிரியர் கூறிய பின்னர் மாணவர்களையும் கூறச் செய்யுங்கள். (இது போன்ற ஆக்கபூர்வமான செபம் ஒன்றைத் தயார் செய்து கொள்ளுங்கள்)

**அன்பின் இறைவா! எமது அன்பான ஆசிரியருக்காக நாங்கள் உம்மை நன்றியோடு துதிக்கிறோம். எமக்கு கற்பிக்கும் எமது ஆசிரியரை ஆசீர்வதியும் ஆண்டவரே. அவருக்குத் தேவையான உடல் ஆரோக்கியத்தை அளித்தருளும். ஆமென்.**

- பாடநூலில் உள்ள செயற்பாடு 3 இல் மாணவரை ஈடுபடுத்துங்கள்.

**படிமுறை 5**

- முன்னரே அறிவித்தவாறு வாழ்த்து அட்டையொன்றை நிர்மாணிப்பதற்கு மாணவர்கள் எடுத்து வந்த பொருட்களை எடுக்குமாறு கூறுங்கள். எடுத்து வந்த பொருட்களைப் பயன்படுத்தி அழகிய வாழ்த்து அட்டை ஒன்றை ஆக்குவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- அனைத்து மாணவர்களது ஆக்கங்களையும் பாராட்டுங்கள்.
- ஆசிரியருக்குத் தமது அன்பை வெளிக்காட்டுவதற்கு தாம் தயாரித்த வாழ்த்து அட்டையை அவருக்கு அளிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**மாணவர் செயல்நூல் தொடர்பான அறிவுறுத்தல்**

- இறைவனது அன்பை எமக்கு எடுத்துக்கூறும் ஆசிரியரது படத்தை நிறந்தீட்டுங்கள்.
- படத்தைப் பார்த்தவாறு பொருத்தமான பந்தியை உரத்து வாசியுங்கள்.
- ஆசிரியரை பணிந்து வணக்கம் சொல்வதற்கேற்ற பின்னணியை உருவாக்குங்கள். ஆசிரியருக்கு இறைவன் ஆசீர் அருள வேண்டுமென நம்பிக்கையோடும் பக்தியோடும் செபியுங்கள்.

**கணிப்பீடு**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 7.1 சிறப்பான ஒரு பிள்ளை என்றவகையில் கடைப்பிடிக்க வேண்டிய குணநலன்களை இனங்கண்டு கொள்வார். | 7.1.1 | சிறப்பான ஒரு பிள்ளை என்றவகையில் கடைப்பிடிக்க வேண்டிய விழுமிய ங்களை இனங்கா ண்பார். | சிறப்பான ஒரு பிள்ளை என்றவ கையில் கடைப்பிடிகக் வேண்டிய விழுமிய ங்களை ஓரளவு இனங்கா ண்பார். | சிறப்பான ஒரு பிள்ளை என்றவ கையில் கடைப் பிடிக்க வேண்டிய விழுமிய ங்களை ஆசிரியர் உதவியுடன் இனங்கா ண்பார். | சிறப்பான ஒரு பிள்ளை என்றவ கையில் கடைப்பிடிகக் வேண்டிய விழுமிய ங்களை இனங்காண இடர்படுவார். |
| 7.2 சிறப்பான ஒரு பிள்ளையாகச் செயற்படுவார். | 7.3.1 | சிறப்பான ஒரு பிள்ளையாகச் சரியான முறையில் செயற்படுவார். | சிறப்பான ஒரு பிள்ளையாக ஓரளவு செயற்ப டுவார். | சிறப்பான ஒரு பிள்ளையாக ஆசிரியர் உதவியுடன் செயற்படுவார். | சிறந்த ஒரு பிள்ளையாகச் செயற்படு வதற்கு இடர்படுவார். |

# 6 எண்ணக்கரு - சூழல் நேயம்
## ஒற்றுமையாகச் செயற்படுவோம்

தேவாலயத்தில், வீட்டில் மற்றும் பாடசாலை மைதானத்தில் சுற்றுச்சூழலைச் சுத்தமாக வைப்பதற்கு இணைந்து செயலாற்ற வேண்டும் என்பதை விளங்கிக்கொள்ளல், வெற்றி தோல்வியை மகிழ்வுடன் ஏற்றல், பொறுமையுடன் செயற்படுதல் மற்றும் சுற்றுச் சூழலின் அழகைப் பேணுதல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 8. தமது சுற்றுச் சூழலைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைப்பதற்காகச் செயற்படுவார். | ஒத்துழைப்பு | 8.2 தமது சுற்றுச் சூழலை அழகாகவும் ஒழுங்காகவும் வைப்ப தற்காகச் செயற்படுவார். | 8.2.2 ஆக்கபூர்வமான தன்மை |
| 9. வேதபாரகர்கள் (திருச்சபை தந்தையர்) இயற்கையின் பெறுமானத்தை மேலோங்கச் செய்த முறை பற்றி அறிந்து கொண்டு செயற்படுவார். | இயற்கை | 9.1 சுற்றுச் சூழலின் பெறுமதியைக் கதைகள், கவிதை வாயிலாக அறிந்து கொள்வார். | 9.1.3 கருத்துக்களை முன்வைத்தல் |

**கற்றல் வளங்கள்:**

- சிறுவர் பாடல் - ஓடி ஓடி ஆடுவோம்
- முழுப்பாடலும் அடங்கிய பதாகை
- கொடி தயாரிப்பதற்குத் தேவையான உபகரணங்கள்
- ஒற்றுமையாக வேலை செய்கின்ற சித்திரம் அடங்கிய பதாகை
- நடிப்புக்கு ஏற்ற உடைகள்
- திருச் சொரூபத்திற்கு முன்னால் வைப்பதற்கான பூக்கள்
- புத்தக மூலையில் வைப்பதற்கான சமயம் சார்ந்த புத்தகங்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை**

**படிமுறை 1**

- பின்வரும் பாத்திரங்களை ஏற்று நடிக்கும் மாணவர்களை முன்னால் அழையுங்கள்.
- வீட்டில் இடம்பெறும் பின்வரும் சம்பவங்களை நடிப்பதன் வாயிலாக முன்வைக்கச் செய்யுங்கள்.
  அப்பா - நாங்கள் இலைக்கஞ்சி தயாரிப்போம்

அம்மா - சரி தயாரிப்போம். எனக்கு உதவி செய்வீர்களா?

அண்ணா - ஆம் அம்மா, நான் தேங்காய் துருவுகிறேன்.

தங்கை - நான் இலைகளைத் தெரிவு செய்கிறேன்.

அப்பா - நான் இலைகளை இடித்துத் தருகிறேன்.

அம்மா - இதுபோலவே உதவி செய்தால் இலைக்கஞ்சி தயாரிப்பது இலகுவாகும்.

அப்பா - எனது வேலை முடிந்தது. நான் கோப்பைகளைக் கழுவி எடுக்கிறேன்.

அக்கா - நானும் அப்பாவுக்கு உதவி செய்கிறேன்.

தம்பி - அம்மா, இதோ நான் விறகையும் கொண்டு வந்துவிட்டேன்

அம்மா - எல்லோரும் உதவி செய்ததால் இன்று இலைக்கஞ்சி சுவையாக இருக்கும்.

அப்பா - இதோ, நான் அனைவருக்கும் கோப்பைகளில் இலைக்கஞ்சியை ஊற்றினேன்.

தங்கை - அப்பா, உணவு உண்பதற்கு முன் செபிக்க வேண்டும் என ஆசிரியர்

கூறினார், வாருங்கள் நாம் அனைவரும் செபிப்போம்.

- இந்த நிகழ்வை உடல் அசைவுகளுடன் முன்வைப்பதற்கு மாணவர்களுக்கு உதவுங்கள்.
- நடிப்பில் கலந்து கொண்ட மாணவர்களைப் பாராட்டுங்கள்.
- குடும்பத்தில் இதுபோன்று ஒற்றுமையாக வேலை செய்த சந்தர்ப்பம் பற்றி வினவுங்கள்.
- மாணவர் செயல்நூலில் அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தங்கை, தம்பி இணைந்து ஒற்றுமையாகச் செயற்படுகின்ற படத்தை மாணவர் அவதானித்துக் கருத்துக்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**படிமுறை 2**

- வருகை தந்த மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப குழுக்களாக ஆக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் பின்வரும் செயற்பாட்டை வழங்குங்கள்.
- இறைமகன் இயேசுவின் திருவுருவம் வைக்கும் இடம், புத்தக மூலையை தயார் செய்தல், ஆக்கப் பலகை தயார் செய்தல், குழுக்களை அமைத்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை மாணவர்களுக்குப் பகிர்ந்து அளியுங்கள்.
- இச்செயற்பாடுகளில் குழுவாகச் செயற்படுமாறு மாணவர் குழுக்களிடம் கூறுங்கள்.
- மாணவர் செயற்பாடுகளைப் பாராட்டுங்கள்.

- பின்வரும் பாடலைச் செவிமடுப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தமக்கு உரிய பாத்திரம் போன்று நடித்து பாடலில் உள்ளவாறு வினா எழுப்புதல்.
- பாடலுக்கு ஏற்றவாறு இறைமகன் இயேசுவைப் போல் விடையளித்து நடித்தல்.

**சின்னச் சின்ன வயதிலே**

**செல்லமான வயதிலே சொன்ன பேச்சை கேட்க வேண்டும் -**

**அம்மா அப்பா சொன்ன பேச்சை கேட்க வேண்டும்**

**காலையிலே எழுந்திடவே பழக வேண்டும்**

**கடவுளையே எந்நாளும் வணங்க வேண்டும்**

**கல்வி கற்கப் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும்**

**கருத்துடனே பாடங்களைப் படிக்க வேண்டும்**



- செவிமடுத்த பாடலை கைகளைத் தட்டி மகிழ்வுடன் பாடச் செய்யுங்கள்.
- மாணவர் நடிப்பதுடன் ஒருங்கிணைந்து செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- பாடலில் பொருளை மாணவரிடம் வினவுங்கள். அவர்கள் விடைகளைப் பாராட்டுங்கள்.

படிமுறை 3

- பங்கு ஆலயத்தில் கொடியேற்றும் தினம் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள். மாணவர் கருத்துக்களைப் பாராட்டுங்கள்.
- மாணவர் செயல்நூலில் தரப்பட்டுள்ள பங்கு ஆலயத்தில கொடியேற்றும் சந்தர்ப்பம் அடங்கிய படத்தை அவதானிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதில் அடங்கியுள்ள பந்தியை உரத்து வாசிப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- பங்கு ஆலயத்தில் கொடியேற்றம் இடம்பெறுவதன் நோக்கம் பற்றி மாணவர்களுக்கு விளக்கம் அளியுங்கள்.
- அதன் வாயிலாக மாணவர் மத்தியில் காணப்படும் சிறந்த பண்புகளை இனங்காணச் செய்யுங்கள். உதா: மகிழ்ச்சி, சமாதானம், பகிர்தல், கருணை, ஒற்றுமை போன்ற இப்பண்புகள் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களைக் கொண்டு கொடிகளை ஆக்குங்கள். அவற்றில் நற்பண்புகளை எழுதச் செய்யுங்கள்.
- தனது கொடியை உயர்த்தி அதில் உள்ள பண்பை அனைவருக்கும் கேட்கும்படி சத்தமாகக் கூறச்செய்யுங்கள்.
- அமைதியாக வந்து அக்கொடிகளைக் கம்பத்தில் இணைத்து விடுங்கள்.

**மாணவர் செயல்நூல் தொடர்பான அறிவுறுத்தல்**

- பாடலை அர்த்தத்துடன் பாடச் செய்யுங்கள்.
- குடும்பத்தில் அனைவரும் ஒற்றுமையாக வேலை செய்கின்ற படத்தைப் பார்த்து சில வாக்கியங்களைக் கூறச் செய்யுங்கள்.
- கொடிமரம் ஏற்றுகின்ற படத்தைப் பார்த்து அதில் உள்ள பந்தியை வாசிக்கச் செய்யுங்கள்.
- படத்தை நிறந்தீட்டச் செய்யுங்கள்.

**கணிப்பீடு**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 8.2 தமது சுற்றுச் சூழலைச் சுத்தம் செய்வதில் பங்கேற்பார். | 8.2.2 | ஆக்க பூர்வமாக கருத்து க்களை முன்வை ப்பார். | ஆக்க பூர்வமாக கருத்துக்களை ஓரளவு முன்வைப்பார். | ஆக்க பூர்வமாக கருத்துக்களை உதவியுடன் முன்வைப்பார். | ஆக்கபூர்வமாக கருத்துக்களை முன்வைக்க இடர்படுவார். |
| 9.1 கதைகள் பாடல்கள் வாயிலாக இயற்கையின் பெறுமதியை இனங்காண்-பார். | 9.1.3 | ஒத்துழை ப்புடன் செயற்படுதல் தொடர்பாக கருத்துக் கூறுவார். | ஒத்துழைப்புடன் செயற்படுதல் தொடர்பாக ஓரளவு கருத்துக் கூறுவார். | ஒத்துழைப்புடன் செயற்படுதல் தொடர்பாக பிற உதவியுடன் கருத்துக் கூறுவார். | ஒத்துழைப்புடன் செயற்படுதல் தொடர்பாக கருத்துக் கூற இடர்படுவார். |

உள்ளடக்கம்

மூன்றாம் தவணை

1 - பாவம் நீக்கிய வெள்ளப்பெருக்கு

2 - இறைவனை நேசித்த தந்தை

3 - நாமும் இறை மக்கள்

4 - விசுவாசத்தின் தாய்

5 - பெத்லகேமும் கிறிஸ்து பிறப்பும்

6 - புனித நிக்கலஸ்

7 - நத்தார் கீதங்கள்

8 - மறைவிளக்கம் அளித்த இறைமகன்

# 1

எண்ணக்கரு – நடத்தை விருத்தி

## பாவம் நீக்கிய வெள்ளப் பெருக்கு

புதிய படைப்பில் நோவாவை உதாரணமாகக் கொண்டு இறைவனுக்குப் பணிந்து, அவரை அன்பு செய்து தினமும் இறைவனை நன்றியுடன் துதிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 2. மறை வல்லுநர்கள்/ தோற்று விப்பாளர்கள் தொடர்பான கதைகள் அடிப்படையில் நடத்தை விருத்திக்குப் பொருத்தமான விசேட குணாதிசயங்களை இனங்காண்பார். | சமயக் கதைகள் | 2.1 சமயக் கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 சமயக் கதைகளுக்குச் செவிமடுத்தல் |
| | பரலோகத் தந்தையின் குணாதிசயங்கள் | 2.3 சமயக் கதைகளின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட முன் மாதிரிகளைக் கூறுவார். | 2.3.1 உதாரணங்களைக் கூறுதல் |

**கற்றல் வளங்கள்:**

- இணையதளத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்ட நோவாவின் கதை
- கதையை முன்வைப்பதற்கான பொருத்தமான கட்புல செவிப்புல சாதனங்கள்
- பயன்படுத்துவதற்கான பெட்டி, காட்போட், கத்திரிக்கோல், பசை
- பாடல் புத்தகம், (நன்றி சொல்லும் நாவை எனக்குத் தாருமே) பாடல் அடங்கிய ஒலி நாடா
- உருவங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான பல்வகையான தாவர இலைகள், பசை
- திருவிவிலியம் தொடக்க நூல் (7: 1 - 24)
- பெரிய கப்பல் உருவப் படம் அடங்கிய சுவரொட்டி
- கப்பலின் மேற்புறத்தில் ஒட்டுவதற்கு மரத்தூள், வர்ணங்கள்
- பாடல்கள் அடங்கிய பதாகைகள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை**

**படிமுறை 1**

- இணையத் தளத்தில் தமிழ் மொழியில் 'திருவிவிலியக் கதைகள்' (You Tube) என உள்பிரவேசித்து, 'நோவா மற்றும் நோவா வெள்ளப்பெருக்கு' என்பதைத் தெரிவு செய்யுங்கள்.
- அக்கதையை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துவதற்காக பொருத்தமான கட்புல செவிப்புல ஊடகங்களைத் தெரிவு செய்துகொள்ளுங்கள்.
- கதையை கட்புல செவிப்புல ஊடகங்களைப் பயன்படுத்திக் காட்சிப்படுத்துவதற்காக ஏற்ற இடத்தைத் தெரிவு செய்யுங்கள்.
- எல்லா மாணவர்களையும் அமைதியாக அமரும்படி கூறுங்கள்.
- ஆயத்தம் செய்து கொண்ட 'நோவாவும் வெள்ளப்பெருக்கும்' எனும் கதையை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.
- எல்லா மாணவர்களும் சரியாகக் கேட்பதையும் தெளிவாகப் பார்ப்பதையும் பரிசீலித்து உறுதிப் படுத்துங்கள்.
- இக்கதையை அனைத்து மாணவர்களும் காண்பதற்கு ஏற்றவாறு இருக்கையில் அமரச் செய்யுங்கள்.
- மாணவர்கள் பார்த்த கதையைத் தெளிவாக விளங்கிக் கொண்டனரா என்பதை அறிவதற்கு சில வினாக்களை வினவுங்கள்.
- அவ்விடயங்கள் பற்றிக் கலந்துரையாடிக் கதையை மாணவர்களுக்கு மேலும் தெளிவு படுத்துங்கள்.
- செயல்நூலில் உள்ள பாடத்தை வாசிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்து அவர்களுக்கு உதவி வழங்குங்கள்.

**படிமுறை 2**

- கதையைப் பார்த்து முடிந்த பின்னர் மாணவரை மீண்டும் வகுப்பறைக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- ஆயத்தம் செய்துகொண்ட பின்வரும் வினாக்களை மாணவரிடம் முன்வையுங்கள்.
    1. கதையின் பெயர் என்ன?
    2. பெரிய கப்பலைச் செய்தவர் யார்?
    3. கப்பலைச் செய்யுமாறு நோவாவிடம் கூறியது யார்?
    4. இறைவன் பெரும் வெள்ளப்பெருக்கிலிருந்து நோவாவைக் காப்பாற்றியது ஏன்?
    5. இறைவன் கப்பலின் உள்ளே எவற்றை வைக்குமாறு கூறினார்?
    6. வெள்ளப்பெருக்கில் இருந்து நோவாவுடன் காப்பாற்றப்பட்டவர்கள் யார்?
- இவ்வாறு வினாக்களின் ஊடாகப் பெற்றுக்கொண்ட அறிவை உறுதிப்படுத்துங்கள். அதன் வாயிலாக இறைவனின் அன்பு வெளிப்பட்ட விதத்தை இலகுவான முறையில் விளக்கிக் கூறுங்கள்.

- இறையன்பு மிகவும் மேன்மையானது என்பதை நிச்சயப்படுத்திக் கூறுங்கள்.

**படிமுறை 3**

- முன்னரே அறிவித்தவாறு மாணவர்கள் எடுத்து வந்த சாதனங்களை ஏற்றவாறு கையாளுங்கள்.
- பயன்படுத்தும் பெட்டிகள், காட்போட் அட்டை ஆகியவற்றில் பொருத்தமான பொருட்களைத் தெரிந்து நோவாவின் கப்பலை உருவாக்கச் செய்யுங்கள்.
- புதிய நிர்மாணங்களை ஆக்கும் ஆற்றலை மேலோங்கச் செய்யுங்கள்.
- மாணவர்கள் எடுத்து வந்த தாவர இலைகளையும் வர்ணங்களையும் பயன்படுத்தி உயிரினங்களின் உருவங்களை ஆக்குமாறு ஆலோசனை வழங்குங்கள். செயல்நூலில் தரப்பட்டுள்ள சித்திரங்களைப் போலவே மாணவர் ஆக்கங்களையும் செயல்நூலில் ஒட்டுமாறு கூறுங்கள்.
- அனைத்து மாணவர்களினது ஆக்கங்களையும் பாராட்டுங்கள்.
- பாடநூலில் செயற்பாடு 2 இல் ‘நோவா மற்றும் வெள்ளப்பெருக்கு’ எனும் சித்திரத்தை வரைந்து நிறந்தீட்டுமாறு கூறுங்கள்.
- ஒரு பெரிய கப்பல் படம் அடங்கிய சித்திரத்தை மரத்தூள் கொண்டு நிரப்பி அழகாக நிறந்தீட்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- இயலுமாயின் நோவாவின் கப்பல் மற்றும் உயிரினங்களைக் குழுவாக நிர்மாணிப்பதற்கு வழிகாட்டுங்கள்.

**படிமுறை 4**

- நோவாவைப் போலவே மாணவர்கள் செய்யக்கூடிய நற்செயல்களைக் கேட்டறியுங்கள்.
- மாணவர்கள் சொல்லிய விடைகளை அறிவிப்புப் பலகையில் எழுதுங்கள்.
- நோவா இறைவனுக்கு நன்றி சொன்னது போன்று நாமும் இறைவனுக்கு நன்றி கூறுவோம் என மாணவர்களிடம் கூறுங்கள்.
- பின்வரும் பாடலை மாணவர்களுடன் சேர்ந்து பாடுங்கள்.

நன்றி சொல்லும் நாவை எனக்குத் தாருமே

நல்ல இயேசு சுவாமி என் நாவில் வாருமே

நன்றியோடு வாழும் வாழ்வைத் தாருமே

நல்ல இயேசு சுவாமி என் வாழ்வில் வாருமே

**மாணவர் செயல்நூலுக்கான ஆலோசனை:**

- செயற்பாடு 01
  - o நோவாவின் கப்பலை முறையாக நிறந்தீட்டுவதற்கு அறிவுறுத்துங்கள்.
- செயற்பாடு 02
  - o தாவர இலைகளைக் கொண்டு உயிரினங்களின் உருவத்தை ஆக்குவதற்கு வழிகாட்டுங்கள்.
- செயற்பாடு 03
  - o மாணவர்கள் செய்யக்கூடிய நற்செயல்களைக் கேட்டு, அவற்றை எழுதுமாறு கூறுங்கள்.

கணிப்பீடு

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | | **பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார்** | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.1 சமயக் கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 | நோவாவின் நடத்தையைச் செவிமடுத்து நன்கு விடை கூறுவார். | நோவாவின் நடத்தையை ஓரளவு செவிமடுத்து விடை கூறுவார். | நோவாவின் நடத்தையைச் செவிமடுத்து பிறர் உதவியோடு விடை கூறுவார். | நோவாவின் நடத்தையைச் செவிமடுத்து விடை கூறுவதற்கு இடர்படுவார். |
| 2.3 சமயக் கதைகளில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகளைக் கூறுவார். | 2.3.1 | நோவாவின் கதையில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகளை முன்வைப்பார். | நோவாவின் கதையில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகளை ஓரளவாக முன்வைப்பார். | நோவாவின் கதையில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகளை பிறர் உதவியுடன் முன்வைப்பார். | நோவாவின் கதையில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகளை முன் வைப்பதற்கு இடர்படுவார். |

# 2

எண்ணக்கரு - நடத்தை விருத்தி

## இறைவனை அன்பு செய்த தந்தை

ஆபிரகாமின் வாழ்வில் மேலோங்கிக் காணப்படும் இறைவன் மீது கொண்ட அதீத விசுவாசத்தையும் கீழ்ப்படிவையும் மாதிரியாகக் கொண்டு தமது நடத்தையை மேம்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 2. மறை வல்லுநர்கள்/ தோற்றுவிப்பாளர்கள் தொடர்பான கதைகள் மற்றும் விவிலியத்தில் அடங்கியுள்ள நடத்தை விருத்திக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங்காண்பார். | சமயக் கதைகள் | 2.2 சமயக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு மறை வல்லுநர்களின் விசேட பண்புகளைக் கூறுவார். | 2.2.1 விசேட பண்புகளைக் கூறுதல் |
| | விசேட பண்புகள் | 2.4 விவிலிய கதைகளையும் பாடல்களையும் செவிமடுத்து தாளத்துடன் இசைப்பார். | 2.4.2 தாளத்துடன் பாடுதல் |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம் (தொடக்கநூல் 12: 1-5)
- ‘உன் சிறகுகள் நிழலில்’ பக்திப் பாடல்
- பாடல் முழுமையாக அடங்கிய பதாகை
- நிறப் பென்சில்கள்
- அட்டவணை (செபம் செய்தமையைக் குறிப்பிட்ட அனைத்து மாணவர்கள் பெயர்களும் அடங்கியது)
- மாணவர் எண்ணிக்கைக்கேற்ப நட்சத்திரங்கள்
- ஆபிரகாம் பற்றிக் கூறுகின்ற காணொளி அல்லது youtube
- செபம் அடங்கிய பதாகை
- ஆபிரகாம் மற்றும் ஈசாக் படங்கள் கொண்ட பதாகை (அதில் ‘ஈசாக் போலவே கீழ்ப்படிவோம்’ என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்)

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

படிமுறை 1

- 'உன் சிறகுகள் நிழலில்' என்ற பாடல் அடங்கிய பதாகையைக் காட்சிப்படுத்துங்கள். அதிலுள்ள சொற்களை விளக்கத்துடன் வாசியுங்கள். அதன் பொருளை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

| உன் சிறகுகள் நிழலில் எந்நாளும் |
| --- |
| என்னை அரவணைப்பாய் இறைவா |

- பாடலைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- பின்னர் பாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- அங்க அசைவுடன் பாடலின் பொருளை வெளிக்காட்டுங்கள்.பின்னர் மாணவர்களை அங்க அசைவுடன் பாடச் செய்யுங்கள்.

படிமுறை 2

- இணைய தளத்தில் (you tube) தமிழ்மொழியில் 'திருவிவிலிய கதைகள்' என உள் பிரவேசியுங்கள். பின் 'ஆபிரகாம்' என தெரிவு செய்யுங்கள். (ஆபிரகாம் பற்றிய காணொளி அல்லது படங்களைப் பார்ப்பதற்கு ஆவன செய்யுங்கள்)
- திருவிவிலியத்தில் (தொடக்க நூல் 12:1-5) அடங்கியுள்ள கதைகளின் சாராம்சத்தை சுவையான முறையில் இரசனையுடன் முன்வைப்பதற்கு வழிகாட்டுங்கள்.
- கதையின் வடிவில் உள்ள பின்வரும் விடயங்களைத் தெளிவுபடுத்துங்கள்.
- ஆபிரகாமிடம் காணப்பட்ட விசுவாசத்தின் குணாதிசயங்களை விபரித்துக் கூறுங்கள்.
- ஆபிரகாம் தொடர்பான பின்வரும் விடயங்களை மீண்டும் நினைவுபடுத்துங்கள்.

இறைவன் ஆபிரகாமை விசேட விதமாகத் தெரிவு செய்தமை

விசுவாசத்தின் தந்தை ஆபிரகாம்

இறைவனுக்குக் கீழ்ப்படிந்து இடம் பெயர்ந்து சென்றமை

ஆபிரகாமின் மனைவி சாரா

ஆபிரகாமின் மகன் ஈசாக்
ஈசாக்கிடம் காணப்பட்ட கீழ்ப்படியும் தன்மை

படிமுறை 3

- நமது விசுவாசத்தை அதிகரிப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என மாணவரிடம் கேட்ட-றியுங்கள்.
- செபிக்க வேண்டும் என்பதை மாணவர் கருத்துகளின் மூலம் பெற்றுக் கொள்ளுங்கள். ஆபிரகாமிடம் காணப்பட்ட விசுவாசத்தை மீண்டும் வலியுறுத்திக் கூறுங்கள்.
- செபம் அடங்கிய இப்பதாகையைக் காட்சிப்படுத்துங்கள்.

- “அன்பின் இறைவா, எமக்கு விசுவாசம் எனும் கொடையை அளித்தருளும்.” என்று பதாகையில் அடங்கியுள்ள வாக்கியத்தைத் தெளிவாக விளக்கிக் கூறுங்கள்.
- எல்லா மாணவர்களுடனும் இணைந்து விசுவாசத்துடனும் பக்தியுடனும் இந்த செபத்தைச் சொல்லுங்கள்.
- இந்த செபத்தை நன்கு நினைவில் வைத்துச் சொல்லக்கூடிய மாணவரை அவதானியுங்கள். அவர்களை முன்னால் அழைத்து செபத்தைக் கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதன் பின்னர் முழு வகுப்பு மாணவர்களும் இச்செபத்தை சரியான முறையில் அமர்ந்து, சொல்வதற்கு வழிப்படுத்துங்கள். மாணவர்கள் அனைவரையும் பாராட்டுங்கள்.

படிமுறை 4

- கீழ்ப்படிதல் என்பது கிறிஸ்தவ பண்பு என்பதை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- ஆபிரகாம் இறைவனுக்குக் கீழ்ப்படிந்த சந்தர்ப்பத்தை மீண்டும் மாணவர்களுக்கு நினைவு-படுத்துங்கள்.
- பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் கீழ்ப்படிந்து நடந்த சந்தர்ப்பம் தொடர்பாக உரையாடுங்கள்.
- பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் பணிந்து நடப்பதால் வாழ்க்கையில் வெற்றி பெறமுடியும் என்பதை மாணவர்களுக்குத் தெளிவாக விளக்கிக் கூறுங்கள்.
- ‘உன் நாமம் சொல்லச் சொல்ல’பாடல் அடங்கிய பதாகையைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்களுடன் இணைந்து பக்தியோடு மகிழ்ச்சியுடன் கைகளைத் தட்டியவாறு பாடலைப் பாடச் செய்யுங்கள்.
- வீட்டில் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் விதத்தை உள்ளடக்கியுள்ள இச்செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- ‘ஈசாக்கைப் போல கீழ்ப்படிவோம்’ எனும் கூற்று அடங்கிய பதாகையைக் காட்சிப்படுத்துங்கள். பின்னர் மாணவர்கள் ஊடாக இப்பதாகையைப் பூர்த்தி செய்யுங்கள்.

**ஈசாக்கைப் போல் கீழ்ப்படிவோம்**

| மாணவர் பெயர் | வீட்டில் | பாடசாலையில் | ஆலயத்தில் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

- மாணவர்கள் வீட்டில், பாடசாலையில் மற்றும் ஆலயத்தில் கீழ்ப்படிந்து நடந்த சந்தர்ப்பங்களைக் கருத்திற் கொண்டு இவ்வட்டவணையில் சரி எனும் அடையாளமிடுங்கள்.

**மாணவர் செயல் நூலுக்கான ஆலோசனைகள்**

- o செயற்பாடு 1
  - o ஆபிரகாம் கதையின் அடிப்படையில் சரி, பிழை என அடையாளமிடச் செய்யுங்கள்.
- o செயற்பாடு 2
  - o ஆபிரகாமிடம் காணப்பட்ட சிறந்த குணாதிசயங்களைக் கூறும் சந்தர்ப்பங்களை விளக்கத்துடன் வாசிப்பதற்கு உதவுங்கள்.

**கணிப்பீடு**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | | **பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார்** | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.2 சமயக் கதைகளின் அடிப்ப டையில் மறை வல்லுநர் களின் விசேட பண்புகளைக் கூறுவார். | 2.2.1 | ஆபிரகாம் கதையில் அடங்கியுள்ள விசேட குணாதிசய ங்களைக் கூறுவார். | ஆபிரகாம் கதையில் அடங்கியுள்ள விசேட குணா-திசயங்களை ஓரளவு கூறுவார். | ஆபிரகாம் கதையில் அடங்கியுள்ள விசேட குணாதிச யங்களை வேறு உதவியுடன் கூறுவார். | ஆபிரகாம் கதையில் அடங்கியுள்ள விசேட குணாதிச யங்களைக் கூறுவதற்கு இடர்படுவார். |
| 2.4 படிப்பினை காவியங் களைச் செவிமடுத்துத் தாளத்துடன் பாடுவார். | 2.4.2 | பாடல்களை-த்தாளத்-துடன் பாடுவார். | பாடல் களைத் தாளத்துடன் ஓரளவு பாடுவார். | பாடல் களைத் தாளத்துடன் உதவியுடன பாடுவார். | பாடல் களைத் தாளத்துடன் பாடுவதற்கு இடர்படுவார். |

# 3

எண்ணக்கரு - ஒழுக்கம், விழுமியங்கள் மற்றும் நல்லிணக்கம்

## நாமும் இறை மக்கள்

திருமுழுக்கு எனும் அடையாளம் வாயிலாக நாம் இறைவனின் பிள்ளையானதையும் "அப்பா பிதா" என்று அவரை அழைக்க முடியும் என்பதையும் விளங்கிக் கொண்டு சிறந்த ஒரு கிறிஸ்தவ பிள்ளையாக வாழ வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 6. சமயப் பழக்க வழக்கங்களை மற்றும் வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கும் போது சரியான ஒழுங்கு முறையில் ஏற்ற அவயவங்களின் நிலைப்பாடுகளைப் பேணுவார். | சமய வழிபாட்டு முறைகள்<br><br>விதிமுறை மற்றும் அவை யவங்களின் நிலைப்பாடு | 6.2 சமயப் பழக்க வழக்கங்களின் ஒழுங்கு முறைகளைச் சரியான முறையில் கடைப்பிடிப்பார்.<br><br>6.4 சமய நடவடிக்கைகளில் உரிய வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்வார். | 6.2.1 சரியான முறையில் விதிமுறைகளைக் கடைப்பிடித்தல்<br><br>6.4.1 சரியான வார்த்தைப் பிரயோகம் இடம்பெறல் |

**கற்றல் வளங்கள்**

- திருவிவிலியம்
- 'தலைவா உனை வணங்க' பாடல் அடங்கிய இறுவட்டு மற்றும் பதாகை
- மெழுகுதிரி, தண்ணீர் பேசின், எண்ணெய் குப்பி, நடிப்புப் பாத்திரத்திற்கு ஏற்ற ஆடைகள்
- கிறிஸ்துவின் திருமுழுக்கு பற்றிய பதிவிறக்கம் செய்யப்பட்ட காணொளி /சித்திரம் / பதாகை
- நிர்மாணிக்கப்பட்ட பதாகை
- நாம் செபிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் அடங்கிய பதாகை
- 'இவர் என் அன்பார்ந்த மகன்......' என்ற கூற்று அடங்கிய பதாகை
- சித்திரம் நிர்மாணிப்பதற்கு அவசியமான இலைகள், வர்ணம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை**

**படிமுறை 1**

- ஆசிரியர் அல்லது ஒரு மாணவன் / மாணவி குருவானவர் போன்று ஆடையணிந்து வகுப்புக்கு வாருங்கள். பொம்மையொன்றைக் காட்டி, இன்று இந்த குழந்தையை இறைவனின் பிள்ளையாக மாற்றப் போகிறோம் என்று கூறுங்கள். முன்னரே ஆயத்தம் செய்தபடி பிள்ளையின் ஞானப் பெற்றோர் மற்றும் பிள்ளையின் பெற்றோர் போன்று வேடமிட்ட மாணவர்களை முன்னால் அழையுங்கள். அவர்கள் கையில் பொம்மையை வழங்குங்கள். பின்னர் மெழுகுதிரியை ஏற்றுங்கள்.
- மெழுகுதிரியை ஏற்றி தண்ணீரை ஊற்றியவாறு உரிய வாக்கியங்களைக் கூறி பொம்மைக்கு திருமுழுக்கு வழங்குங்கள்.
- பிள்ளைக்கு எண்ணெய் பூசி புனித நீரைத் தெளித்து ஆசீர்வதியுங்கள்.
- இது போலவே எல்லாக் குழந்தைகளுக்கும் திருமுழுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெளிவு படுத்துங்கள்.
- இவ்வாறு அனைவரும் இறைவனின் பிள்ளைகள் என்ற உன்னதமான நிலையை அடைந்தோம் எனவும் அதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் விளக்கிக் கூறுங்கள்.
- இறைவனை 'அப்பா பிதாவே' என்று அழைக்கும் உரிமை கிடைத்தது என்பதை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.
- இறைவனின் பிள்ளைகளாக எம்மை மாற்றிய இறைவனுக்கு நன்றி கூறும் சிறிய செபம் ஒன்றைச் சொல்லுங்கள்.
- நீங்கள் இப்போது இறைவனின் பிள்ளைகள் எனவும் அவரை 'அப்பா பிதா' என்று அழைக்க முடியும் என்பதையும் விளக்கி, பிள்ளைகளைச் செபம் செய்வதற்கு வழிநடத்துங்கள்.

**படிமுறை 2**

- கிறிஸ்துவின் திருமுழுக்கு பற்றிய பதிவிறக்கம் செய்யப்பட்ட காணொளி /சித்திரம் / பதாகைகளை காட்சிப்படுத்துங்கள்.
- திருவிவிலியத்தில் லூக்கா நற்செய்தியில் 3:21-22 அடங்கிய சம்பவத்தை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள். அதில் கிறிஸ்து இறைவனின் மகன் என்று சொல்லப்படும் பகுதி தொடர்பாக விளக்கம் அளியுங்கள்.
- இறைத்தந்தை தமது ஒரே மகன் தொடர்பாக உலகிற்கு வெளிப்படுத்திய சந்தர்ப்பத்தை மீண்டும் தெளிவுபடுத்துங்கள்.
- கிறிஸ்து திருமுழுக்கு பெற்றமையை உறுதிப்படுத்துங்கள்.

- அவ்வேளையில் வானகத் தந்தை கிறிஸ்துவைப் பற்றி வெளிப்படுத்திய வாக்கியங்களைக் கம்பீரமாகக் கூறுங்கள்.
- ‘இவர் எனது அன்பார்ந்த மகன்” என்ற அழகிய வாக்கியத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- இன்று உங்களையும் அவர் பெயர் சொல்லி அழைப்பார் எனவும் எனவே அவரை நாம் அன்பு செய்ய வேண்டும் எனவும் கூறுங்கள்.

படிமுறை 3

- மாணவர்களை அரைவட்டமாக நிற்பதற்கு வழிப்படுத்துங்கள். பாடல் அடங்கிய பதாகையைக் காட்சிப்படுத்துங்கள்.
- பாடலைச் செவிமடுத்தவாறு அதில் அடங்கியுள்ள சொற்களை அவதானிக்கச் செய்யுங்கள்.
- அனைவரும் மகிழ்வுடன் பாடலை அங்க அசைவுடன் பாடுங்கள்.
- சயங்வழிபாட்டின் போது அவயவங்களின் சரியான நிலைப்பாடு, பொற்பிரயோகம் தொடர்பாக மாணவர்களை அறிவுறுத்துங்கள்.

படிமுறை 4

- செயற்பாட்டு நூலில் உள்ள 1,2,3 ஆகிய செயற்பாடுகளைச் செய்வதற்கு மாணவருக்கு ஆலோசனை வழங்குங்கள்.
- தமது ஞானப் பெற்றோர் பற்றிய விபரங்களைத் தேடியறிந்து குறித்துக் கொள்ளச் செய்யுங்கள்.
- ’அப்பா பிதாவே’ என்று இறைவனை அழைப்பதற்குப் பழக்கப் படுத்துங்கள்.
- இறைவனின் பிள்ளை என்ற வகையில் செய்ய வேண்டிய செயல்கள் அடங்கிய சித்திரமொன்றை ஆக்குவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- அவ்வாறு நிர்மாணித்த ஆக்கத்தை ஆக்கங்களுக்கான பலகையில் காட்சிப்படுத்துங்கள்.
- நாம் எத்தகைய சந்தர்ப்பங்களில் செபம் செய்ய வேண்டும் என்பது பற்றிய மாணவர் கருத்துக்களைக் கேட்டு ஒழுங்குமுறையில் எழுதுங்கள்.

    உதாரணம்:
    - காலையில் எழுந்தவுடன்
    - சுகயீனம் ஏற்படும் போது
    - பாடசாலை செல்வதற்கு முன்னர்

- செபம் செய்தமையைக் குறிக்கும் அட்டவணையைக் காட்சிப்படுத்துங்கள்.
- வகுப்பறையில் செபம் செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் தொடர்பாக அவ்வட்டவணையில் உள்ள நிரலில் ஒவ்வொரு மாணவனும் நட்சத்திரத்தை ஒட்டவேண்டும் என அறிவுரை வழங்குங்கள்.

- எப்போதும் இறைவனுக்கு நன்றி கூறு வேண்டும் என்பதை விளக்குங்கள்.

| | **தினம் 1** | **தினம் 2** | **தினம் 3** | **தினம் 4** | **தினம் 5** | **தினம் 6** | **தினம் 7** |
|---|---|---|---|---|---|---|---|
| 1. காலையில் எழுந்தவுடன் | | | | | | | |
| 2. இரவு நித்திரரைக்கு முன் | | | | | | | |
| 3. பாடசாலை செல்வதற்கு முன் | | | | | | | |
| 4. கற்றல் செயற்பாட்டிற்கு முன் | | | | | | | |
| 5. உணவு உண்பதற்கு முன் உணவு உண்ட பின் | | | | | | | |

- நல்லதொரு பிள்ளை என்றவாறு முதியோருக்கு உதவும் முறையைச் சித்திரமாக வரைவதற்கு ஆலோசனைக் கூறுங்கள்.

**மாணவர் செயல் நூலுக்கான ஆலோசனைகள்**

- செயற்பாடு 1
    - பொருத்தமான வர்ணங்களைக் கொண்டு சித்திரத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.
    - செயற்பாடு 4 இற்கு ஆலோசனை வழங்கி உதவுங்கள்.

**கணிப்பீடு**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 6.2 சமய நடவடிக்கைகளில் ஈடுபடும் போது சரியான வழிபாட்டு முறையைக் கடைப்பிடிப்பார். | 6.2.1 | சமய நடவடிக்கைகளில் ஈடுபடும்போது சரியான வழிபாட்டு முறையைக்-கடைப்பிடிப்பார். | சமய நடவடிக்கைகளில் ஈடுபடும்போது சரியான வழிபாட்டு முறையை ஓரளவு கடைப்பிடிப்பார் | சமய நடவடி-க்கைகளில் ஈடுபடும் போது சரியான வழிபாட்டு முறையை உதவியுடன்-கடைப் பிடிப்பார் | சமய நடவடி-க்கைகளில் ஈடுபடும்போது சரியான வழிபாட்டு முறையைக்-கடைப்பிடிப்ப-தில் இடர்படுவார். |
| 6.4 சமய நடவடி-க்கைகளில் பொரு-த்தமான சொற்களைப் பயன்படுத்-துவார். | 6.4.1 | செபிக்கும் போது சரியான சொற்களைப் பிரயோகிப்பார். | செபிக்கும் போது ஓரளவு சரியான சொற்களைப் பிரயோகிப்பார். | செபிக்கும் போது பிறர் உதவியுடன் சரியான சொற்களைப் பிரயோ கிப்பார். | செபிக்கும் போது சரியான சொற்களைப் பிரயோ கிப்பதில் இடர்படுவார். |

# 4

எண்ணக்கரு - ஒழுக்கம் விழுமியங்கள் மற்றும் நல்லிணக்கம்

## விசுவாசத்தின் தாய்

“அருள்நிறை மரியே” எனும் செபத்தின் பின்னணியை அறிந்து கொண்டு மரியன்னையின் உதவியை வேண்டி சரியாகவும் அர்த்தமுள்ளவாறும் செபிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 1. நடத்தை விருத்திக்கு ஏற்ற பிரதான சமய விதிமுறைகள், பழக்க வழக்கங்கள், பேச்சுமொழி, சமயக் குறியீடுகள் மற்றும் சமய நெறி என்ற அடிப்படையில் சமய எண்ணக்கருவை இனங்காண்பார். | வழிபாட்டுமுறை, பழக்க வழக்கம், ஒழுக்கம் மற்றும் நல்லிணக்கம் | 1.4 சமய நெறியை இனங்கண்டு பின்பற்றுவார். | 1.2.1 சமயம் சார்ந்த நெறியை இனங்காணல்.<br>1.4.2 சமய நெறியைப் பின்பற்றுதல் |

**கற்றல் வளங்கள்**

- திருவிவிலியம் (லுக்கா 1:28, 2:42)
- ‘அருள் நிறை மரியே’ செபம் எழுதப்பட்ட பதாகை
- தேவ அன்னையின் உருவம் / விளக்கு / பூமாலை
- மரியன்னைக்கு மங்களம் சொல்லும் நிகழ்வைக் காட்சிப்படுத்துவதற்கு ஏற்ற ஆடையணிகள்
- மரியன்னைக்கு மங்களம் சொல்லும் காட்சி அடங்கிய பதிவிறக்கம் செய்யப்பட்ட திரைப்படம்
- ‘வந்தோம் உம்’மைந்தர் கூடி’ பாடல் அடங்கிய இறுவட்டு / youtube
- ‘மாதாவே துணை நீரே’ பாடல் அடங்கிய இறுவட்டு
- ‘மாதாவே சரணம் உந்தன் பாதாரம் புவிக்காதாரம்’ பாடல் அடங்கிய இறுவட்டு
- செபமாலை
- வானதூதன் உருவை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொருட்கள்
- தேவ அன்னையின் உருவத்தை நிறந்தீட்டுவதற்கு அவசியமான வர்ணம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை**

**படிமுறை 1**

- 'வந்தோம் உம் மைந்தர்' பாடல் அடங்கிய இறுவட்டைச் செவிமடுப்பதற்குப் பொருத்தமான சுற்றாடலுக்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.
- பாடலில் அடங்கியுள்ள மரியன்னையின் குணங்கள் தொடர்பாக விளக்கிக் கூறுங்கள்.
- இசைக்கப்பட்ட பாடலைக் கேட்டவாறு மாணவர்கள் இணைந்து பாடச் செய்யுங்கள்.
- பக்தியோடு நடனமாடியபடி பாடலை மீண்டும் பாடச் செய்யுங்கள்.
- லூக்கா 1:28 பகுதியை மாணவருக்குத் தெளிவாகப் பொருள் விளங்குமாறு வாசியுங்கள்.

| |
|---|
| அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார். பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர். (லூக்.1:28) |

- அதில் பிரதிபலிக்கும் செய்தியைக் கதையைப் போன்று மாணவருக்கு தெளிவுபடுத்துங்கள்.
- முன்னரே ஆயத்தம் செய்தவாறு மரியன்னைக்கு மங்களம் சொன்ன நிகழ்வை நடித்துக் காட்டுவதில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- மாணவர்களை அது தொடர்பாக சுமுகமான உரையாடலில் ஈடுபடுத்தி, கபிரியேல் வானதூதன் மரியன்னைக்கு வெளிப்படுத்திய அனைத்தையும் மாணவருக்குக் கூறுங்கள்.
- அதன் பின்னர் மரியன்னை எலிசபெத்திடம் கூறியவற்றைத் தெளிவாக விளக்குங்கள்.
- மங்களம் சொல்லப்பட்ட சிறப்பான சந்தர்ப்பம் பற்றி மாணவர்களுக்கு ஆழமாகத் தெளிவு படுத்துங்கள்.
- மாணவர்கள் சொல்லும் கருத்துக்களைப் பாராட்டுங்கள்.
- லூக்கா 1:42 பகுதியை மாணவர் முன்னால் தெளிவாக வாசியுங்கள்.

| | |
|---|---|
| புனித மரியாயே, இறைவனின் தாயே பாவிகளான எமக்காக இப்போதும் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும். | பெண்களுக்குள் நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர். உமது வயிற்றின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டதே. (புனித லூக்கா1:42) |

- விபரிக்கப்படும் செய்தியை ஒரு கதையைப் போன்று மாணவருக்கு முன்வையுங்கள்.
- எடுத்து வந்த ஆடையணிகளுடன் மங்களம் சொன்ன நிகழ்வை நடித்துக் காட்டுவதற்கு ஏற்ற பின்னணியை உருவாக்குங்கள்.

**படிமுறை 2**

- தேவ அன்னைக்கு மங்களம் கூறிய நிகழ்வு அடங்கிய திரைப்படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- மாணவர்களது நடிப்பையும் இறைவார்த்தை வெளிப்பாட்டையும் ஒப்பீடு செய்யுங்கள்.

- எடுத்து வந்த மரியன்னையின் உருவச்சிலையை ஏற்ற இடத்தில் கௌரவமான முறையில் வைப்பதற்கு வழிகாட்டுங்கள்.
- மாணவர்கள் கொண்டு வந்த மலர்களையும் பூமாலையையும் மாதா சரூபத்தின் முன் வைத்து மரியாதை செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- முன்னர் கூறிய மங்களம் கூறிய நிகழ்வை மீண்டும் நினைவு படுத்துங்கள்.
- அருள்நிறை மரியே செபத்தின் இறுதிப் பகுதியை விளக்கி அதனை அறிவுறுத்துங்கள்.
- மரியன்னை எமக்காகப் பரிந்து பேசுபவர் என்பதை இச்செபத்தின் ஊடாக மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- மரியன்னைக்கு மரியாதை செய்வோம். அவரை வணங்குவதில்லை என்பதை மாணவர்கள் மனதில் பதியச் செய்யுங்கள்.
- எல்லா மாணவர்களும் மாதா சரூபத்திற்கு முன்னால் அமைதியாக சரியான முறையில் அமர்ந்து ‘அருள்நிறை மரியே’ செபத்தைச் சொல்வதற்கு வழிகாட்டுங்கள்.
- சொல்வதற்கு இடர்படுகின்ற மாணவரை அவதானித்து அவர்களை இச்செபத்தைத் தனித்தனியாக சொல்வதற்கு ஊக்கப்படுத்துங்கள்.
- மாணவர்களுடன் இணைந்து செபமாலை வழிபாட்டில் ஈடுபடுங்கள்.
- மாதாவே துணை நீரே'' என்ற பாடலைப் பாடி இவ்வழிபாட்டை நிறைவு செய்யுங்கள்.

**படிமுறை 3**

- இறைமகன் இயேசுவின் தாய் மரியாள் எனவும் அவரை நாம் விசேட விதமாக மரியாதை செய்கிறோம் என்பதைத் தெளிவு படுத்துங்கள்.
- இயேசுவின் தாய் மரியாளிடம் காணப்பட்ட விசேட பண்புகளை விளக்கிக் கூறுங்கள்.
- வைகாசி மாதம் அவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட மாதம் என்பதையும் ஐப்பசி மாதம் அவருக்கு விசேட மரியாதை செலுத்தும் மாதம் என்பதையும் எடுத்துக் கூறுங்கள்.
- தேவமாதாவை முன்மாதிரியாகக் கொள்வதற்கும் அவரை நோக்கிச் செல்லும் பயணத்தில் ஈடுபடுவதற்கும் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**மாணவர் செயல்நூலுக்கான ஆலோசனைகள்**

- செயற்பாடு 1
    - தேவ அன்னையின் உருவப்படத்தை வர்ணம் தீட்டி நிறைவு செய்யுங்கள்.
- செயற்பாடு 2
    - சரியான முறையில் செபிப்பதற்கு அறிவுறுத்துங்கள்.

- செயற்பாடு 3 இல் அடங்கியுள்ள விடைகளைத் தெரிவு செய்வதற்கு உதவுங்கள்.
- சரியான பாதையைத் தெரிந்து பயணம் செய்யுமாறு மாணவருக்கு ஆலோசனை கூறுங்கள்.

**கணிப்பீடு**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 1.3 சமய நெறியை இனங் கண்டு கொண்டு கடைப்பிடிப்பார்.<br><br>1.4 சமய நெறியில் இருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய எடுத்துக் காட்டுகளை முன் வைப்பார். | 1.4.1 | மரியாளுக்கு மங்களம் கூறியபோது கூறிய வார்த்தை களை இனங்கண்டு கூறுவார். | மரியாளுக்கு மங்களம் கூறிய போது கூறியவார்த்தைகளை இனங்கண்டு ஓரளவு கூறுவார். | மரியாளுக்கு மங்களம் கூறியபோது கூறிய வார்த்தை களை இனங்கண்டு பிறர் உதவியுடன் கூறுவார். | மரியாளுக்கு மங்களம் கூறியபோது கூறிய வார்த்தை களை இனங் கண்டுகூற இடர்படுவார். |
| | 1.4.2 | அருள் நிறை மரியே என்ற செபத்தை உரிய முறையில் செபிப்பார். | அருள் நிறை மரியே என்ற செபத்தை உரிய முறையில் ஓரளவு செபிப்பார் | அருள் நிறை மரியே என்ற செபத்தை உரிய முறையில் பிறர் உதவியுடன் செபிப்பார் | அருள் நிறை மரியே என்ற செபத்தை உரிய முறையில் செபிப்பதற்கு இடர்படுவார். |

5

எண்ணக்கரு - சமூக, கலாசார புரிந்துணர்வு

# பெத்லகேமும் கிறிஸ்து பிறப்பும்

சமாதான தூதுவராம் கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய விபரங்களை முன்வைத்து நத்தார் விழாவைக் கொண்டாடுவதற்கு ஆயத்தம் செய்யவேண்டுமென்பது இதன் நோக்கமாகும்.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 4. சமய கலாசார விழாக்களில் பங்குபற்றி அனுபவங்களைப் பெறுவார். | விழாக்களும் வைபவங்களும் | 4.1 விசேட சமய வைபவங்களில் செயலூக்கத்துடன் பங்கு பற்றுவார். | 4.1.1 செயலூக்கத்-துடன் பங்குபற்றல் |
| | | | 4.2.1 வினைத்தி-றனுடன் பங்குபற்றல் |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம் (புனித லூக்கா 1: 26-38)
- நத்தார் குழுப் பாடல்கள் அடங்கிய இறுவட்டு
- கிறிஸ்தவ பாடல் புத்தகம்
- நிறங்கள், வர்ணக் கடதாசி
- நத்தார் மரம் அடங்கிய சித்திரத்தில் ஒட்டுவதற்கான பொருட்கள்
- நடிப்புக்கு அவசியமான ஆடையணிகள்
- பிறருடன் பகிர்ந்து கொள்வதற்கு அவசியமான பொருட்கள்
- மாட்டுக் குடில் அமைப்பதற்கு அவசியமான பொருட்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படிமுறை 1**

- ‘தூய நகராம் பெத்லகேமில்’ பாடலைச் செவிமடுப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏற்கனவே ஆயத்தம் செய்தபடி பொருத்தமான அழகிய ஆடையணிந்து நத்தார் விழாக் கொண்டாட்டத்தில் ஈடுபடுவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- தாம் ஏற்கும் பாத்திரத்திற்கு ஏற்ற நடிப்பை முன்வைப்பதற்கு அவகாசம் வழங்குங்கள்.
- கீழே பெயர் குறிப்பிட்டவர்களின் பாத்திரங்களை மேலோங்கச் செய்யுங்கள்.

○ மரியன்னை / யோசேப்பு /இடையர்கள் / வானதூதர் / ஞானிகள் / மந்தை

- நடிப்பைப் பார்த்த மாணவர்கள் தமது கருத்தைக் கூறுவதற்கு வாய்ப்பு வழங்குங்கள்
- மாணவர்கள் கருத்துக்களைப் பாராட்டுங்கள்.
- மாட்டுக் குடில் ஒன்றை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

படிமுறை 2

- புனித லூக்கா 1:26-38 வரையிலான பகுதியை மாணவர் செவிமடுக்கும் வண்ணம் உரத்து வாசியுங்கள்.
- குழந்தை இயேசு பெத்லகேமில் மாட்டுக் குடிலில் பிறந்தார் என்பதையும் மரியன்னை மற்றும் யோசேப்பு ஆகியோரைப் பற்றிய சிறப்பான விடயங்களையும் மாணவர்களுக்குத் தெளிவாக விளக்கிக் கூறுங்கள்.
- குழந்தை இயேசுவின் பிறப்பு மார்கழி மாதம் 25ஆந் திகதி கொண்டாடப்படுகின்றது என்பதை மாணவர்களுக்குத் தெளிவு படுத்துங்கள்.
- குழந்தை இயேசுவின் பிறப்பு தொடர்பாக அறிவித்த விசேட நபர்கள் பற்றி மாணவர்களுக்குக் கூறுங்கள். (இடையர்கள் / ஞானிகள்)
- மாணவர்களின் கருத்துக்களில் பின்வரும் விடயங்களை மேலோங்கச் செய்யுங்கள்.
    - கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்ந்த இடம் பெத்லகேம் நகரம்
    - குழந்தை இயேசு மாட்டுக் குடிலில் பிறந்தார். ஆகிய விடயங்கள்
- நத்தார் மரம் / மாட்டுக்குடில் /வால் நட்சத்திரம் ஆகியவை பற்றி விளக்கம் அளியுங்கள்.
- மாட்டுத் தொழுவத்தில் கிடத்தப்பட்ட குழந்தை இயேசு இறை தந்தையின் மகன் என்பதை மாணவர்களுக்குத் தெளிவு படுத்துங்கள்.

படிமுறை 3

- நத்தார் தினத்தன்று திருப்பலியில் குடும்பமாகப் பங்குபற்ற வேண்டும் என்பதைக் கூறுங்கள்.
- நாங்கள் இப்போது திருப்பலிக்கு அமைதியாக செல்வோம். காணிக்கை கொண்டு செல்வோம், உரிய நேரத்தில் செல்வோம், மன்னிப்பு வேண்டுவோம், பாடல் பாடுவோம், இறைவனை வணங்குவோம்.
- அர்த்தமுள்ள விதமாகப் பக்தியுடன் திருப்பலியில் இணைய வேண்டும் என்பதை விளக்குங்கள்.
- நத்தார் விழாவின் உண்மையான அர்த்தம் பகிர்ந்து கொள்ளல், மகிழ்ச்சி, அன்பு என்பதை மாணவர்களுக்கு நினைவூட்டுங்கள்.
- மாணவர்கள் அனுபவங்களை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- நத்தார் மகிழ்ச்சிக்காக செய்யக்கூடிய செயல்கள் தொடர்பாகத் திறந்த கலந்துரையாடல் ஒன்றை வகுப்பறையில் நிகழ்த்துங்கள்.
- நத்தார் தினத்தில் பகிர்ந்து கொள்ளல் எனும் செய்தியினை வகுப்பறையில் வழங்குவதற்குப் பொருத்தமான நபர் ஒருவரை அழைத்துக் கொள்ளுங்கள்.
- நத்தார் தினத்தில் பகிர்ந்து கொள்வதற்கு எடுத்து வந்த பொருட்களைப் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள் அல்லது பாடசாலை அதிபர் ஊடாகப் பகிர்ந்து கொடுங்கள்.
- பின்வரும் வாக்கியங்களைக் காட்சிப்படுத்தி மாணவருடன் இணைந்து உரத்து

வாசியுங்கள்.

நத்தார் தினத்தில் ஆலயத்திற்கு செல்வோம்
ஏழைகளுக்கு உதவி செய்வோம்
அனைவரோடும் அன்பைப் பகிர்வோம்
நத்தாரை மகிழ்வுடன் கொண்டாடுவோம்

**மாணவர் செயல்நூலுக்கான ஆலோசனைகள்**

**செயற்பாடு 1**

- நத்தார் பற்றிய புதிரைப் பூர்த்தி செய்வதற்கு வழிப்படுத்துங்கள். பாடநூலில் உள்ள பகுதியை விளக்கத்துடன் வாசியுங்கள்.

**செயற்பாடு 2**

- நத்தார் காலத்தில் செய்யக்கூடிய நற்செயல்கள் தொடர்பாகச் சிறிய பந்தியொன்றை எழுதச் செய்யுங்கள்.

**செயற்பாடு 3**

- மாணவர் கொண்டுவந்த பொருட்கள் உதவியுடன் செயல்நூலில் உள்ள நத்தார் மரத்தை அலங்கரியுங்கள்.
- நத்தார் மரத்தின் அடியில் உள்ள பரிசுப் பொதிகளை நிறந்தீட்டுங்கள்.
- நத்தார் தினத்தை அர்த்தமுள்ளவகையில் கொண்டாடுவதற்கு எடுத்து வந்த பொருட்களைப் பகிர்ந்து கொள்வதற்கு மாணவர்களுக்கு அறிவுரை வழங்குங்கள்.

**கணிப்பீடு**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | பாண்டித்தியம் அடைந்துள்ளார் | | பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார் | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| **4.1** சமய நிகழ்வுக-ளில் செய லூக்கத்-துடன் பங்கு-பற்றுவார். | 4.1.1. | நத்தார் தினத்தன்று திருப்பலியில் வினைத் திறனுடன் பங்கு கொளவார். | நத்தார் தினத்தன்று திருப்பலியில் ஓரளவு வினைத் திறனுடன் பங்கு கொள்வார். | நத்தார் தினத்தன்று திருப்பலியில் உதவியோடு வினைத்தி-றனுடன் பங்கு கொள்வார். | நத்தார் தினத்தன்று திருப்ப லியில் வினைத் திறனுடன் பங்குகெ-ாள்வதற்கு இடர்படுவார். |
| | 4.1.1 | நத்தார் தினத்தன்று ஏழைகளுடன் பகிர்ந்து கொண்ட பொருட்கள் பற்றிக் கூறுவார். | நத்தார் தினத்தன்று ஏழைகளுடன் பகிர்ந்து கொண்ட பொருட்கள் பற்றி ஓரளவு கூறுவார். | நத்தார் தினத்தன்று ஏழைகளுடன் பகிர்ந்து கொண்ட பொருட்கள் பற்றிப் பிறர் உதவியுடன் கூறுவார். | நத்தார் தினத்தன்று ஏழைகளுடன் பகிர்ந்து கொண்ட பொருட்கள் பற்றிக் கூறுவதற்கு இடர்படுவார். |

# 6

எண்ணக்கரு - சமூக, கலாசார புரிந்துணர்வு

## புனித நிக்கலஸ்

கிறிஸ்துவோடு பயணித்த பல புனிதர்கள் மத்தியில் நத்தார் தினத்தை உண்மையான அர்த்தமுள்ள தினமாக மாற்றியமைத்தவர் புனித நிக்கலஸ். அவரைப் பின்பற்றி நாமும் நத்தார் மகிழ்ச்சி அனுபவத்தைப் பெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 4. சமயம் மற்றும் கலாசார விழாக்களில் பங்குபற்றி அனுபவங்களைப் பெறுவார். | புனிதர்களின் சரிதைகள் | 4.3 விசேட சமய அல்லது கலாசார விழாவொன்றை மாதிரியாகக் காட்டுவார். | 4.3.2 கருத்துக்களை முன்வைத்தல். |

**கற்றல் வளங்கள்:**

- பாடல் அடங்கிய இறுவட்டு
- புனித நிக்கலஸ் போல் வேடமிடுவதற்கு அவசியமான ஆடை அணிகள்
- பிறருடன் பகிர்ந்து கொள்வதற்கு ஏற்ற பொருட்கள்
- புனித நிக்கலஸ் தொப்பி மற்றும் அதில் பெயரை எழுதி ஒட்டுவதற்கான கடதாசிக் கீலங்கள்
- ஏழைகளுடன் பகிர்ந்து கொள்வதற்கான பொருட்கள்
- புனித நிக்கலஸ் அடிகளின் உருவப்படம்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படிமுறை 1**

- புனித நிக்கலஸ் பதிவிறக்கம் செய்யப்பட்ட திரைப்படத்தைக் காட்சிப்படுத்தி அவரே உண்மையான நத்தார் தாத்தா என்பதை அறிமுகம் செய்யுங்கள்.
- புனித நிக்கலஸ் என்பவர் இன்றைய வியாபார உலகில் நாம் காணும் கேலிச்சித்திர பாத்திரம் அல்ல என்பதைத் தெளிவு படுத்துங்கள்.
- அத்தகைய மேன்மையான புனிதரின் உயர்ந்த பண்புகளைத் திரைப்படத்தின் உதவியோடு விளக்கிக் கூறுங்கள்.
- கொண்டு வந்த உணவுகளை பகிர்ந்து கொள்ளுங்கள்.
- நத்தார் பாடலை பாடுங்கள்.
- நத்தார் தாத்தாவின் கைகளால் எல்லா மாணவர்களுக்கும் பரிசுகளை வழங்கி அவர்களை மகிழ்ச்சியடையச் செய்யுங்கள்.

- உண்மையான நத்தார் தாத்தாவைப் பற்றி விளக்கிக் கூறி அவரது உருவத்தை வரைந்து நிறந்தீட்டுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏழைகள், ஆதரவற்றோர் ஆகியோரைத் தேடியறிந்து, அவர்களுடன் பகிர்ந்து கொண்டு நத்தார் தினத்தைக் கொண்டாடும்போதுதான், குழந்தை இயேசு எமது இல்லத்தில் பிறக்கிறார் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள்.

படிமுறை 2

- புனித நிக்கலஸ் அடிகளின் உண்மையான தோற்றம் கொண்ட படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- இதுவரை நீங்கள் அறிந்திருந்த நத்தார் தாத்தா இப்புனிதர் அல்ல என்பதற்கான காரணத்தைக் கேட்டறியுங்கள்.
- எவருக்கும் தெரியாமல் வறிய மக்களுக்குப் பொருட்களைப் பகிர்ந்தளித்த இப்புனிதர் எந்த சந்தர்ப்பத்திலும் கேலிக்குரியவர் அல்ல எனவும் அவரை அவமரியாதை செய்வது தவறான செயல் என்பதையும் கூறுங்கள்.
- புனித நிக்கலஸ் அடிகளின் சிறந்த நடத்தை பற்றி மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.
- நத்தார் தினத்தின் உண்மையான அர்த்தம் என்னவென்பதை எடுத்துக்காட்டித் தமது செல்வம் பொருள் அனைத்தையும் ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்த விதத்தை ஒரு கதையுருவில் மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கக்கூடிய பொருட்களை மாணவர்களிடம் வினவுங்கள். அவற்றைப் பெயர் குறியுங்கள்.
- ஏழைகள், ஆதரவற்றோருக்கு செபிப்பதன் வாயிலாக உதவி செய்யலாம் எனவும் அதன் முக்கியத்துவம் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.

படிமுறை 3

- செயற்பாட்டு நூலில் அடங்கியுள்ள பாடலைத் தெளிவான விளக்கத்துடன் வாசியுங்கள்.
- இறுவட்டுகளின் உதவியுடன் தாளத்துடன் பாடவும் நடனமாடவும் மாணவரை வழிப்படுத்துங்கள்.
- நத்தார் தாத்தாவின் தொப்பியை எடுங்கள். உண்மையான நத்தாரைக் கொண்டாடுவதற்குத் தாம் செபிக்கவேண்டிய நபர்களின் பெயரை எழுதித் தொப்பியில் வையுங்கள். அத்தொப்பிகளை அனைவரும் காட்சிப்படுத்துங்கள்.
- வகுப்பு மாணவர் அனைவரும் ஒன்று கூடி நத்தார் தினத்தைக் கொண்டாட இயலாத நிலையில் இருப்பவர்களுக்காகச் செபியுங்கள்.
- இயலுமானவரையில் எப்போதும் மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

**மாணவர் செயற்பாட்டுக்கான ஆலோசனைகள்**

**செயற்பாடு 1**

- பாடலை அர்த்தமுடன் உரத்துப் பாடியவாறு அங்க அசைவில் ஈடுபடுத்துங்கள்.

**செயற்பாடு 2**

- ஏழைகளுடன் பகிர்ந்து கொள்ளும் பொருட்களைப் பலூனில் எழுத வழிகாட்டுங்கள்.
- தரப்பட்ட சொற்களை இணைத்து முழு வாக்கியமாகப் பையில் எழுதுங்கள்.

**கணிப்பீடு**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | | **பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார்** | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| சமயம் மற்றும் கலாசார விழாக்களில் பங்குபற்றி அனுபவங் களைப் பெறுவார். | 4.3.2 | நத்தார் விழாவில் பங்கு பற்றிக் கருத்துக் களை முன் வைப்பார். | நத்தார் விழாவில் பங்குபற்றிக் கருத்துக்களை ஓரளவு முன் வைப்பார். | நத்தார் விழாவில் பங்குபற்றிக் கருத்துக்க ளைப் பிற உதவியுடன் முன் வைப்பார். | நத்தார் விழாவில் பங்கு பற்றிக் கருத்துக் களை முன் வைப்பதற்கு இடர்படுவார். |

# 7

எண்ணக்கரு - சமூக, கலாசார புரிந்துணர்வு

## நத்தார் பாடல்கள்

நத்தார் பக்திப் பாடல்களை விளக்கத்துடன் பாடி, நத்தார் விழாவின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு கிறிஸ்தவ கலாசாரத்தின் முக்கியத்துவத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 4. சமயம் மற்றும் கலாசார விழாக்களில் பங்குபற்றி அனுபவங்களைப் பெறுவார். | விழாக்கள் மற்றும் கொண்டாட்டம் | 4.1 விசேட சமய நிகழ்வுகளில் செயலூக்கத்துடன் பங்குபற்றுவார். | 4.1.1 செயலூக்கத்துடன் பங்குபற்றுதல். |

**கற்றல் வளங்கள் :**

- கரோல் பாடல்கள் அடங்கிய இறுவட்டு
- மாட்டுக்குடில் ஒன்றை நிர்மாணிப்பதற்குத் தேவையான பொருட்கள்
- நத்தார் வாழ்த்து மடல் தயாரிப்பதற்கு அவசியமான பொருட்கள்
- வர்ணங்கள்
- ஈர்க்கிலில் செய்யப்பட்டு உள்ளே வைக்கப்பட்ட நட்சத்திரம்
- கரோல் பாடல்கள் பாடுவதற்கான இடத்தைத் தயார் செய்வதற்கு அவசியமான அலங்காரம், ஆடையணிகள்
- நத்தார் பாடல் எழுதப்பட்ட பதாகை

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படிமுறை 1**

- கரோல் குழுப் பாடல்கள் அடங்கிய காணொளியைக் காட்சிப்படுத்துங்கள்.
- அப்பாடல்களைக் கண்களை மூடியவாறு செவிமடுப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- கைகளைத் தட்டியபடி அங்க அசைவுகளுடன் மகிழ்வோடு பாடச்செய்யுங்கள்.
- பாடுகின்ற பாடல்களில் அடங்கியுள்ள கருத்துக்களை மேலோங்கச் செய்யுங்கள்.
- கிறிஸ்துவின் பிறப்பைத் திருவிழாவாகக் கொண்டாட வேண்டும் என்பதைக் கூறுங்கள்.
- கரோல் பாடல்களைப் பாடுகின்ற முறைமையைத் தெளிவாக விளக்கிக் கூறுங்கள்.

படிமுறை 2

- எல்லா மாணவரையும் நத்தார் பாடல் ஒன்றைப் பாடச்செய்யுங்கள்.
- பாடல்களின் வாயிலாக நத்தார் விழாவின் சிறப்பு மேலோங்குவதை எடுத்துக் காட்டுங்கள்.
- 'தூய நகராம்' பாடலில் அடங்கியுள்ள கிறிஸ்து பிறப்பின் கதையை மாணவர்களுக்கு நினைவு படுத்துங்கள்.
- பாடலைப் பக்தியுடன் பாடி, அதன் பொருளைப் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- ஒரு நத்தார் பாடலின் பொருளை மாணவருக்கு விளக்கி அப்பாடலை மாணவருடன் இணைந்து பாடுங்கள்.
- ஈர்க்கில் செய்யப்பட்ட நட்சத்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு குழுவாக இணைந்து பாடச்செய்யுங்கள்.
- பாடல் பாடிய அனைத்துக் குழுக்களையும் மதிப்பீடு செய்யுங்கள்.
- இயலுமாயின் பலவிதமான ஆடைகளைப் பயன்படுத்திக் கரோல் குழுக்களை ஆக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு குறிப்பிட்ட பாடல் என்றவாறு வழங்குங்கள்.
- கரோல் பாடல் குழுக்களிடையே போட்டியை நடாத்தி திறமையான குழுவைப் பாராட்டுங்கள்.
- இசையில் ஆற்றல் உள்ள மாணவர்களுக்கு அவர்களது திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அனைத்து மாணவர்களையும் பாராட்டுங்கள்.

படிமுறை 3

- ஏற்கனவே கூறியபடி நத்தார் வாழ்த்து மடல் தயாரிப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்குங்கள். மடலை ஆக்கபூர்வமாகத் தயார் செய்வதற்கு அவசியமான பொருட்களை எடுத்துவந்த மாணவர்களது கருத்தைக் கேட்டறியுங்கள்.
- வாழ்த்து மடல் தயாரிப்பதற்கு அவசியமான பொருட்கள் இல்லாத மாணவர்களுக்குக் கடதாசி, வர்ணம், பசை என்பவற்றை வழங்குங்கள்.
- வாழ்த்து மடலை யாருக்கு அனுப்புவது என்பதைக் கேட்டு அதனைக் குறித்துக் கொள்ளுங்கள். செயற்பாட்டின் இறுதியில் வகுப்பை மீண்டும் சுத்தம் செய்யுங்கள்.
- மாணவர்களின் வாழ்த்து மடல்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- தாய்க்கும் தந்தைக்கும் வாழ்த்து மடல் அனுப்ப வேண்டியது அவசியம் என்பதைக் கூறுங்கள்.

### செயல்நூலுக்கான ஆலோசனை

✓ **செயற்பாடு 1** 1
   - தாளத்துடன் பாடச் செய்யுங்கள் / இசையும் அசைவும்

**செயற்பாடு 2**
   - தரப்பட்ட இலக்கத்திற்கேற்ப வர்ணம் தீட்டச் செய்யுங்கள்.

**செயற்பாடு 3**
   - நட்சத்திரத்தை சரியாக நிறந்தீட்டச் செய்யுங்கள்.

**கணிப்பீடு செய்தல்**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 4.1 விசேட சமயம் விழாக்களில் செயலூக்கத்துடன் பங்கு பற்றுவார். | 4.1.1 | கரோல் பக்திப்பாடல்களை வினைத்திறனுடன் பாடுவார். | கரோல் பக்திப் பாடல்களை ஓரளவு வினைத் திறனுடன் பாடுவார். | கரோல் பக்திப் பாடல்களைப் பிறர் உதவியோடு வினைத் திறனுடன் பாடுவார். | கரோல் பக்திப் பாடல்களை வினைத் திறனுடன் பாடுவதற்கு இடர்படுவார். |

# 8

எண்ணக்கரு - ஒழுக்கம், விழுமியங்கள் நல்லிணக்கம்

## மறை விளக்கம் அளித்த இறைமகன்

இறைமகன் இயேசு ஆலயத்தில் அர்ப்பணிக்கப்பட்டதையும் அவர் தேவாலயத்தில் மறைவிளக்கம் அளித்த முறைமையையும் தெளிவாக விளக்கி, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆலயத்துடன் எவ்வாறு தொடர்புபட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பதை விபரமாகக் கூறுவது இதன் நோக்கமாகும்.

| கற்றற் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியதி |
|---|---|---|---|
| 7 நன்னடத்தையுள்ள ஒரு பிள்ளை என்றவகையில் பின்பற்ற வேண்டிய நற்பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பார். | கிறிஸ்தவ பண்புகள்<br><br>நற்பழக்க வழக்கங்கள் | 7.1 நன்னடத்தையுள்ள ஒரு பிள்ளை என்ற வகையில் பின்பற்ற வேண்டிய சிறந்த பண்புகளை இனங்காண்பார்.<br><br>7.3 நன்னடத்தையுள்ள ஒரு பிள்ளை என்றவாறு செயற்படுவார். | 7.1.1 சரியான முறையில் இனங்காணல்.<br><br>7.3.1 சரியான நடத்தை |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம் (புனித லூ.2:22)
- நடிப்புக்கு அவசியமான ஆடையணிகள்
- வாழ்க வாழ்க மரியே பாடல் அடங்கிய இறுவட்டு / youtube
- வர்ணங்கள், பசை
- நற்குணங்கள் எழுதப்பட்ட பதாகை
- கிறிஸ்து இயேசுவின் குழந்தைப் பருவம் பற்றிய பதிவிறக்கம் செய்யப்பட்ட திரைப்படம்
- அன்னாள் மற்றும் சிமியோன் ஆகியோரின் உருவப் படங்கள்

**கற்றல் கற்பித்தல் செயன்முறை:**

**படிமுறை 1**

- பதிவிறக்கம் செய்யப்பட்ட கிறிஸ்துவின் குழந்தைப் பருவம் பற்றிய விசேட சந்தர்ப்பங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- முன்னரே அறிவித்தவாறு குழந்தை இயேசு தேவாலயத்தில் அரப்பணிக்கப்பட்ட நிகழ்வை நடித்துக் காட்டச் செய்யுங்கள்.
- நடித்துக் காட்டிய பாத்திரங்கள் பற்றி மாணவர் கருத்துக்களை வினவுங்கள்.

- சிமியோன் மற்றும் அன்னாள் ஆகியோரின் பாத்திரங்கள் பற்றிய விபரங்களை மாணவருக்கு விளக்குங்கள். அதற்கான படங்களை முன்வைத்து தெளிவு படுத்துங்கள்.
- லூக்கா 2:22 இல் அடங்கியுள்ள இறைவார்த்தையை ஆத்மார்த்தமாக, மரியாதையான முறையில் வாசியுங்கள்.
- இறைமகன் இயேசுவை அர்ப்பணித்த விதிமுறையை விளக்கிக் கூறி, செயற்பாட்டு நூலில் குறிப்பிட்ட பாடலைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- பாடலைப் பக்தியோடு இசையுடன் பாடுங்கள், மாணவர்களைப் பாராட்டுங்கள்.
- சிறந்த கிறிஸ்தவ பிள்ளை என்ற வகையில் அனுசரிக்க வேண்டிய பண்புகளை விளக்குங்கள்.

உதாரணம்: தமது வேலைகளை சரியாக செய்தல், சுத்தமாக இருத்தல், பிறருடன் பகிர்ந்து கொள்ளல், சுற்றாடலை மகிழ்ச்சியுடன் சுத்தம் செய்தல், கீழ்ப்படிதல் போன்றவை

**படிமுறை 2**

- முன்னரே அறிவித்தபடி, இறைமகன் இயேசு 12 வயதில் தேவாலயம் சென்ற நிகழ்வு பற்றிய நடிப்பில் ஈடுபடுத்துங்கள்.
- நடிப்பில் ஈடுபட்ட அனைத்து மாணவர்களையும் பாராட்டுங்கள்.
- முதலாம் இரண்டாம் இடம்பெற்ற திறமையான மாணவர்களைக் கைகளைத் தட்டிப் பாராட்டி ஊக்கப்படுத்துங்கள்.
- 12 வயதில் இறைமகன் இயேசு தேவாலயம் சென்ற நிகழ்வை சுவையான கதையாக முன்வையுங்கள்.
- மாணவர்களை அமைதியாக அமரச் செய்து இறைவார்த்தையை கௌரவமான முறையில் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- (லூக்கா 2:46)

**படிமுறை 3**

- நன்னடத்தையுள்ள ஒரு பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளை மாணவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்.
- முன்னைய பாடங்களில் குறிப்பிட்ட நற்பண்புகளை மீண்டும் நினைவூட்டுங்கள்.
- இத்தகைய நற்பண்புகள் தொடர்பாக அவதானம் செலுத்துவதில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
    - தூய்மையான ஒழுக்கமான உடையணிந்து ஆலயம் செல்லல்
    - ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதைத் தவிர்த்தல்
    - நேரத்துக்கு முன்னரே ஆலயம் செல்லல்
    - திருப்பலி நிறைவடையும் வரை இருத்தல்
- மேற்குறித்த விடயங்களை அடக்கிய பதாகையைக் காட்சிப்படுத்தச் செய்யுங்கள்.
- ‘நான் நன்னடத்தையுள்ள பிள்ளையாவேன்’ என்ற தலைப்பை இடுங்கள்.
- பின்னர் மாணவர் செய்த நற்செயல்களைக் கடதாசியில் எழுதி இப் பலகையில் காட்சிப்படுத்துமாறு ஆலோனை வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவனது ஆக்கத்தையும் அவதானித்துக் கணிப்பீடு செய்யுங்கள்.

**செயல்நூலுக்கான ஆலோசனை**

- ✓ **செயற்பாடு 1**
  - ஆலயத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறையைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுங்கள்.

**செயற்பாடு 2**

- இடைவெளியை நிரப்புவதற்கு அறிவுறுத்துங்கள்.
- பாலரை என்னிடத்தில் எனும் பாடலை அபிநயத்துடன் பாடச் செய்யுங்கள்.

**கணிப்பீடு செய்தல்**

| கணிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியதி இல | **பாண்டித்தியம் அடைந்துள்ளார்** | | **பாண்டித்தியத்திற்கு தொலைவில்லை உள்ளார்** | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 7.1 நன்னட-த்தையுள்ள பிள்ளை என்றவகை யில்கடை-ப்பிடிக்க வேண்டிய வழிமுறை களை இனங் காண்பார். | 7.1.1 | நன்னட-த்தையுள்ள பிள்ளை என்றவ கையில் கடைப்பிடிக்க வேண்டிய-வழிமுறை களைக் கூறுவார். | நன்னட-த்தையுள்ள பிள்ளை என்ற வகையில்-கடைப்பிடிக்க வேண்டிய-வழிமுறை களை ஓரளவு கூறுவார். | நன்னடத் தையுள்ள பிள்ளை என்றவகையில் கடைப்பிடிக்க-வேண்டிய வழிமுறைகளை உதவியுடன் கூறுவார். | நன்னட-த்தையுள்ள பிள்ளை என்ற வகையில்-கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறை களை கூறுவதற்கு இடர்படுவார |
| 7.3 நன்னடத் தையுள்ள பிள்ளை என்றவாறு நடந்து கொள்வார். | 7.3.1 | ஆலயத்தில் நன்னடத்தை யுள்ள பிள்ளை என்றவாறு நடந்து கொள்வார். | ஆலயத்தில் நன்னடத்தை யுள்ள பிள்ளை என்றவாறு ஓரளவு நடந்து கொள்வார். | ஆலயத்தில் நன்னடத்தை யுள்ள பிள்ளை என்றவாறு பிறர் உதவியுடன் நடந்து கொள்வார். | ஆலயத்-தில் நன்னட-த்தை யுள்ள பிள்ளை என்றவாறு நடந்து கொள்வதற்கு இடர்படுவார் |

**කතෝලික ධර්මය ගුරු මාර්ගෝපදේශය (දෙ)**
**1 ශ්‍රේණිය**

கத்தோலிக்க திருமறை ஆசிரியர் வழிகாட்டி (த)
தரம் 1